ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா

தமிழ்நாடு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வேளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ச. மெ. இராமசாமி.

வ்யாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி வரு வைகாசி 32உ (14—6—1931) | மலர் 7

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசுபெற்றது,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

உலகப்பிரசித்திபெற்ற உண்மையான மருந்துகள்.

காமகேசரி குளிகை.

(தங்கபஸ்பம் சேர்ந்தது)

தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இம்மாத்திரைகள் தாதுபுஷ்டியையும் தளர்ந்த நரம்புகளைக் கெட்டிபடுத்துவதிலும் பிரசித்தி பெற்ற பலவித யூனனி சரகங்களும் அசல் தங்க பஸ்பமும் சேர்த்து சாஸ்திர முறைப்படி தயார் செய்யப் பட்டது.

வயது சென்றதாலும், மிதமிஞ்சிய சம்போகத்தாலும், பலவித துர் அப்பியாசங்களாலும் இழந்து போன ஆண் தன்மையானது இம்மாத்திரைகளை சாப்பிட ஆரம்பித்தவுடன், மீண்டும் அதிகரிக்கச் செய்கிறது. பலக்குறைவு, கைகால்அசதி, சோம்பல், இடுப்புவலி, சம்போக காலத்தில் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி, தூரிதல்கலிதம், சொற்பனல் கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கும். சரீர புஷ்டியும், திரேககாந்தியும், வீரிய விருத்தியும், மிகுந்த ஆண் தன்மையும் உண்டாகும். தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி இல்லர இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். யாதொரு பத்தியமில்லை.

80 மாத்திரைகள் விலை ரூ. 10—0—0
40 மாத்திரைகள் விலை ரூ. 5—8—0

மஹா சந்தனாதித் தைலம்.

(ஓர் யோகீஸ்வரரின் அனுபவ முறை)

இத் தைலத்தில் அநேகவித பச்சிலை மூலிகைகள் சேர்ந்திருப்பதால் சரீரத்திலுள்ள உஷ்ணத்தையும் நீக்கிக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் கண்களில் உண்டாகும் பலவித வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்கிறது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் கூச்சம், கண்குத்தல் சதைவளர்தல், மேகநீர் வெள்ளெழுத்து, மண்டையிடி, ஒருத்தலை நோய், பீனிசம், காதுநோய், காதுமந்தம், சரீரத்தில் அதிக உஷ்ணத்தினால் உண்டாகும் திரேக காந்தல், இருகிருப்பு, மயக்கம், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், மூளைகொதிப்பு, நித்திரை யின்மை, தலைமயிர் உதிர்தல் முதலிய சகலவித நோய்களையும் குணம் செய்வதுடன் சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இத்தைலததை ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம் இத்தைலத்தை உபயோகித்தவர்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்து குவிகிறது. ஒரு முறை இத்தைலத்தை உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0
12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம். முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்குக் கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் 5 ரூபாய் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

அரசாங்க இஞ்சினியர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாட்சாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை.

ஆராய்ச்சி அணிகலம் என்னும் தமிழ் நூல்:

கடவுளைப்பற்றிய மதங்களின் உண்மைக்கொள்கையின் பயனான கடவுட்பேறின்பம், உலகம் பொய்யென்ற உண்மையுணர்ச்சியிலடையும் அறிவின்பம், என்ற முடிவையும் இவைகளைத் தெரிந்துகொள்வதற்குத் தோன படியாய் முன் அமைத்துள்ள சமூகக்கட்டுப்பாடுகள் அவ்வப்போதுள்ள காலத்தைப் பொறுத்ததெனவும் உலகவிவகாரங்களில் சுயநலத்தின் பொறுட்டுச் சமூக; மத; அரசியற் கொள்கைகளிற் புகுத்தப்பட்டிருக்கும் திரிபான போலி அபிப்பிராயத்தையும் மற்றும் மக்களுக்கு எத்துரைகளிலும் வேண்டற்பாலதாய் சங்கதிகள்யாவையும் பலநூற் பிரமாணங்களோடு சுருக்கவகையில் 17 அத்தியாயங்களாய்த் தொகுத்து எளிய நடையில் எழுதப்பட்டது. 125 பக்கம். 8/4 சைல் புத்தகம் ஒன்றுக்கு ரூ. 0—12—0 மதுரை புதுமண்டபம் எல்லாப்புக் ஷாப்புகளிலும் அடியிற் கண்ட என்னிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

தா. க. தாயுமான பிள்ளை
மேல்மங்கலம், வடுகபட்டி போஸ்டு.
பெரியகுளம், மதுரை.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

"சன்மார்க்கன்"

பொதுநலங் கருதி வெளிவரும்

ஓர் உயர்தரத்தமிழ் மாதப்பத்திரிகை:

கொங்கு மண்டல சமரச சன்மார்க்க சங்கத்தின் சார்பாகப் பழனியிலிருந்து ஒவ்வொரு தமிழ்மாத முதலிலும் எளிய தமிழ் நடையில் அரிய கட்டுரைப் பொருள்களுடன் வெளியிடப்படுகின்றது. உடனே சந்தாதாரர்களாகச்சேருங்கள். வருட சந்தா:—உள்நாடு ரூ. 1. வெளிநாடு 1-4-0.

ஆசிரியர்—(நாவலூற்று)
சி. சுவாமிசிவதேசம்,
'சன்மார்க்கன்' பத்திரிகாலயம், பழனி.

சுத்தகதர்! உயர்ந்தகதர்!!
நேர்த்தியான கதர்!!!

அகில இந்திய (கதர்) காங்கிரஸ் சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. எங்களிடம் கதர் சம்மந்தப்பட்ட எல்லா ரகங்களும் இருக்கின்றன. வெளிநாட்டு ஆர்டர்கள்கிரையம் முழுமையும் அனுப்பிஞல் கவனிக்கப்படும்.

தா. மு. தீ ஈ. ஸ்ரு. வே. & Co.,
கதர் ஸ்டோர்,
சென்னிமலை ரோடு (S. I. Ry.)

சித்த ரசம்.

சகலவியாதிகளுக்கும் ஏற்றது
ஒரு முறை பரீட்சியுங்கள்.
புட்டி 1க்கு ரூ. 1—0—0
பஜன் 1க்கு ரூ. 10—0—0
ஏஜண்டுகள் தேவை
அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்புக

சி. பி. சாமி, சித்தமருந்து,
செய்சாலை பழனி S. I.

ஓர் அதிர்ஷ்ட ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜ—வினல் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணெயை உபயோகியுங்கள்.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்று தர்மார்த்தமாக குறைந்த விலைக்கு வெளியிட்டு வருகிறது.)

சகோதர, சகோதரிகளே, வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கொர்ப,—வித்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து சீக்காமல் விட்டு நீடித்து நின்று மேகவாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன் சுபாலத்தில் தங்கி, சுபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, சுமரகவாய்வு, தெனரல், கொக்கிருமல், காசமாகவு ., கீல்களில் தங்கி, சூலைகளாகவும் நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, குதகடிகள், பக்கவிலா இழுப்பு குத்தல் கொர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் (வினிக்கின் பெருகும்) அனந்த வெட்டவாய்வு ரோகிகளும், 3 நேரம் சம், பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள் பாலிய தேசசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்றுவருவது பிரத்தியகூம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அரிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் பிரம்ம முடிகோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ஏழை களுக்கு ரூ. 7—0—0.

பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவும் வேண்டும்.

பிரம்மமுடி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

நிமிஷக்கணக்கில் தணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறீர்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரகணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினுல் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியபடின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணு. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

சோல் ஏஜண்டுகள்:—
தாதா & Co., 52 ஜனியப்ப நாயகன் தெரு மதராஸ்.
K. S. மேதர & Co., 234, சைனுபஜார் ரோட் மதராஸ்.
வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

சனாதன தர்ம மகாநாடு வேதமார்க்கம்.

முன் தொடர்ச்சி.

(கைவல்யம்)

வேதமார்க்கத்தையும், சிஷ்டாசாரத்தையும் அனுசரிப்பவர்களும் வேதம் அநாதி யென்று ஒப்புக்கொள்ளுகிறவர்களும் சனாதன இந்துக்களாவார்கள் என்று பார்ப்பனசபைத் தலைவர் சொல்லுகிறார். அதை சபையும் அங்கீகரிக்கிறது. நாமும் அதை ஆலோசித்துப்பார்ப்போம்.

முன் வியாசத்தில் சிஷ்டாசாரத்தையும் வேதம் அநாதியென்பதையும் சுருக்கிச்சொன்னேன். இந்த வியாசத்தில் வேத மார்க்கம் பார்ப்பனர்களிடம் எவ்வளவுதூரம் இருக்கிறதென்பதைச்சொல்லுகிறேன்.

கம்மை யெல்லாம் இந்துக்களென்று சொல்லுகிறார்கள். ஆனால் நமக்கு இந்து என்ற பெயர் எதனால் வந்ததோ அந்த இந்து என்கிற பதத்திற்கு முன்னிருந்த பொருள் இப்பொழுது போய் விட்டது. ஏனெனில் இப்பதத்திற்கு இக்காலத்தியின் அகராயிஎள்ளவரென்றே பொருள். 'ஹிந்து' என்னும் வடமொழிப்பதத்தைப் பண்டைக்காலத்துப் பாரசீகர் 'இந்து' எனச்சிதைத்து, அவ் 'இந்து' நதியின் எதிர்க்கரையிலுள்ளவர்களை யெல்லாம் இந்துக்களென்றழைத்தனர். இவ்விதமாக இப்பெயரைநாம் பெற்றவராகினும், மகமதிய அரசாட்சியிலே நாமே இப்பெயரை ஏற்றுக்கொண்டோமேனும். இப்பதத்தின் நன்மை தீமை எப்படியிருந்தாலும் அதற்கிருந்த பழைய அர்த்தம் இப்பொழுது போய்விட்டது. எனெனில் ஹிந்து நதியின் இக்கரையிலுள்ளவர்களெல்லாம் முன்போல் இப்பொழுது ஒரே மதத்தை அனுசரிக்கின்றவரல்லர். ஆகவே இப்பதத்தை பழைய இந்துக்களாயுள்ளவர்கள் விஷயத்தில் மாத்திரமன்றி மகமதியர், கிறிஸ்தவர், ஜைனர் முதலிய பிறமதஸ்தர் விஷயத்திலும் அன்வயக்கவேண்டி வருகின்றது. ஆகையால் தான் நமது நாட்டிலிருப்பவர்களெல்லாம் இந்துக்களென்றும் மதத்தைக் குறிப்பிடுகையில் இந்து முசல்மான், இந்து கிறிஸ்தவன், ஹிந்து சனாதன தருமி எனறுசொல்லுகிறார்கள். அதுபோலவே வேதமார்க்கத்தை அனுசரிப்பவர்கள் சனாதனதரும இந்துக்களென்று பார்ப்பனசாயையிலும் சொன்னார்கள். அதுவும் சரியே. வேத மதம் இந்து என்கிற பெயரை ஏற்றுக்கொண்டதேயல்லாமல் இந்துமதமென்று ஒரு மதமில்லை என்று சயமரியாதைச் சங்கம் சொல்லுவதும் சரியே. அதில் இப்பொழுது நமது கவனத்தைச் செலுத்தவேண்டுவதில்லை. வேத மார்க்கத்தையும் சிஷ்டாசாரத்தையும் அனுஷ்டிப்பவர்கள் சனாதன இந்துக்களாவார்கள் என்று சொல்லுவதை ஆலோசித்துப் பார்ப்போம்.

ஏனென்றால் வேதத்தில் பார்ப்பானனுக்குச் சுவர்க்க போகங்களையடைய யாகங்களும் மோகூத்தையடைய ஞானங்களும் சொல்லப்பட்டு அந்த பிராமணனே மேன்மையாகக் கருதி அவனுக்கு அடிமைப்பட்டு அவன் எவல் கேட்டு நடப்பதே சூத்திரர்களின் நற்கதிக்கு ஏதுவாகி சொர்க்க போகங்களையோ மோகூத்தையோ அடையும் பாத்திரதையுடைய பார்ப்பன ஜன்மம் அடுத்த பிறவியில் வருமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதையனுசரித்துத்தான் சனாதன தரும மகாநாட்டில் பிராமண ஜன்ம மேற்பட்டு அதன் பேரில் கர்மாக்கள் செய்யவேண்டுமேயன்றி பிராமண ஜன்மமில்லாமல் கர்மத்தினால் பிராமணனாவதில்லை என்கிற தீர்மானமும் பண்ணியிருக்கிறார்கள். இப் பொழுது பார்ப்பானே வேதமார்க்கத்தில் கர்மங்களை விட்டுவிட்டான். சிஷ்டாசாரமோ இல்லவேயில்லை. மற்றவர்கள் தனக்குக் கீழ்பட்டு அதனால் உண்டாகும் நன்மைகள் என்னும் நிலைத்திருக்க வேத மார்க்கத்தையும் சிஷ்டாசாரத்தையும் அனுஷ்டிப்பவர்கள் சனாதன தரும இந்துக்களென்று தீர்மானம் பண்ணுகிறார்கள். பார்ப்பனன் வேதமார்க்கத்தையும் சிஷ்டாச்சாரத்தையும் விட்டுவிட்டாலும் பார்ப்பனன் என்றும் சனாதன தரும இந்துதானும். மற்றவர்கள் பார்ப்பனர்களுக்கு அடிமைகள் என்றும், வேதமார்க்கத்தையோ, சிஷ்டாசாரத்தையோ அனுஷ்டிக்காவிட்டால் சனாதன தரும இந்துக்களல்லவாம். இதை மனிதத்தன்மையானபுத்தியோடு ஆலோசித்துப்பார்ப்பவர்கள் ஈ. வெ. இராமசாமியைப்போல இன்னும் பலரில்லையே என்று நினைப்பார்கள்.

வேதங்கள் ரிக், யசுர், சாம, அதர்வணம் என நான்கு. இந்த நான்கு வேதத்திலும் மந்திரபாகங்கள் பிராமணங்கள், உபநிஷத்துக்கள் எனமூன்று பிரிவுகளுண்டு. இதற்கு அநித்தபடி ஸ்திருக்கின். இதற்குபின் வேதப்பொருள்களை விளக்கவந்த சாஸ்திரங்கள் ஆறு. சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ் அல்லது பாடியம், நிருத்தம் அல்லது செல்லியல், ஜ்யோதிஷம் அல்லது வானசாஸ்திரம், கல்பம் அல்லது மந்திரங்களை உபயோகிக்கும் வழிபைச் சொல்லுவது. இதற்குப்பின் புராணம், இதற்குப்பின் தந்திர சாஸ்திரம், இதற்குப்பின் பல வித்வான்கள், ஆச்சாரிகள், பக்திமான்கள் முதலிய பார்ப்பனர்களால் எழுதப்பட்ட ஏதினம். இவைகள் அனேகத்தும் மதக்கிரந்தங்கள். இவைகளில் பார்ப்பனனுக்கு அனுகூலமானதெல்லாம் சனாதன தரும கிரந்தங்களான வேதங்கள்.

இவை அனேகத்தையும் விரித்தெழுதுவது கஷ்டமானதால் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய அளவிற்குச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். ஸ்தோத்திரங்களால் நிறையப்பெற்றது ரிக் வேதம். ஜாதனையோடு கூடினது யசுர்வேதம், கானத்தோடு கூடினது சாமவேதம் இந்த மூன்று வேதத்திலும் யாகம் செய்கையில் தேவதைகளை ஸ்தோத்திரம் செய்வது, யாகதேவதைகளை ஆராதனை செய்வது, யாகதேவதைகளை தானம் பண்ணுவது இவைகளைப் பற்றியே பெரும்பாகமும் சொல்லப்பட்டிருக்கிறது. தேவிஜனுக்குயாகம் செய்வதேவிசேட விசியாக விருந்ததினாலும், யாகம் செய்வதால் செய்கிறவனுக்கும், செய்விப்பவனுக்கும் சொர்க்காதி போகங்கள் வருமென்கின்ற நம்பிக்கை யிருந்தபடியாலும், யாகங்கள் அதிகமாக யாக ஆராதனை, ஸ்தோத்திரம், தானம்பாக எற்பாடுகள் இவைகளுக் அதிகமாயின. இவைகளை பெல்லாம் சேர்த்துச் சொன்னதே அதர்வண வேதமாகும். அம்மூன்று வேதங்களிலுள்ள விஷயங்களை அதர்வண வேதத்திலுமிருப்பதால்தான் வேத மூன்றென்றும், அதர்வண வேதம் பின்னால் உண்டானதென்றும் சொல்லுகிறார்கள்.

சமிதையில் யாகத்திற்குறிய மந்திரங்களும், மற்ற வைதிக கர்மங்களும் சொல்லப்படுவதால் வேதத்தின் இந்த பாகத்திற்கு மந்திரமென்று பெயர். பழைய யாகங்கள் அனுஷ்டிக்கமுடியாமல் நடவிட்டபடியால் மந்திரங்களும் விட்டுவிடப்பட்டன. பிராமணங்கள் என்ற வேதபாகமும் யாகங்கள் நடத்தப்படும் விதத்தையும், அதனால் வரும் நன்மை தீமைகளும், ஒரு கர்மத்தால் வரும் நன்மைகளையும், இன்னொரு கர்மத்தால் வரும் தீமைகளையும் சொல்லுவதாகும். இப்பொழுதோபார்ப்பனர்கள் இஷ்டமான கர்மங்களைசெய்து விதிவிலக்குகளைக் கவனியாமல் நடப்பதால் பிராமணங்களின் மார்க்கமும் தூர்ந்துவிட்டன. உபநிஷத்துக்களுக்கு ஆரண்யங்களென்றும் பெயருண்டு. ஆரண்யமென்பதற்குக் காட்டில் இயற்றப்பட்ட நூல்களென்று பெயர். யாகாதி கர்மங்களைவிட்டுத் துறவு பூண்டு, வனம் சென்று தமது காலத்தவறில் எழுந்தருளும் குருமூர்த்தியோருக்கே இவைகள் தருக்தலை யாதலால் இவைகள் குரு, சிஷ்யனுக்கு ஏகாந்தமாக வனத்தில் உபதேசம் பண்ணவேண்டுமே யொழிய லௌகீகம் நிறைந்த ஊர்களில் உபதேசம் செய்யக்கூடாதென்று சொல்லுகிறார்கள். இதைத்தான் சுருதியென்று சொல்லுவது. சுருதியென்றால் காதில் சொல்லக்கேட்பது. ரிஷிகள் கண்டு சொன்ன உண்மையென்பதும் அதுதான். கருத்தைக்கண்டறிவோன் என்கிற பெயர் ரிஷிகளுக்கு வந்ததும் அதனாலேதான். இந்து மதத்தை மேன்மேட்டார்களும் புகழ்ந்திருக்கள் என்பதும் அதுவேபாம். அத்தப் பெயரைச்சொல்லி மற்ற சமயக்கொமைகளைநிலைநாட்டக்காரணமாகவும் எடுத்துக்காட்டவும் மாதிரிச்சாக்காகவுமிருப்பதும் அதேதான். இத்துவே தத்தின் ஞானசாண்டமென்பதும் அதுதான். அத்தியாத்ம தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன வென்பதுவும் அதுவேதான். சிவபெருமானின் மூன்றாம் அறுத்து விழுந்ததும் அதை விஷ்ணு பெண்ணின் கருவியாகத் தாங்கினர். அதுவே லிங்கமும் ஆவுடையாருமாயிற்றென்று ஒரு சாஸ்திரம் சொல்லவும் அந்த இரண்டுந்தான் உன் தெற்றியில் வெள்ளை சிகப்பாக, விளங்குகிறதென்று மற்றொரு சாஸ்திரம் சொல்லவும் அதைத்தெரிந்து மேனாட்டு மேயோ புஸ்தகமெழுதவும் அதை மறுக்கவைணவ சைவத்திற்கு தத்துவார்த்தம் காட்டி அவைகளுக்குப்பிரமாணமாக நிற்பதும் அதுவே யாம். ஜமீன்தார்களோ பிரபுக்களோ நல்லவர்களாக விருந்தால் அந்த ஊரிலுள்ள ஜனங்களுக்கும் அகிரமங்களுக்கெல்லாம் ஏஜமான் நல்லவர். அவர் அப்படிச் சொல்லமாட்டார். சொல்லவுமில்லை. பக்கத்திலுள்ளவர்கள் வேலைக்கு அவர் என்ன செய்வார் என்று ஏஜமான் நல்லவர் நல்லவர் என்று சொல்லி அந்த ஊரில் ஒரு அக்கிரமமாவது குறைவதில்லையோ அதுபோல் இந்துவேதம் உயர்ந்தது, அதன் எல்லையில் நடக்கும் ஆசாரம், யஜ்ஞம், புரோஹிதம், குருபீடம் முதலிய கொமைக்கு அதென்ன செய்யுமென்று சொல்லி, மற்றவர்களின் கழுத்தில் கத்தியிருக்கும் காலுக்குத் தலையாக விளங்குவதும் அதுவேயாம். இப்பொழுதோ ஆரண்யங்கள் சர்வகலாசாலையாகவும் உபதேசம் ஆங்கிலப்பட்டமாகவும் கேட்பதுசேவுகாவிருத்தியாகவுமிருக்கிறது. பிரம்மஸ்ரீ சதாசாச்சாரி சன் கூட ஆரண்யத்தை விட்டு சுருதியை மறந்த வெள்விரதம் செய்யப்பணம் சேகரிக்கும் வழியிலும் காணிக்கை வழங்க வுள்பிடிக்கும் எற்பாட்டிலுமிருப்பதே அவர் உபதேசமாக விருக்கிறது. மற்ற பார்ப்பனர்களோ பிராமண போஜனமும் தெகூணையும் எங்கே நடக்கிறதென்று தெரிந்து கொள்ளவே காலதத்திறந்து விட்டிருக்கிறார்கள். ஆகவேவேதத்தின் முக்கியபாகமான ஆரண்யமும் பார்ப்பனர்களால் கைவிடப்பட்டு விட்டன.

யாகாதிகர்மங்களின் மூலமாக சுவர்க்கமடையலாமென்ற வேதத்தின் கர்மகாண்டமும் சகலத்தையும் துறந்து மோகூமடையவேண்டுமென்ற வேதத்தின் ஞானகாண்டமும் பார்ப்

தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க).

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

அல்லாசாமி பண்டிகை என்னும் (முகரம்) நாளும் இந்துக்களும்.

(பண்டிட், எஸ். எஸ். ஆனந்தம்)

அன்பிற் சிறந்த ஜனத்தலைவர்களே! சமயத்தலைவர்களே! முகமதியர்களின் "முகரம்" என்பதின் உண்மையும் அதின் விபரமும் நம்மவர்களில் பலர் உணராமல் அல்லாசாமி பண்டிகை என்று "பஞ்சா" என்று ஒரு கை போல் உருவஞ் செய்து—வைத்துக்கொண்டு அதைப்பூசித்து வணங்கி மக்களே மக்கள் இழிவுபடுத்திக் கேவலமாகக்கூறும்படி ஆபாசவேஷங்களைப் போட்டுக்கூச்சலும் குதூகலமுமாக ஆடிப்பாடித் தெருக்கள் தோறும் திரிகின்றார்கள்.

முகமதியர்களுக்குஇந்த "முகரம்" ஏற்பட்டதின் காரணமென்ன? முகரத்திற்கும் இந்துக்களுக்கும் சம்பந்தமென்ன? இந்துக்களே இதைக்கொண்டாடும்படி இந்துமத சாஸ்திரங்களில் எங்கேனுஞ் சொல்லுகின்றதா என்பதைக்கொஞ்சமும் அறியாதவர்களாயிருக்கின்றார்கள். இவர்களின் செய்கை உண்மை முகமதியர்கட்கும், படித்த இந்துக்களுக்கும் பெரும் வெட்கத்தையும் மனவெறுப்பையும் தருகின்றது.

இங்ஙனம் 'முகரம்' என்பது முகம்மது நபியவர்களின் பேரனாகிய "ஹுஸைன்ரலி" என்னும் வீரன் முகமதியர்கட்காக உயிர் துறந்தமை பற்றி, முகம்மதியர்கள் துக்கப்படவேண்டிய நாள். இந்நாளை வேடிக்கையும் விநோதமுமாக நமது சகோதரர்கள் கொண்டாடுவதைப்பார்க்க அறிவுடையோர் வருந்தாமலிருக்க முடியாது. 'முகரம்' நாளில் புலி, கரடி, கரிப்பூச்சு முதலிய வேஷங்கள் போட்டு அருத்தமில்லாமல் கூச்சலிட்டு கூத்தாடுவதைக்காணும் அந்நிய நாட்டார்.....ர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்.

இந்து முகமதிய மதத்தலைவர்களே! துக்கம் கொண்டாடவேண்டிய முகரம் நாளை நமது சகோதரர்களிற்பலர் கரியைப்பூசி கண்ணைக்குடித்து ஆடிப்பரிகசிப்பதை நாம் எத்தனை நாளைக்குப் பார்த்துச் சகித்துக்கொண்டிருப்பது? இதில் நமக்கு வெட்கமில்லையா? எப்போது நமது மக்கள் திருந்துவார்கள்? இந்துசகோதரர்களே! நீங்கள் கொண்டாடும் சடங்குகள், பண்டிகைகள் எதிலாவது முகம்மதியர்கள் கலக்கின்றார்களா? முகமதியரில் சிலர் அவர்கள் மார்க்கத்திற்கு விரோதமாக எங்கேயோ அருமையாக 'பஞ்சா'வை வைத்து வணங்கினாலும், இந்துக்களைப்போல் தெருத்தெருவாகக்கூச்சலிட்டு கண்ணால் பார்க்கச்சகியாத வேஷங்களிட்டு குடித்துத் திரிகின்றார்களா? இதை ஒவ்வொருவரும் நன்றாய்நினைத்துப் பாருங்கள்! இந்துக்கள் உண்மையிலேயே மூகம்மதிய வீரராகிய 'ஹுஸைன்ரலி' க்காகத்துக்கப்படுகின்றார்களென்றாவது சொல்ல முடியுமா? வேடிக்கையாகத் தங்கள் மனம் போன போக்கில் வேஷம் போட்டு ஆடிப்பாடவும், இதில் பணம் பறித்துத்தடிக்கவும் இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்து வருகிறதைத்தவிர வேறென்னவென்று சொல்ல முடியும்?

நம்நாட்டின் 'வறுமை'க்கு மதபானமே முதற்காரணமென்று தலைவர்கள் கூடுகின்றார்கள். தலைவர்களும் தொண்டர்களும் மதுவிலக்கைப்பற்றிப்பிரச்சாரஞ் செய்கின்றார்கள். செய்தென்ன பயன்? நான் இருபத்தைந்தாண்டுகளாக இச்சென்னைமாநகரைக் கவனித்து வருகிறேன். இம் முகரம்' நாளை முகமதியரல்லாதார் வருடத்திற்கு வருடம் அதிக ஆர்பாட்டமாகக் கொண்டாடுகின்றார்களேயன்றிக் குறையவில்லை. இதனால் நமது ஜனங்களின் மனோ நிலை கால்தோறும் கேவல நிலைக்குச் செல்லுகிறதென்பது விளங்கவில்லையா? பஞ்சாவை திருத்த இணைகளிலும், தெருக்களிலும் இடங்கொடுப்பவர்கள் பெருமையாலும் இந்துக்களே. அதைப்பக்தி வினயத்தோடு எடுத்து ஆவேசத்தோடு ஆடுகிறவர்களும் இந்துக்களே. பஞ்சாவிற்கு 'பாத்தியா' என்று சாம்பிராணி தூபம், கற்பூரஹாரத்தியங் காட்டி, அதன் முன் சாயம் கலந்த காடாவெல்லும் நூலை வைத்தெடுத்து அதைக் கழுத்திலும், கையிலும போட்டு அழகு பாத்துக்கொண்டு பிரார்த்தனைகள் செய்பவர்களும் இந்துக்களென்று சொல்லும் நமது சைவ வேளாளர்களே. இந்த சந்தர்ப்பத்தில் பலவித வேஷங்களைப் போட்டுக்கொண்டு தெருத்தெருவாய்க்கூச்சலிட்டு காசு வாங்கிக் குடித்து வெறித்து ஆடுபவர்களும் நமது முதலியார், பிள்ளைமார், நாயுடுமார் முதலியவர்களே. சைவம் வளர்க்கும் சைவத்தலைவர்கள் இதற்காக இது வரையில் என்ன செய்தார்கள்? சைவத் தலைவர்கள் சிலர் ஒரு மூலையிற் கூடி ஆங்கிலத்தில் மதசீர்திருத்தத்தைப்பற்றிப்பேசி தங்கள் படிப்பின் பெருமையை ஒருவருக்கொருவர் காட்டிக்கொள்வதினால் வரும்பயன்தான்னே? விவரமறியாத நமது சகோதரர்களைச் சீர் திருத்தம் செய்வதுயார்? அன்னியர்களா? அல்லது நாமா? நாம் நமது சகோதரர்களை அன்பாய் நடத்தி அவர்களுக்கு நல்ல வழிகாட்டி அவர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்ட

பகுத்தறிவு (அல்லது) கத்தோவிக்க குருவின் மரணசாஸனம்.

(மொழிபெயர்ப்பாளர் S. குருசாமி B. A.)

(காப்பிரைட்)

சென்ற வாரத்தொடர்ச்சி.

1. ஓர் நீதிக்கதை.

ஒரு பெரிய ராஜ்யம் இருக்கிறது. அதை ஒரு அரசன் ஆண்டு வருகிறான். ஆனால் அவனுடைய நடத்தையைப் பற்றி அவனது குடிகள் ஒன்றும் தெரிய முடியாதபடி அவ்வளவு குழப்பமாயிருக்கிறது. தன்னை எல்லோரும் அறியவேண்டுமென்றும், நேசிக்கவேண்டுமென்றும், கௌரவப்படுத்த வேண்டுமென்றும், கீழ்ப்படிய வேண்டுமென்றும் அவ்வரசன் விரும்புகிறான். ஆனால் அவன் தன்னைக்காட்டிக் கொள்வது மாத்திரம் கிடையாது. அவனைப்பற்றி நாம் வைத்திருக்கும் அபிப்பிராயங்களெல்லாம் சந்தேகத்திலேயே கொண்டுபோய் விடுகின்றன. இந்த அரசனது ஆணைக்குக் கீழ்ப்பட்ட குடிகள் தங்கள் கண்ணில் அகப்படாத இவ்வரசனுடைய குணம், கட்டளைகள் இவைகளைப் பற்றி அவனுடைய மந்திரிகள் என்ன சொல்லுகிறார்களோ அதைத்தவிர வேறொன்றுமே தெரிய முடியாதவர்களாயிருக்கிறார்கள். இம்மந்திரிகள் சொல்வதும் சரியாக இருப்பதுபோலவே தோன்றுகின்றன. ஏனெனில் இம்மந்திரிகளுக்கே தங்களுடைய எஜமானனைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஏனென்றால், அவனுடைய செய்கைகள் காணமுடியாதவை; அவனுடைய குணங்கள் எண்ணங்கள் முதலிய வைகளும் ஒருவராலும் அறிய முடியாதவைகளாகும். இன்னும் இந்த மந்திரிகளுக்குள்ளாகவே தங்களுடைய அரசனின் கட்டளைகளைப்பற்றி முற்றிலும் வேறுபாடான அபிப்பிராயங்களுண்டு. ராஜ்யத்தின் ஒவ்வொரு ராஜதானியிலும் வெவ்வேறு விதமாக மந்திரிகள் இக்கட்டளைகளை வெளியிடுகிறார்கள். இவர்கள் ஒருவரையொருவர் அவமதித்துக்கொண்டும், ஒருவரையொருவர் வஞ்சகர்கள் போலவும் பொய்யர்கள் போலவும் நடத்திக்கொண்டுமிருக்கிறார்கள். இவர்கள் பிரசாரம் செய்கின்ற சட்டதிட்டங்களெல்லாம் நிச்சயமற்றதாகவே இருக்கின்றன. இச்சட்டதிட்டங்கள் யாருக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அந்தக்குடி ஜனங்களுக்கே புரியாத விதமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. கண்ணுக்குத்தென்படாத இவ்வரசனுடைய சட்டங்களுக்கு வியாக்கியான கர்த்தாக்கள் வேண்டியிருக்கிறது. ஆனால் இவைகளை வியாக்யானம் பண்ணுகிறவர்களுக்குக்கும் விரோதமாகவேயிருக்கிறது. அவனுடைய நியாயத்தைப்பற்றிப் பிரமாதமாகப் புகழ்கிறார்கள்; ஆனால் அவனுடைய சரியான அர்த்தத்தைப்பற்றி அடிக்கடி சண்டைகள் நிகழ்கின்றன. இதைவிட விசேஷம் என்னவென்றால், இவர்களில் ஒருவர்தான் பெரும்பாலும் அதிகச்சுதந்திரமுள்ளவர்களாகவே இவைகளினுடைய சரியான அர்த்தத்தைப்பற்றி அடிக்கடி சண்டைகள் நிகழ்கின்றன. இதைவிட விசேஷம் என்னவென்றால், இவர்களில் ஒருவருக்கொருவர் அபிப்பிராயத்திலேயே முரண்படுகிறார்கள். இவர்களுடைய மறைவான அரசனைப்பற்றிச் சொல்லும் ஒவ்வொரு விஷயமும் முன்னுக்குப்பின் முரணாகவே இருக்கிறது. ஒவ்வொரு வார்த்தையும் அந்த கூடாணத்திலேயே ஆட்சேபிக்கக்கூடியதாகவே இருக்கிறது.

இவ்வரசன் சொம்பவும் நல்லவன் என்று சொல்லப்படுகிறான்; ஆனாலும் அவனுடைய ஆக்கினைகளைப்பற்றி புகார் சொல்லாத ஒரு மனிதன் கூட கிடையாது. அவன் அளவு கடந்த அறிவாளி என்றுசொல்லப்படுகிறது; ஆனால் அவனுடைய ஆட்சியில் ஒவ்வொன்றும் நியாயத்திற்கும் பகுத்தறிவுக்கும் விரோதமாகவே நடப்பதாகக் கூறப்படுகிறார்கள். அவன் ஒவ்வொன்றையும் பார்த்துக்கொண்டிருப்பதாக உறுதி கூறுகிறார்கள்; ஆனால் அவனால் ஒன்றையும் பரிகாரம் செய்ய முடியவில்லை. அவன் ஒழுங்கை நிலைநாட்டுகிறவனென்று சொல்லப்படுகிறது; ஆனால் அவனுடைய ராஜ்யத்தில் ஒவ்வொன்றும் குழப்பமாகவும் தாறுமாறாகவுமே இருக்கிறது. சகலரும் அவனால் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது; ஆனால் அவனுடைய எண்ணப்படி ஒன்றும் நடைபெறுமலே போகிறது. ஒவ்வொன்றையும் அவன் தீர்க்கதரிசனமாய்க்காண்பதாகக்கூறுகிறார்கள்; ஆனால் அவனது தீர்க்கதரிசனம் எதையும் தடுக்க முடியவில்லை. அவனையாராவது கோபப்படுத்தினால், சீக்கிரம் பொறுமையை இழந்துவிடுகிறான்; ஆனால் அதே சமயத்தில் எவ்வாறுவரும் அவன் பேரில் கோபப் படும்படியாகவே நடந்துகொள்ளுகிறான். அவன் செய்துள்ள நால்வகைக் குற்றமற்ற தன்மைக்காக அவனுடைய அறிவை மெச்சுகிறார்கள்; ஆனால் அவனுடைய நால்வகை முழுதும் குற்றங்களே நிறைந்திருக்கின்றன. உண்டாக்குவதும் அழிப்பதும் தான் செய்ததைத் திருத்துவதும் இவைகளே சதா அவனது வேலைகளாயிருக்கின்றன. ஆகவே தன்னுடைய வேலையில் சற்றும் திருப்தியில்லாதவனாகவே காணப்படுகிறான். அவன் செய்யும் சகல தொழில்களிலும் தனது சொந்த சீர்த்திருத்தமே நாடுகிறான்; ஆனால் அதிலும் அவன் வெற்றி பெறுவதாகத் தெரியவில்லை. தனது குடி ஜனங்களின் சௌக்கியத்தைக்கருதியே அவன் வேலை செய்வதாகச்சொல்லப்படுகிறது; ஆனால் அக்குடி ஜனங்களில் பெரும்பாலோருக்கு உயிரைக் காப்பாற்றுவதற்கான உணவுகூட கிடைப்பதில்லை. அவன் யாரை ஆதரிக்கவேண்டுமென்று விரும்புகிறானோ அவர்கள் தான் அதிகத்துன்பத்தை அநுபவிக்கிறார்கள். அவனுடைய குடி ஜனங்களெல்லாம் எப்போதும் பார்த்தாலும் தங்கள் எஜமானன் மேல் அதிருப்தியோடவே இருக்கிறார்கள். ஆனால், அவனுடைய பெருமையைப் புகழுவதிலும், அவனுடைய அபிவைப்பாராட்டுவதிலும், அவனுடையநல்லெண்ணத்திற்காகவணங்குவதிலும், அவனுடைய நடுநிலைமைக்காகபயப்படுவதிலும், மாத்திரம் குறைவில்லை. அவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாவிட்டாலும், அவைகளைப் பக்தியோடு பாராட்டுவதில் மாத்திரம் குறைவதில்லை. இப்படிப்பட்ட ஒரு அரசனையும், மந்திரியையும் சட்டதிட்டத்தையும், ஆட்சிமுறையும்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? இதுகாறும் சொல்லப்பட்ட ராஜ்யம் தான் இவ்வுலகம்; அதன் அரசன் என்பது தான் கடவுள்; அவனுடைய மந்திரிகள் என்பவர்கள்தான் குருமார்கள்; அவனுடைய குடி ஜனங்கள்தான் மனிதர்கள்.

திருமதி C. D. நாயகம் அம்மாள் அவர்களாலும் திரு. C. D. நாயகம் அவர்களாலும் நடத்திவைக்கப்பட்ட சீர்திருத்தத்திருமணம்.



உட்கார்ந்திருப்பவர்கள்:—

1. திருமதி C. D. நாயகம். 3. மணமகன் திரு. சுபரமணியம்
2. மணமகள் திருமதி தாயம்மாள். 4. திரு. C. D. நாயகர்.

2 & 3 மதம் என்பது என்ன?

உலகில் ஒரு சாஸ்திரம் இருக்கிறது. ஒருவருக்கும் ஒன்றும்

(தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க)

நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண் மேற் சென்றிடித்தற் பொருட்டு. (குறள்)

(உடுமலை கனகராஜன்.)

அன்பர்களே,

நம் இந்தியர்களுடைய மனப்பான்மையை உற்று நோக்கும் பொழுது நமக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது ஒரு பெண்ணிலுடைய புருஷன் அதிக காமலாவாக இறந்துபோகும் தறுவாயிலிருக்கிறான். இப்பொழுதோ, பிறகோ உயிர் போய்விடும் என்று நினைக்கக்கூடிய தருணமாக விருக்கிறது. அச்சமயம் மரண சமயத்தில் நம் இந்தியர்களுடைய வழக்கம்போல் "எனக்கு என்ன சொல்லுகிறீர்கள், எனக்கு என்ன சொல்லுறீர்கள்" என்று அந்த பெண்ணைவள் புருஷனைக் கேட்டாள். அந்த நோயாளியாயுள்ள புருஷன் தனக்கு பணம் வரவேண்டிய இடங்களை சொல்ல ஆரம்பித்தான். "சுப்பைய செட்டி 8000ரூ.தரவேண்டும். ராமசாமிக்கவுண்டர் 5000 ரூ. தரவேண்டும்."என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, அழுதுகொண்டிருந்த இப்பெண்ணைவள் "இன்னும் சொல்லுங்கள், இன்னும் சொல்லுங்கள்" என்று வெகு உருக்கமாக கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தாள். நிற்சமயத்தில் அங்கு பல கொந்தக்காரர்கள் கூடியிருந்தார்கள் என்பதையும் தெரிவித்து விடுகிறேன். பிறகு அந்த நோயாளி தனக்கு வரவேண்டிய வைகளை எல்லாம் சொல்லிவிட்டு, தான் கொடுக்கவேண்டிய வகைகளை சொல்ல ஆரம்பித்த உடனே, இந்தத்திருட்டுப்பெண்ணைவள், அருகிலுள்ளவர்கள் கேட்டுகொண்டால் அந்தக்கடன்களை தான் கொடுத்துத் தீர்க்கவேண்டியதாய் நேரிடும் என்று பயந்து, தன் நோயாளி கணவனைப்பார்த்து "காய்ச்சல் வெறியில் உளராதீர்களே, ஐயோ, ஐயோ காய்ச்சல் வெறியில் உளருகிறீர்களே" என்று பலமாக சத்தம் செய்து அழுது கொண்டு பாசாங்கு செய்தாளாம். முதலில் வரவு கலத்தைச் சொல்லி வரும்வரை இன்னும் சொல்லுங்களென்று வெகு கவனமாக கேட்டுக் கொண்டிருந்து, பிறகு செலவு கலத்தைச் சொல்லுகையில், ஓ வென்று அலறி காய்ச்சல் வெறியில் உளருகிறீர்கள் என்று சொன்ன அந்த நோயாளிப்பெண்ணின் மனப்பான்மையும், நம் இந்தியர்களின் மனப்பான்மையும் இருந்திருக்கிறது என்பதை தெளிவுபடுத்தி காட்டவே இக்கதையைத் தெரிவிக்கலாயினேன்.

சுயராஜ்யமென்றும், நாம் பணக்காரர்களாகி விடலாமென்றும், நம் நாட்டுப்பணம் வெளியேபோகாதென்றும், நாம் சுகமாக விருக்கலாமென்றும், வெள்ளையரிடமிருந்து நாம் சுயராஜ்யத்தைக் கைப்பற்றலாமென்றும், சொன்ன உடனே, நம்மவர்கள் பேராசையுடன் "ஆ" என்று வாயைத் திறக்கிறார்கள். மெய்சிலுக்க கைகளும், கரகோஷமும் சொல்லத்தரமல்ல.

ஒற்றுமை எற்படும் வரை சுயராஜ்யமென்பது குதிரைக்கொம்பாகும். அதற்கு அறிவுவளர வேண்டும், ஜாதி ஒழிய வேண்டும். நாம் காளி கோவில், கும்பாபிஷேகம், திருவிழா முதலிய வைகளில் நாசப்படுத்தும் பணத்தையும், நேரத்தையும் கல்வி அபிவிர்த்திக்கு உபயோகப்படுத்தல் வேண்டும். நம் மக்களை யெல்லாம் கீழ் ஜாதி என்று நினைத்துக்கொண்டு இழிவு படுத்தக்கூடாது. பெண்களுக்கு கல்யாண சுதந்திரம், சொத்துரிமை சம ஒழுக்க சுதந்திரம் அளிக்க வேண்டும். நாம் ஒருவருக்கு மரியாதை கொடுத்தால்தான்நம்மை ஒருவர் மதிப்பார்கள் என்று சொல்லும் அனுபவ உண்மையை உணர்தல் வேண்டும். நாம் வெள்ளையரிடம் பிக்குண்டு கிடப்பதை விடுவித்துக் கொள்ள வேண்டுமானால், நாம் நம் அடிமை விலங்கை உடைத்தெறிய வேண்டுமானால், பெண்களுக்கும், கீழ் ஜாதியார் என்று நாம் நினைத்துக்கொண்டிருப்பவர்களுக்கும், நாம் பூட்டியிருக்கும் விலங்கை முதலில் உடைத்தெறிய வேண்டுமென்றும், நாம் முதலில் சிலவருடங்களுக்கு விடுதலை கொடுக்கவேண்டுமென்றும் சொன்ன வுடனே நம்மவர்களுக்கு முகம் வாடிப்போகிறது.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் மேலே கவனியில் சொல்லிய பெண், வரவு கலத்தைச் சொல்லும் பொழுது சந்தோஷமாயும், செலவு கலத்தைச் சொல்லும் பொழுது காய்ச்சல் வெறியில் உளராதிர்கள் என்று சொன்னதுபோல், நம் இந்தியர் வரவு கலமாகிய பிறத்தியாரிட மிருந்து வாங்கவேண்டியதை சுயராஜ்யத்தைச் சொன்னவுடன், உடனே அதை அடைய வேண்டுமென்றும், சுயராஜ்யம் வேண்டுமென்று போராடுகிறவர்களை வாழ்த்தியும், செலவு கலமாகிய, நாம் பிறத்தியாருக்கு கொடுக்கவேண்டிய பெண்களுக்கு கல்யாண சுதந்திரம், சொத்துரிமை, ஜாதி சமத்துவம் என்ற உடனே, பின்னல் மெல்ல பார்த்து கொள்ளலாம் என்றும், இவைகளுக்காக பாடுபடுகிறவர்களை தூற்றியும் வருவது யாவரும் அறிந்ததாகும்.

ஆகவே கதையில் சொல்லிய பெண் எவ்வளவு யோக்கிய முடையவளோ அவ்வளவு யோக்கியர்கள்தான் நற் பொழுதுள்ள நம் சுயராஜ்ய வேட்கையுடைய இந்திய சகோதரர்கள் என்று சொல்லவேண்டி இருக்கிறது. அந்தப்பெண் தன் கணவனுடைய கடன் காரர்களை எப்படி மோசம் செய்ய நினைத்தாளோ, அம்மாதிரியே நம் இந்திய சகோதரர்களும் ஜாதி சமத்துவத்தையும், பெண்ணுரிமைகளையும் மறுத்து கிடைக்கவேண்டியவர்களுக்கு மோசம் செய்தவராவார்கள். கடன் காரர்களை மோசம் செய்யும் கருத்துள்ள அப்பெண்ணுக்கு அவளுக்கு உண்மையாய் வரவேண்டிய கடனும் வசூலாகக்கூடாது என்று ஒரு யோக்கியன், நியாயமாயுள்ளவன் ஆசைப்படுவானே, அதேமாதிரி அந்த மோசக்கருத்துள்ள பெண்ணின் தன்மைக்கும், பண்மடங்கு அதிக மோசக்கருத்துள்ள இந்தியாளுக்கு தங்களுக்கு உண்மையாய் வரவேண்டிய கடனுகிய சுயராஜ்யம். தாங்கள் கொடுக்கவேண்டிய கடனுகிய பெண்ணுரிமை, ஜாதி சமத்துவம் கொடுக்கும் உரை கிடைக்கக்கூடாது, வசூலாகக்கூடாது என்று நடு நிலைமையிலுள்ள ஒரு யோக்கியன் நினைக்காமலிருக்க முடியாது.

மோசக்காரர்கள் நிறைந்துள்ள இந்த நாட்டைக் காப்பாற்ற கூவியழைப்பது தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பெண்களுக்கும், மோசடி செய்வதேயாகும். இம்மாதிரி கடவுளின் பேராலும், மதங்களின் பெயராலும், தேசத்தின் பெயராலும், மோசடிகளும், கொடுமைகளும் பெருவாரியாக உள்ள இந்த நிலையில், ஜாதி ஆணவமும், மத ஆணவமும் பெரும்பான்மையான வர்களிடத்தில் எகமாய் தாண்டவமாடும் இந்நிலையில், சுய ஆட்சி வாங்க வேண்டுமென்பது யோக்கியர்களும், அறிவுள்ளவர்களும் நினைக்கக்கூடிய காரியமாகவும் சொல்லக்கூடிய வார்த்தைகளாயிருக்கமுடியாது. உண்மை சமத்துவத்தைக் கோறுபவர்கள், அரசியல் வாதிகளை மோசக்காரர்கள் என்று சொல்லாமலிருக்க முடியாது. பட்டவர்த்தனமாக (கம்யூனிஸ்ட்) கட்சிக்காரர்கள், ருஷியா உண்மை சமதர்மக்கட்சிக்காரர்கள் திரு காந்தியாரையும் நேருக்களையும் துரோகிகள் என்று சொல்லியுமாய்விட்டதை பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். அதுவுமல்லாமல் வட இந்தியாவிலும் நமது சமதர்மக்கட்சியிலுள்ளவர்கள் காங்கிரஸ்மீட்டிங்குகளில் வந்து பொதுஜனங்களைப்பார்த்து "காங்கிரஸ்காரர்களை நம்பாதீர்கள், எங்கள் கொள்கையை பின் பற்றுங்கள், உண்மையான பூர்ணவிடுதலையை அடையலாம்" என்று உபத்திரவம் செய்வதாக வட இந்தியாவிலிருந்து வந்தவர்களை விசாரித்ததில் தெரியவந்தது. ஆனால் திரு காந்தியாரையும், நேருக்களையும் தேசத்துரோகிகள் என்று சொல்லாவிடினும், எப்படியிவர் தெய்வபக்தியால் தங்கள் தலைகளையே தங்கள் கைகளாலேயே குட்டிக்கொள்கிறார்களோ, அதற்கிணங்க மேற் சொன்னவர்கள் புத்தியில்லா பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டவர்களாதலால் பக்தி மார்க்கத்திலொன்றுகிய தேசபக்தியிலீடுபட்ட தேசபக்தர்களாதலால், ஒரு சமயம் தங்களுக்குத் தெரியாமலே, தேசத் துரோகம் செய்கிறார்களோ என்று நினைக்க இடமளிக்கிறது. தாங்கள் அறிந்திருந்து இப்படி செய்வார்களென்று நாம் நினைக்க முடியாமலிருக்கிறது. இதற்க,

இப்பொழுது தேசியப்போரில் அநேகர் பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஈடுபட்டிருப்பதற்கு ஒருபிரதானமான காரணமுண்டு. அதாவது இந்தியர்கள் அறிவில்லாத பக்தர்கள் என்பது உலகமறிந்தரகசியம். தேசியம், தேசபக்தி என்பது ஒரு பக்திமார்க்க மாதலால் இந்திய பக்த கோடிகள் அதனால் இழுக்கப்படுவது சகஜமே. எப்படி கடவுள் பக்தியாலும் மோட்சப்பேராசையாலும், கல்லில் பாலைக்கொட்டுவதும், பார்ப்பனன் வயித்தை நிரப்புவதுமாகிய காரியங்களைச்செய்யத் தலைப்படுகின்றார்களோ, அம்முறையிலேயே தேசபக்தியால் சுயராஜியப் பேராசையால் அதில் அர்த்த மிருந்தாலுமில்லாவிடினும் அதன் பேரால் பிறர் சொல்லும் எக்காரியத்தையும் செய்ய துணிடப்படுகின்றனர். பொதுவாக பக்திமார்க்கத்திற்கு அறிவு மார்க்கம் முரண்பாடுள்ளது என்பது நிரூபிக்கக் கூடியதேயாகும். எம்மாதிரி கடவுள் பக்தர்கள் நம்சுயமரியாதை இயக்கத்தின்மீது நாஸ்திகப்பட்டம் அளிக்கிறார்களோ, பக்திமார்க்கத்திலீடுபட்ட அவர்கள் சகோதரர்களான தேசபக்தர்கள் நம்சுயமரியாதை இயக்கத்தின் மீது தேசத்துரோகப்பட்டம் கொடுத்திராவிட்டால் கடவுள் பக்தியும், தேசபக்தியும் ஒரு நன்மையை உடையது என்று யாவரும் எளிதில் அறிய முடியுமாவென்று கேட்கிறோம். இதனால் கடவுள் பக்தர்களும், தேசபக்தர்களும் ஒரு இனத்தைச்சேர்ந்தவர்களும் என்பது விளக்காமல் போகாது. எப்படி நந்தன் என்னும் கீழ்ஜாதிக்காரன் என்று சொல்லப்படுபவன் கடவுள் பக்தியால் மோட்ச ஆசையால் பிராமணர்களுடைய குட்சி வார்த்தையை கேட்டு நெருப்பில் விழுந்து மாண்டானோ, அம்முறையிலேயே அநேக பெண்களும், தாழ்த்தப்பட்டவர்களும் தமக்கு தம் சகோதரர்கள் என்பவர்கள் செய்யும் கொடுமையை அறியாமல் தேசபக்தியால் சுயராஜியப்போராசையால் தேசியவாதிகளின் மயவஞ்சகப்பேச்சில் மயங்கி சட்ட மறுப்புததியில் விழுந்து மடிவார்கள் என்பதே நம்முடைய மனப்பூர்வமான அபிப்பிராயமாகும்.

மனிதனுடைய அருமையான நேரத்தையும், அரும்பாடுபட்டுத் தேடிய பணத்தையும், அறிவையும் நாசமாக்கும் கல்லுச்சாமிகளையும், மோட்ச வலையையும் மறுத்து நாஸ்திகப்பட்டம் பெற்றுக்கொள்வதை எவ்வாறு நாம் வரவேற்கிறோமோ அவ்வாறே பொது வீதிகளில் செல்லவும், பொதுக்

தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நன்நிலம் தாலூகா சுயமரியாதை மகாநாடு.

தஞ்சாவூர் ஜில்லா நன்நிலம் தாலூகா சுயமரியாதை மகாநாடு, நன்நிலத்தில் 7-6-31-உ பிற்பகல் 3 மணிக்கு கோவிலுக்கு முன்னால் போடப்பட்டிருந்த பெரிய கொட்டகையில் கூடிற்று.

மகாநாட்டிற்கு வெளியிடங்களிலிருந்து மாத்திரம் சுமார் 500, 600 பிரதிநிதிகள ஜில்லாவின் சகலபாகங்களிலிருந்தும் விஜயம் செய்திருந்தார்கள். திருவாரூரிலிருந்து மாத்திரம் 250 பிரதிநிதிகளும், நாகபட்டணத்திலிருந்து 50பிரதிநிதிகளும்மாயவரத்திலிருந்து 25 பிரதிநிதிகளும், கும்பகோணத்திலிருந்து 30 பிரதிநிதிகளும், காரைக்கால், பிறையார் ஆகிய இடங்களிலிருந்து 30 பிரதிநிதிகளும், மன்னார்குடி, சீயாழி ஆகிய இடங்களிலிருந்து 20 பிரதிநிதிகளும், மற்றும் சுற்றுப்பக்கங்களிலிருந்து 200க்கு மேற்பட்ட பிரதிநிதிகளும், உள்ளூர்காரர்கள் சுமார் 400, 500 பேர்களும் பெண்கள் சுமார் 150 பேர்களும் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் என்னும் கூட்டத்தார்கள் 200, 300 பேர்களுமாக பந்தலிலும் வெளியிலுமாக 1500 பேர்கள் வரை கூடியிருந்தார்கள்.

தலைவர்களை நன்நிலம் யூனியன் பிரசிடெண்ட் அவர்கள் பங்களாவிலிருந்து மேள வாத்தியங்களுடன் பந்தலுக்கு அழைத்துச்சென்றவுடன் சுயமரியாதைப்பாட்டுகள் பாடி முடிந்ததும் திரு. சௌரிராஜனுக்கும் திரு மதி கண்ணுமாரிமுத்து அம்மாளுக்கும் திருமணம் நடந்தேறிய தது. மணவினை துடங்குமுன் திரு. ஈ. வெ. இராமசாமியார் சில வார்த்தைகள் சொல்லி மணமக்களையும், மணத்தின் தன்மையையும் சபைக்கு அறிவித்த பின் மணமக்கள் தங்கள் தங்கள் ஒப்பந்தங்களைச்சொல்லி ஒருவருகொருவர் மாலையிட்டுக்கொண்டபின் திருவாளர்கள் எஸ். இராமநாதன், நித்தியானந்தம், குபகோணம் கே. எஸ். சுப்பிரமணியம், இராமாமிர்தத்தம்மாள், மரகதவல்லியம்மாள், பண்டிதர் பக்கிரிசாமி, மாயவரம் சி. நடராஜன் முதலியவர்கள் சீர்திருத்த திருமணத்தின் பெருமையைப்பற்றிப்பேசிய பின்பு சுயமரியாதை மகாநாட்டை திருவாரூர் தமிழ்ப்பண்டிதர் சாமி சிதம்பரனார் அவர்கள் சில வார்த்தைகள் சொலலி துவக்கிவைத்தார்.

உடனே வரவேற்புக்கழகத்தலைவர் திருவாரூர் முனிசிபல் சேர்மெனுயிருந்த திருவாளர் டி. கே. இராமசாமி நாயுடு B. A. B. L. கள் கொள்கோயிடுவார்கள். இவ் அவர்கள் வரவேற்பு உபன்யாசம் படித்தார். அது வருமாறு:-

வரவேற்புக் கழகத்தலைவர்
T. K. இராமசாமி
B.A., B L., வக்கீல்
அவர்களது சொற்பொழிவு.

மகாநாட்டுப் பிரதிநிதி அவர்களே! பிரிய சகோதரி, சகோதரர்களே!!

நமது இயக்கத்திற்கு "சுயமரியாதை" என்ற பேர் நம் தலைவர்களால் கொடுக்கப்பட்டது. அதற்கு ஆங்கிலத்தில், 'Self-Respect' என்று சொல்லுகிறார்கள். இவ் விருபதங்களையும், தமிழர், இந்திலீஷும் கற்ற யாவரும், வெகு சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடும். அதில் அடங்கியிருக்கும் பொருளும் சாமான்ய புத்தியுள்ளவர்களாலும் கூட அறிந்து கொள்ளக்கூடியதே. ஆனால் அதன் தத்துவங்களை அனுஷ்டானத்துக்கு அதாவது பழக்கத்துக்கு கொண்டுவருவதுதான் மிகக் கஷ்டமாயிருக்கிறது. இந்தக் கஷ்டம் அதி புத்திசாலிகள் என்பவர்களிடத்திலும் கூட காணப்படுகிறது. அப்படி காணப்படுவதின் காரணம் புத்திக்கும், யுக்திக்கும் ஒற்றுமை இல்லை யெனினும் அது வெகு நீண்டகாலமாய் புத்தி யுக்தி யென்ற விசாரணை பன்னியில் நடைபெற்று வந்திருப்பதால் அவைகளுக்கு விரோதமாய் எதையும் செய்ய பயப்படும் நோழைத்தனமேயாகும். அப்படிப்பட்ட பயங்காளித்தனத்தை வெட்டித்தள்ளிவிட நாம் வெகு பாடு படவேண்டி இருக்கிறது. பாடுபட்டு ஜெயித்தோமானில் அதுதான் சுயமரியாதை. அவ்விடத்தில்தான் நமது இயக்கம்—சுயமரியாதை—வேர் ஊன்றிவிடும்.

நாம் எதிர்த்து நின்று வெற்றி பெறவேண்டுவன, முக்கியமாய் இரண்டு விஷயங்களே, முதலாவது அர்த்தமற்ற மூடப்பழக்க வழக்கங்கள். இவைகள் நம்முடைய ஜனனகால முதல் இறுதி காலம் வரையில் அநேக சந்தர்ப்பங்களில் நடத்தப்பட்டு வரும் சடங்குகள் முதலிய வையாகும். இவற்றிற்கு ஆகும் செலவுகளில் பாதிக்கு மேற்பட்ட பாகம் ஜோசியர், குருக்கள், பூசாரிமார்கள். அப்படிப்பட்டபெரியாராஜாக்கள் செய்த தர்மமே இப்படியெல்லாம் சாமான்னிய ஜனங்கள் செய்யும் தானம் தர்மம் என்ன பலனைக்கொடுக்கும்? எவ்வளவு காலம் நிற்கும்? என்பதை நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள்.

சகோதரி சகோதரர்களே! இக்காலத்தில் பெரும் பான்மையான மக்கள் வேலையில்லாமல்தியங்குகிறவர்களாயும், பூமியும் ரொக்கமும் உள்ள பெரிய சீமான்கள் பணத்துக்காக கஷ்டப்படுகின்றவர்களாகவும்இருப்பதுகூடநன்கு அறிந்திருந்தும், பூசாரி உடுக்கை யடித்து வாவழைத்த சுவாமியும், அந்த சுமாமி கேட்பதாய் அவன் சொல்லும் செலவுகளையும்- அதில் நாம் கொஞ்சம் தயங்கினால் நம் பாட்டிமாரும்-நம் அத்தைமாரும் நம் புத்தியை மாற்றி பூசாரி திட்டத்தையே, முடிவு கட்டிவிடும் தன்மையும் குறைந்த பாடில்லையே! இவ்விஷயங்கள் யாவும் நம்மவர்கட்கெல்லாம் தெரிந்த விஷயமே. ஆயினும் அதை பெயர்த்து விடுத்தல் எப்படி என்று யோசிக்கும் இடத்து நம் சுயமரியாதை இயக்கம்தான் நம் கல் உதவிக்கு வருகிறது. நண்பர்களே! அச்சமயத்தில் நாம் தூங்காமலும், அலட்சியம் செய்யாமலும் நெடு நன் முறையை கைப்பற்றினால் நாம் எளிதில் கரையேறி விடலாம். முன்னேற்றம் நிச்சயமாய் அடையலாம்.

இதுவரை பழைய பழக்க வழக்கங்களின் கொடுமையைப் பற்றி சொன்னேன். இப்போது 2வது விஷயமாகிய ஜாதி-மதம் உயர்வு-தாழ்வு இதை பற்றி சொல்லுகிறேன்.

ஆதியில் நான்கு வர்ணங்கள் இருந்ததாய் தெரியவில்லை. இவ் வாறான பிரிவுகள், முதல் முதலில் தேச சௌகரியத்தை உத்தேசித்து ஆளுகைக்கு வேண்டிய சாதனமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். அதாவது, ஒருவன் படிக்கட்டும்; ஒருவன் யுத்த பயிற்சி முறை செய்யட்டும்; ஒருவன் வியாபாரம் செய்யட்டும்; மற்றொருவன் கிருஷித்தொழில் செய்யட்டுமென்று ஒரு பாகுபாடு ஏற்படுத்தியிருக்கவேண்டும். படித்தவன்குடும்பத்தில் எத்தனையோமூடப்பிள்ளைகள் பிறக்கவில்லையா? படியாத குடும்பங்களிலும் வெகுபுத்திக்கூர்மையுள்ள பிள்ளைகள் உறபவிக்கவில்லையா? ஆங்கிலத்தில், The son of Milton is not a Milton. The Father of Shakespeare is not a

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா
ஆய்ச்சி நூலக அறக்கட்டளை

C. I. D.

"மகாத்மாவுக்கு கொடும்பாவி"

"மகாத்மாகாந்திக்குக்கூட" திருப்பூரில் கொடும்பாவி கட்டி இழுத்தார்களாம். "மெயில்"

அதவும் கதர் பட்டணமாகிய திருப்பூரில் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான காந்திபக்தர்கள் நிறைந்த திருப்பூரில் கொடும்பாவி கட்டி இழுத்தது நன்றிகெட்டதனமே.

ஃஃ ஃஃ

அடக்குமுறை ஆரம்பம்.

திருத்தணியில் 144.

இன்னும் இரண்டுமாத காலத்திற்கு திருத்தணி எல்லைக்குள் கள்ளுக்கடை மறியல் செய்யக்கூடாது என்பதாக 144 வது பிரிவின்படி சர்க்காரார் ஒரு உத்திரவு போட்டிருக்கிறார்கள்.

ஃஃ ஃஃ

பட்டம் ஒழிந்தது.

சமதர்மஆட்சி ஏற்பட்டஸ்பெயின் தேசத்தில் லார்ட் முதலிய சகல பட்டங்களையும் ஒழித்து இனி அவைகளை எவ்விதத்திலும் பயன் படுத்தக்கூடாது என்று சர்க்கார் தீர்மானித்து விட்டார்கள்.

ஃஃ ஃஃ

முனிசிபல் சபை மூலம் மறியல்.

கோவை முனிசிபல் சபையார் கள்ளுக்கடை மறியலுக்கு 1000 ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். தேசபக்தர்களும், தேசிய பத்திரிகைகளும் இதற்கு நன்றி செலுத்துகிறார்கள்.

சென்ற வருஷ சர்காரார் இதேமாதிரி 4 லக்ஷம் ரூபாய் ஒதுக்கி வைத்து இதே மாதிரி ஸ்தாபகர்கள் வசம் அந்தப் பணத்தையும் ஒப்புவித்து மாகாணம் பூரா மதுவிலக்கு பிரசாரம் செய்யச்சொன்ன காலத்தில் இதே தேசபக்தர்களும், தேசிய பத்திரிகைகளும் அதைத்தேர்தல் பிரசாரம் என்று சொல்லி வெறுத்தன. ஆகவே "தேசியத்தின் மனமாற்றம் போற்றத்தக்கதே" எப்படி இருந்தாலும் இந்த பணமும் தேசபக்தர்கள் கைக்கு வரப்போவதில்லை என்பதுமாத்திரம் உறுதி.

ஃஃ ஃஃ

இந்தியர்களுக்கு சரியான பிரதிநிதித்துவம் கொடுபடவேண்டுமானால் தனித்தொகுதியேசரியானதொரு சிறந்த மார்க்கமாகும் கம். சிங்காரவேலு செட்டியார்,

பி. ஏ. பி. எல். செஷன்ஸ்:

ஃஃ ஃஃ

ஆந்திர நாட்டில் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி.

சென்னையில் உள்ள ஆந்திர ஜில்லா காங்கிரஸ்கமிட்டிக்கு திரு. ஜி. ரங்கய்யாயுடு அவர்களைத்தலைவராகபிரேரேபித்தபோது அவர் தனக்குஅப்பதவிவேண்டியதில்லை என்று மறுத்து விட்டாராம் காரணம் கேட்டபோது "ஆந்திரமாகாணகாங்கிரஸ் பார்ப்பன ஆதிக்கத்தில் இருப்பதால் தான் இதில் தலைமை ஸ்தானம் வகிப்பதில் பயனில்லை. மேலும் எனது பார்ப்பனரல்லாத நண்பர்கள் ஜில்லா காங்கிரஸ் தலைமைப் பதவியை ஒப்புக்கொண்டு பார்ப்பனர்கள் ஏ ஆயுதமாக இருக்கக்கூடாதென்றும், பார்ப்பனர்கள்பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதைக்கு விரோதமாய் இருக்கின்றார்கள் என்றும், எனதருமை சரிக்கை செய்திருக்கிறார்கள்" என்று சொன்னாராம் இதன் பிறகு திரிவாளர் கே. காகேஸ்வரராவ் சமாதானம்சொன்னதுடன் விஷயங்களை கவனித்துநேர் செய்வதாக சொன்னபிறகு ஏற்றுக் கொண்டார். "இந்தியா"

ஃஃ ஃஃ

விஷம்கக்கப்பட்டுவிட்டது.

மாகாண காங்கிரஸ்கமிட்டி பார்ப்பனர் திரு. K. பாஷயம் அய்யங்கார் அவர்கள் கொண்டுவரப் போகும தீர்மானம்:—

"ஸ்தலஸ்தாபனங்களின் முதலியவை சுத்தமாக இருக்கவும், திறமைபாக நடைபெறவும், ஜனங்களுக்கு பயன்படவும், வேண்டுமாதலால் இனிவரும் தேர்தல் களுக்கு காங்கிரஸ் காரர்களையே அபேக்ஷகர்களாக நிறுத்தி ஸ்தலஸ்தாபனங்களை கைப்பற்றவேண்டும்"

என்பதாக ஒரு தீர்மானம் அனுப்பி இருக்கிறார்.

மேலும்,

செங்கல் பட்டுஜில்லா காங்கிரஸ் கமிட்டியும், இதேமாதிரி அதவது:—

"வரப்போகும் செங்கல்பட்டு ஜில்லா, தாலூகா போர்டுகள் முதலிய தேர்தல்களுக்கு காங்கிரஸ் கார்களையே நிறுத்தவேண்டும்" என்பதாகும்.

ஃஃ ஃஃ

காந்தி உத்திரவு,

"வருப்புவாத கொள்கையுடையவரும் ஸ்தலஸ்தாபனங்களில் ஸ்தானம் பெற காங்கிரசுக்காரர்கள் விடக்கூடாது"

என்று காந்தியும்உத்திரவிட்டு விட்டார். இவ்விஷயம் யங் இந்தியாவில் பார்க்கலாம்.

ஆகவே காங்கிரஸ் பிரசாரம் மெள்ளமெள்ள அதன் உண்மை நிறமான தேர்தலுக்கு வந்துகொண்டிருப்பதைக்காணலாம்.

இனி இதாரமாக வைத்துக் கொண்டு இனிமேல் தேர்தல்களில் "தேசபக்தர்கள்" வியாபாரம் பேசலாம். ஜஸ்டிஸ் கக்ஷி ஆசாமிகள்களுக்கும் இதனால் கொஞ்சம் ஏமாற்றம் ஏற்படலாம். எனினும் தேசபக்தர்களை சரிப்படுத்திக் கொள்வார்கள்.

ஆனாலும் அவர்களும் தங்களை காங்கிரஸ் காரர்கள் என்று சொல்லிக்கொண்டு தங்கள் ஆதிக்கத்தில் இருக்கும் ஸ்தல ஸ்தாபனங்களை காங்கிரசுக்கு பயன்படுத்தும்படி செய்து தேசபக்தர்களை வசத்துள் போட்டுக்கொண்டால் அவர்களது பயமும நீங்கிவிடும். ஆகலால் சமீப தேர்தல்களை வேண்டியே மறியல்கள் நடத்தப்படுவது எண்பதை இனிபாவது பொதுஜனங்கள் உணர்வார்களா?

ஜவஹர்லால்.

திரு. ஜவஹர்லால் திருச்சூர் இளைஞர் வரவேற்புக்குப் பதில் அனுப்பியதையில்,

"தீண்டாமை இன்னும் இருந்துவருவதை அறிய என்மனம் பதைக்கின்றது. இந்தத் தொல்லைய அரசோடு ஒழிக்க காங்கிரஸ் நிச்சயித்துவிட்டது"

"இந்தியா"

ஃஃ ஃஃ

இப்படி அவர் சொன்னதிலிருந்து

திருச்சூருக்கு சென்றபோதுதான் நேருவுக்கு தீண்டாமை இன்னும் இருந்து வருவதாக தெரிந்ததுபோல் இருக்கின்றது. ஐயோ பாவம்! காங்கிரசும் இதற்காகபாடுபட்டு தீண்டாமையை ஒழித்துவிட இனிமேல்தான்முயற்சிசெய்ய தீர்மானித்திருப்பதாக தெரிகிறது.

ஃஃ ஃஃ

வக்கீல் வேலைக்குப் போலீஸ் எப்படி எவனும் யோக்கியனை இருக்க முடியாதோ அதுபோலவே "தேசபக்தர்கள்" "தேசியவீரர்கள்" ஆகிய வேலைக்குப்போலீஸ் யாராலும்நல்லபிள்ளையாகஇருக்க முடியாது போலிருக்கின்றது.

தொழில் முறைகள் சீர் திருத்த மடைந்து வாலிபர்களுக்கு வேலையும் சாப்பாட்டிற்கு வழியும் ஏற்படும் வரை இப்படிப்பட்ட தலைவர்கள்தான் நாட்டில் செல்வாக்காய் இருக்க முடியும் போலிருக்கிறது.

ஃஃ ஃஃ

"ஆனாலும் ஒரு சமயம்"

"மகாத்மா" காந்தி வட்டமேஜை மகாநாட்டுக்கு போகமாட்டார். ஒருசமயம் போனாலும் போகக்கூடும். ஆனாலும் அது சந்தேகந்தான். அப்படி சந்தேகமில்லாமல் போவது ஒருசமயம் உறுதியானாலும் அவர் தான்போவாரே யொழிய மற்றவர்கள் போகமாட்டார்கள். ஒருசமயம் மற்றவர்கள் போனாலும் மகாத்மாதான் காங்கிரஸ் பிரதிநிதியாய் இருப்பார். "மகாத்மா" காங்கிரஸ் பிரதிநிதியாய் போனாலும் வட்டமேஜை மகாநாட்டில் மந்திரம் கலந்துகொள்ளமாட்டார். வட்டமேஜை மகாநாட்டில் ஒருசமயம் கலந்துகொண்டாலும் காங்கிரஸ் கக்ஷியை மாத்திரம் எடுத்துச்சொல்லிவிட்டு விவகாரத்தில் கலந்துகொள்ளமாட்டார். விவகாரத்தில் ஒரு சமயம் கலந்துகொண்டாலும், பாதுகாப்பு விஷயத்தில்மாத்திரம் சிறிதும் விட்டுக்கொடுக்க மாட்டார். ஒருசமயம் பாதுகாப்பில் விட்டுக்கொடுத்தாலும் இந்திய நன்மைக்குஎன்றுதான் எதையும் விட்டுக் கொடுப்பாரே யொழிய பிரிட்டிஷ் நன்மைக்காக வென்றும் சிறிதும் விட்டுக்கொடுக்கமாட்டார். பிரிட்டிஷ்நன்மைக்காக வென்று ஒருசமயம் எதாவது விட்டுக்கொடுத்தாலும் 'ஐயோ பாவம்! அவர்களும் (பிரிட்டிஷார்களும்) நம்மைப்போல் மனிதர்கள் தானே! பிழைத்துப் போகட்டும்" என்று கருதி தயாளத்தின்மீது தான் விட்டுக்கொடுப்பாரே யொழிய "மிருகபலத்திற்கு" பயந்து கொண்டு ஒருக்காலும்விட்டுக்கொடுக்கமாட்டார். ஒருசமயம் "மகாத்மா" மிருகபலத்துக்கு பயப்படுவதானாலும் ராஜீய உத்தேசித்தும் பெருந்தன்மையை உத்தேசித்துந்தான் பயப்படுவாரேயொழிய அஹிம்சையும் சத்தியாக்கிரகமும் தோற்றுப்போகுமே என்று ஒரு நாளும் சந்தேகப்படமாட்டார். ஒருசமயம் தோற்றுப்போகுமே என்று சந்தேகப்படாமலும் ஒருசமயம் தோற்றே போய் விட்டா

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

திருவாரூரில் சுயமரியாதைப் பிரசாரம்.

ஈ. வெ. இராமசாமி, சௌ. முருகப்பா சொற்பொழிவு.

"காங்கிரசும், சுயமரியாதையும்"

சுமார் 2000 பேர் கூட்டம்.

S. இராமநாதன் M. A., B. L., தலைவர்.

திருவாரூர் கமலாலயத்திற்கு முன்புள்ள திறப்பக்குளத்து மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு அவ்வூர் இந்து முஸ்லீம் பிரமுகர்களும் வக்கீல்களும் பார்ப்பன கனவான்களும் சில பெண்களுமாக சுமார் 2000 பேர்கள் வந்திருந்தார்கள்.

இம்மாதிரிக் கூட்டம் திருவாரூரில் சமீபகாலத்தில் கூடினதேயில்லை என்று சொல்லப்பட்டது. கூட்டம் துவக்கப்பட்டவுடன் உயர்திரு. எஸ். இராமநாதன் அவர்களைத் தலைவராக இருக்க திரு. சௌந்திரராஜன் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டது. திரு. எஸ். இராமநாதன் எம். ஏ., பி. எல்., அவர்கள் அக்கிராசனத்தமர்ந்ததும் முகவுரையாகப் பேசியதாவது:—

கனவான்களே! இன்றையக் கூட்டத்தில் பேசப்படும்விஷயம், "காங்கிரசும்-சுயமரியாதையும்" என்பதாகத் துண்டுவிளம்பரத்தில் குறிப்பிட்டிருக்கின்றபடியால் அதைப்பற்றியே இன்று பேசப்படும். காங்கிரசானது சுயமரியாதை இயக்கத்திற்கு நேர்மாறானதென்றுதான் நான் கருதுகிறேன். காங்கிரஸ் தீர்மானம் வார்த்தையளவிலாவது, நல்ல தீர்மானமாக பிறருக்கு தோன்றவேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீதே அமைக்கப்பட்டதாகுமானாலும் அத்தீர்மானங்களில் நமது நாட்டு மக்களுக்கு ஏற்பட வேண்டுமென்கின்ற விடுதலைக்கும் முற்போக்குக்கும் தகுந்தபடியான தீர்மானம் ஒன்றுமேயில்லை. அவை எவ்வும் எமாற்றமானதேயாகும். அவற்றில் ஒன்றிரண்டு ஏதோ சிறிது மயக்கத்தைக் கொடுக்கக்கூடியதாக இருந்தாலும் அதாவது பயன்பட அதற்கு அனுகூலமான சில தீர்மானங்களும் செய்யப்பட்டிருந்தால்தான் இவற்றுள் எதையாவது நல்ல தீர்மானம் என்று சொல்லமுடியும்.

ஆதலால் இப்போது செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் தீர்மானங்களால் நமக்குப்பயனில்லை என்றே சொல்லுவேன் என்று பேசிய பிறகு தாரைக்குடி திரு. சௌ. முருகப்பா அவர்களைப் பேசும்படிக் கேட்டுக்கொண்டார். அவர்பொதுவாக திருவாரூர் ஸ்தலபுராணத்தை எடுத்து அதன் புராணங்களைப் பேசி முடிப்புராணங்கள் எல்லாம் இல்லாமல் இருக்க காங்கிரசில் இடம் ஏற்படவில்லை என்று சொன்னார்.

பிறகு தலைவரவர்கள் திரு. ஈ. வெ. இராமசாமியைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

திரு. ஈ. வே. இராமசாமி.

எழுந்து பேசியதின் சாரமாவது:—

தலைவரவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!! இன்று நான் பேசவேண்டுமென்று நீங்கள்எதிர்பார்க்கும் விஷயமான "காங்கிரசும், சுயமரியாதையும்" என்பதுதோட்டிலிருந்தபிறகு தான் எனக்குத்தெரியவந்தது. இதைப்பற்றி பல இடங்களில் பேசியும், எழுதியுமிருக்கின்றேனே யென்று சொல்லியும் கூட யாரோ சிலரால் "காங்கிரசுக்கும், காங்கிரஸ் தீர்மானங்களுக்கும், சுயமரியாதை இயக்கத்திற்கும் சம்பந்தமில்லையாதலால் சுயமரியாதை இயக்கம் வேண்டியதில்லை" என்று சொல்லப்படுவதாகவும், அதை நம்பி சில வாலிபர்கள் காங்கிரசில் கலந்து கொள்ள ஆசைப்படுவதாகவும் தெரியவருவதால், இரண்டுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி எடுத்துச்சொல்ல வேண்டுமென்றே, இந்த விஷயத்தைப்பற்றி பேசவேண்டுமென்று குறிப்பிட்டதாகச்சொன்னார்கள். ஆகவே, இப்பொழுது நான் இதைப்பற்றி பேசுவேனென்பதாகக்கருதி, அதிலும் இதுசம்பந்தமான எனதபிப்பிராயத்தை உள்ளபடி சிறிதும் ஒளிக்காமல் எனக்குப்பட்டதை சொல்லுவேனென்றுயெண்ணி, நீங்களித்தனைபேர்கள் இன்று இங்குகூடியிருக்கிறீர்கள். ஆகவே நான்இச்சமயத்தில்யாருக்காவதுபயந்து கொண்டோ, யாராட்சன்னியத்திற்காவது மயங்கிக்கொண்டோ எனதபிப்பிராயத்தை உள்ளபடி வெளியிடாமல் மறைத்துப்பேசுவேனேயானால், உங்களுக்குமாற்றியவனென்பதாக ஆவதோடு, நானும் ஒருபயங்காளியென்பதாகவேயாகிவிடுவேன். இந்தப்படி நீங்கள் எமாற்றப்படுவதாலும், நான் பயப்படுவதாலும், யாருக்கென்னலாபம் ஏற்படக்கூடும்? நாங்கள் ஏதாவது உங்களிடம் பணமபறிக்கவோ, பத்திரிகை பிரசாரம் செய்யவோ அல்லது யாரிடமாவது சம்பளம் பெற்று கூலிப்பிரசாரம் செய்யவோ, அல்லது உங்களுடைய ஓட்டுகளை யாருக்காவது வாங்கிக்கொடுக்கவோ, தரகர்களாகவோ, அல்லது வயிற்றுப்பிழைப்புக்கே இதையொரு தொழிலாகக்கொண்டு, புராணப்பிரசங்கிகளைப் போல உங்களை ஏமாற்றி திருப்தி செய்து விட்டுப்போகவோ அவசியமுடையவர்களாக இங்கு இப்போது வரவில்லை. எதோ எங்களுடைய வாழ்நாட்களானது வீணுகாமலும், எங்கள் வயிற்றுப்பிழைப்புக்கும், வாழ்க்கை, சுகபோக ஆசைக்குமே வீணுகக் கழியாமல் ஏதாவதொரு பயனுள்ள காரியத்தை செய்து விட்டு அதுவும் எங்களுக்கு உண்மையாகவும், உறுதியாகவும், சரியென்றுபட்ட காரியத்தையே செய்து விட்டு முடிவெய்தலாமேயென்கிற எண்ணத்தின் மீதே சகல சுக, தக்க பலன்களுக்கும் துணிந்து உண்மை யென்றுபட்டதை யெடுத்துச் சொல்ல வந்திருக்கின்றோம்.

ஆகவே, சகோதரர்களே! நீங்களும் இதுபோலவே இந்த விஷயத்தில். நியாயமாகவும், யோக்கியமாகவும் நடந்து கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம். எதற்காகவென்றால் நாங்கள சொல்லுவதை அப்படியே நம்பி, மோசம் போய்விடாதீர்களென்பதற்கும், வேறு எந்தக்காரணத்தினாலாவது நாங்கள் சொல்லும் விஷயங்களுக்குள் புகுந்து பாராமல் அப்படியே கள்ளி விடாதீர்களென்பதோடு எங்களுடைய சொந்த பெருமை, சிறுமை ஆகியவைகளையுத்தேசித்து விஷயங்களை மதிக்காதீர்கள் என்பதற்குமாகத்தான் இப்படிச்சொல்லுகிறேன். ஆகவே, நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களுடைய சொந்த அறிவையும் ஆராய்ச்சியையும் கொண்டு, நடுநிலைமையிலிருந்து அலசிப்பார்த்து தள்ளுவதைத்தள்ளி, கொள்ளுவதைக் கொள்ளுங்கள். அந்தைரியத்தைக்கொண்டு தான் நாங்களும் தைரியமாய் உண்மையென்று பட்டதை பேசுகிறோம்.

நாங்கள் சொல்லும் விஷயங்கள் உங்களுக்குப் புதிதாகயிருக்கலாம், அசாத்தியமாகயிருக்கலாம், ஆச்சரியமாகவிருக்கலாம், திடுக்கிடக்கூடியதாகவிருக்கலாம். உங்களுடைய உணர்ச்சிக்கும், பழக்க வழக்கங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும் விரோதமாயிருக்கலாம். அன்றியும், நாங்களிதற்குமுன் எப்போதாவதுவெளிப்

படுத்தின அபிப்பிராயங்களுக்கு மாறுபாடாயிருந்தாலும், அவற்றைவிடத் தீவிரமானதாயிருந்தாலுமிருக்கலாம். எப்படியிருந்த போதிலும் நீங்கள் மாத்திரம் நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பார்த்தால் தான், ஏமாராதிருக்க முடியுமே யொழிய மற்றபடி மத விஷயத்தைப்போல் அரசியலிலும் யார் சொல்லுவதையும் நம்ப வேண்டுமென்றும், நம்பாவிட்டால் பாவம், நரகம் வந்து விடுமோ என்று பயப்படுகின்ற தன்மை போலும் வைத்துக் கொண்டால் கண்டிப்பாய் இதிலும் ஏமாந்துதான் போக முடியும் என்பதை தெரிவித்துக்கொண்டு மேலே பேசுகிறேன்.

சகோதரர்களே! காச்சிக காங்கிரசும், சுயமரியாதையும் என்னும் விஷயத்தில் எங்களபிப்பிராயத்தைச் சொல்லுவதென்பதில் முதலாவது நாங்களதற்குத் தகுந்தவர்களாயென்பதும் கவனிக்க வேண்டிய விஷயந்தான். எங்களைப் பொறுத்தவரை நாங்கள் காங்கிரஸ் என்பதிலும் கொஞ்சகாலம் உழைத்து, அதன் தத்துவங்களையும் உள் பிரகாரத்திலிருந்து மனப்பூர்வமாயுணர்ந்தவர்களேயாவோம், அத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும், ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கும் பல தடவை ஆளானவர்களுமாவோம்.

இன்னும் விவரமாய்ச்சொல்ல வேண்டுமானால் அதற்காகப் பல தடவை "சிறைக்கு" சென்றுவந்தவர்களுமேயாவோம். ஆதன் பெருமையை யுத்தேசித்து இப்பொழுது உங்களிடம் ஒன்றும் சொல்ல வரவில்லை. ஆனாலும் கஷ்டத்திற்கு பயந்து கொண்டு நாங்கள் ஏதோ இவ்வித அபிப்பிராயம் சொல்லுவதாக சொல்லுகின்றவர்களுடைய வார்த்தைக்கு சமாதானம் தெரியாமல் திண்டாடாதீர்கள் என்பதற்காகத்தான் சில சொல்லவேண்டியவனானேன். அன்றியும், காங்கள் காங்கிரசின் கொள்கைகள், திட்டங்கள், தீர்மானங்களாகியவைகளின் உள்யெண்ணம் என்னவென்பதும், வெளியெண்ணம் என்ன வென்பதும், அவற்றை தீர்மானிக்கும் முறை எப்படியென்பதும், அதன் தலைவர்கள், தொண்டர்களாகியவர்களின் தன்மை எப்படிப்பட்டதென்பதையும், அத்திட்டங்களையும், தீர்மானங்களையும் பிரசாரம் செய்யும் முறையும், அமுல் நடத்தும் முறையும், அதிலுள்ள நாணயங்களும், அதனாலேற்படும் பயன்களும் நன்றாய் அறிந்திருப்பதாகக் கருதிக்கொண்டிருக்கின்றவர்களே யாவோம். அதோடு சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும், அதன்பேரால் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள், திட்டங்கள், அதன்பயனாய் ஏற்பட்ட பலன்கள் ஆகியவைகளையும் நன்றாயறிந்திருக்கிறோமென்றே கருதிக்கொண்டிருக்கிறவர்களாவோம். ஆதலால், மேற்கண்ட இரண்டு விஷயத்திலும் சிறிதாவது அனுபோகங்கொண்டே பேசுகிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சகோதரர்களே! என்னுடைய சொந்த கருத்துப்படி காங்கிரசும், சுயமரியாதையும் ஒன்றுக்கொன்று மாறானது என்பதோடு குறிப்பாக காச்சிக காங்கிரசினால் நாட்டு மக்களின் உண்மையான சமதர்மத்துக்கும், மற்ற நலத்துக்கும் எவ்வித அனுகூலத்தையும் விளைக்காதென்பதோடு, அதனால் சுயமரியாதை இயக்கக்கொள்கைகள் நடைபெறவும், மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியேற்படவும், இடையூறு ஏற்படுமென்றும் நான் கருதுகிறேன். இரண்டினுடைய அடிப்படையான கொள்கைகளே ஒன்றுக்கொன்று மாறானதாகுமென்றும் கருதுகின்றேன்.

உதாரணமாக சிலகூறுகிறேன். சகோதரர்களே! நமது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைப்படி முதலாவதாக மதமும், ஜாதியு, கடவுளுணர்ச்சியும் மக்களிடத்திலிருந்து விலக்கப்படவேண்டியதவசியமாகும். காங்கிரஸ் கொள்கைப்படி, மதமும், ஜாதியும், கடவுளுணர்ச்சியும் முறைபிசகாமல் காப்பாற்றப்படவேண்டியது முக்கியமாகும். சுயமரியாதைக்கொள்கைபில்பிராமணனென்பவனும்-பறையனென்பவனும் காட்டிலிருக்கக்கூடாது. காங்கிரஸ் கொள்கைப்படி அவர்களிருந்துதான் தீரவேண்டும்.

சுயமரியாதைக் கொள்கையில் இந்துமதமென்பதும், மநுதர்மசாஸ்திரமென்பதும் அழிக்கப்படவேண்டும். காங்கிரஸ்கொள்கையில் இந்துமதமும், மநுதர்மசாஸ்திரமும் காப்பாற்றப்படவேண்டும்.

சுயமரியாதைக் கொள்கையில் இராம இராஜ்யம், ஹரிச்சந்திர இராஜ்யமாகிய இந்துமத ஆதார, புராண இராஜ்யபாரங்கள்-இராஜ்ய முறைகள் அழிக்கப்பட்டாக வேண்டும். காங்கிரஸ் கொள்கைப்படி இராம இராஜ்யமும், ஹரிச்சந்திர இராஜ்யமும் புதுப்பித்தாக வேண்டும்.

சுயமரியாதைக் கொள்கைப்படி இந்த ஊர் கமலாலய குளத்தின் கட்டட விஸ்தீரணமாகிய ஐந்துவேலி விஸ்தீர்ணமுள்ள இடம் சமநிலைபாக்கப்பட்டு, பயிர் செய்யப்படத்தக்க வேண்டும். காங்கிரஸ் கொள்கைப்படி கமலாலயத்தையும் அதைச்சுற்றிலுமுள்ள குட்டிச் சுவர்களையும் பாதுகாப்பாற்ற வேண்டும்.

சுயமரியாதைக் கொள்கைப்படி ஏழை—பணக்காரன், முதலாளி—தொழிலாளி சோம்பேரி—பாடுபடுபவன் மேல், ஜாதி—கீழ் ஜாதி, மிராசுதாரன்—பயிர் செய்பவன், ஜமீன்தாரன்—குடியானவன், மேல்வாரக்காரன்-கீழ்வாரக்காரன் என்கின்ற தன்மைகளிருக்கக்கூடாது. காங்கிரஸ் கொள்கைப்படி இவர்கள் ஒவ்வொருவருடைய பிறப்புரிமைகளையும், அதாவது அவரவர்கள் பிறக்கும்போது இருந்த சொத்து நிலைமைகளைக் காப்பாற்றி, அவரவர்களுக்கு மதத்தின்பேரால், வர்ணாச்சிரம தர்மத்தின்பேரால், சாஸ்திரங்களில் கூறியுள்ள நீதி நிபந்தனைகளின் பேரால் உள்ள உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும்.

சுயமரியாதைக்கொள்கைப்படி ஆயிரமாவேலி, இரண்டாயிரம் வேலி நிலமுள்ள மடாதிபதிகளும், கோயில் சாமிகளும் ஒழிக்கப்படவேண்டும். அவைகளை மக்களுக்குப்பங்கிட்டுக்கொடுத்தும், மக்களின் நன்மைக்குப் பயன்படுத்தவும் வேண்டும். காங்கிரஸ் கொள்கைப்படி மடங்களையும், சாமிகளையும் காப்பாற்றுவதோடு அதன் சொத்துக்களையும், மடங்களுக்கும், சாமிகளுக்குப் பழைய வழக்கப்படி, மாமூல்படி அடைந்துகொண்டிருக்கச் செய்யவேண்டும்.

சுயமரியாதைக்கொள்கைப்படி மடாதிபதிகளும், சங்கராச்சாரியார்களும், மதப்பிரசார சன்னியாசிகளென்பவர்களும் பட்டாளத்தில் சேர்க்கப்படவும், விவசாயத்திலமர்த்தப்படவும் செய்வதோடு, சக்தியில்லாதவர்களையும் தானியக்களஞ்சியங்களை சோம்பேரிகள் கொள்ளைகொள்ளாதபடி காவல் காக்கவும் ஏற்பாடுசெய்ய வேண்டும். காங்கிரஸ் கொள்கைப்படி இம்மடாதிபதிகளையும், சங்கராச்சாரிகளையும் நூற்றுக்கணக்கான மக்கள் பல்லக்கில் ஊர்வலமாய் சுமந்துகொண்டு, அவர்கள் கால்களை [பாதத்தை] கழுவினதண்ணீரை மக்களுக்குக் குடிப்பித்து, அதற்காக வரிகள் வசூலித்துக்கொண்டிருக்கவேண்டும்.

சுயமரியாதைக்கொள்கைப்படி மக்களுக்கு மேல்லோகம்—கீழ்லோகம், மோட்சலோகம்—நிதர்லோகம் என்கின்றதான பிக்தாட்டங்கள் அடியோடு ஒழிக்கப்படவேண்டும் காங்கிரஸ் கொள்கைப்படி செத்துப்போனவர்களுடைய ஆவியை மோட்சலோகத்திற்கும், நிதர்லோகத்திற்கும் அனுப்புவதற்கு பிணங்களின் எலும்புகளையும், சாம்பலையும் கங்கையில் போடவேண்டும்.

சுயமரியாதைக்கொள்கைப்படி ஆக்மாவே சந்தேகம். காங்கிரஸ் கொள்கைப்படி ஆத்மாக்கள், குட்டி மகாத்மாக்கள் உண்டு.

இப்படிப்பட்டவையான அநேக விதியாசங்கள் இன்றைய காங்கிரஸ், காங்கிரஸ்காரத்தாக்கள், காங்கிரசின் எகாயகர்களாகியவர்களுக்கும் சுயமரியாதை இயக்கத்துக்கும் இருந்து வருகின்றன. இவற்றையெல்லாம் மறைத்துக்கொண்டு 'காங்கிரசுக்கும் சுயமரியாதை இயக்கத்திற்கும், விதியாசமில்லை' என்றும் 'காங்கிரசில் பூரண சுயேச்சை உண்டு'யென்றும், 'பொதுவுடைமைத்தத்துவம், சமதர்மக் கொள்கை ஆகியவைகள் உண்டு' என்றும் பேசுவதில் யோக்கியப் பொறுப்போ, நாணயப்பொறுப்போ இருக்க முடியுமா வென்பதை யோசித்துப் பாருங்கள்.

சகோதரர்களே!

இந்த நாட்டின் சொத்துக்களெல்லாம் கடவுள் களுடையதாகவும், சம்பாதனைகளெல்லாம் மோட்சப்பிராப்தமுண்டாக்கிக்கொடுக்கும், வழிப்பிரயாணத்துக்குமாகவும், மன்னின்குட்சிக்காரர்களெல்லாம்மோட்சவழிகாட்டிகளாகவும், சுயராஜ்யகர்த்தாக்களாகவும் பாடுபடுகிற ஜனங்களெல்லாம் அடிமைகளாகவும், பாவிகளாகவுமிருந்து கொண்டு பட்டினி கிடப்பவர்களாகவும் இருந்துவரும் முறைதான் இன்றைய காராச்சி காங்கிரஸ் சுயராஜ்ய திட்டமென்பதை யுணருங்கள். எந்தத்திட்டத்தில் ஏழையென்றும், அடிமையென்றும், நானென்றும், மக்கள் பிறவியிலில்லையோ அதுதான் சுயமரியாதை இயக்கத்திட்டம். எந்தத்திட்டத்தில் முதலாளியென்றும், தொழிலாளியென்றும்ஜாமீன்தாரனென்றும் குடியானவனென்றும், மடாதிபதிகளென்றும் சிஷ்யர்களென்றும், பிராமணனென்றும் சூத்திரனென்றும், பறைபள்ளனென்றும் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு சாஸ்திரப்படியுள்ள பிறப்புரிமை காப்பாற்றத் திட்டம் போடப்பட்டிருக்கின்ற

தொடர்ச்சி 16ம பக்கம் பார்க்க)

திரு. ஈ. வெ. இராமசாமி உபன்யாசம்.

சுதேசி.

—:0:—

ஈரோடு சுதேசி ஜவுளி வர்த்தக சங்க ஆண்டுவிழாவில் திரு. ஈ. வெ. இராமசாமி, சுதேசி என்பதுபற்றி செய்த உபன்யாசம்:—

தலைவரவர்களே! சகோதரர்களே!! நான் எதிர்பாராமல் திடீரென்று கூப்பிடப்பட்டு விட்டேன். இங்கு பேச வேண்டிய அவசியமிருக்குமென நான் கருதவேயில்லை. தங்கள் அழைப்புக்கிணங்கியும் எனது நண்பரும், சகோதரருமாஞ்சையும்உள்ள திரு. நடேசமுதலியார் அவர்களை முன்னிலைவகித்தும் நடத்தும், விழாவுக்கு நான் அவசியம் வரவேண்டுமென்றும் ஆலசப்பட்டும் வந்தேன். ஆனால் நினைத்திருந்தபடியாக அமைந்துவிட்டதில்லை. மற்ற இடங்களில் பேசுவதற்கு எனக்கு எவ்வளவு உற்சாகமும், ஆவலுமிருக்குமோ அவ்வளவு உற்சாகமும் ஆசையும் இங்கேபேச எனக்கு உண்டாகவில்லை. மற்றும் என் மனதிற்கு வருத்தமாகவே இருக்கின்றது.

ஏனெனில் இந்த சமயமானது எந்த நிட்டத்தில் கடைபெற இருக்கின்றதோ அத்திட்டங்களுக்கு நேர்மாறான அபிப்பிராயமுடையவனுயிருக்க இன்று இந்த கொண்டாட்டமான தினத்தில் அதற்கு சம்பிரதாயமாக பேசுவதென்றால் அதுயாருக்கும் சந்தோஷமாகவே இருக்கப் போகின்றது? ஆனாலும் தலைவர் அவர்கள் இவ்விஷயத்தில், எனது அபிப்பிராயத்தையும் யோசனையையும் சொல்லவேண்டுமென்றே கேட்டதாலும், என்னைக்கேட்டதாலே பேசவேண்டுமென்று கூப்பிட்டதாலும் நான் இவ்விஷயத்தில் எனது அபிப்பிராயத்தைச் சொல்லிவிடுகிறேன். அதைத் தாங்கள் தங்கள் சொந்த அறிவைக்கொண்டு யோசித்துப்பாருங்கள். சகோதரர்களே! நமது மக்களுக்கு மூடநம்பிக்கையில் அறிவுப் பழக்கமேற்பட்டு விட்டதால் பகுத்தறிவை உபயோகிப்பது என்பது மிகுந்த கஷ்டமான காரியமாக இருக்கின்றது. ஆனாலும் சில முக்கிய விஷயங்களில் மூட நம்பிக்கையால் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக சிறிது கஷ்டத்துடனும், கஷ்டத்துடனுமே பகுத்தறிவைக் கிளறிவிடவேண்டியதாகின்றது. சகோதரர்களே! நாட்டுக்கு கெடுதியான ஒரு வேகம் மூட நம்பிக்கையின் பயனுய் ரயில் வண்டி மாதிரிபோய்க் கொண்டிருக்கின்றது. ரயில்வண்டி கூடாது என்று சொல்லும் ஒருவனை அதை இல்லாமல் செய்துவிட ஓடும் ரயிலுக்கு முன்னால் போய் நின்று தடுப்பதால் என்ன பயன் விளையுமோ அந்தப்பயன்தான் எனது அபிப்பிராயத்திற்கு விளையும் என்பது எனக்குத் தெரியும். ஆதலாலேயே நேரவேகத்தில் போய் மூட்டிக்கொளளாமல் அதன் அல்லாரத்தில் வேலை செய்யவேண்டுமென்று கருதி அனேக விஷயங்களில் நான் நிதானமாய்ப் போய்க்கொண்டிருக்கின்றேன். ஆனாலும் இத்தகாதிரி தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் பட்டுக்கொள்ளுகிறேன். ஆகிலும் கடைபதை நடக்கட்டும் என்றேநான் இப்போது பேசப்போகிறேன்.

சகோதரர்களே! உங்கள்சங்கக்கொள்கையில் அதாவது சுதேசி ஜவுளி வர்த்தக சங்கம் என்பதில் நீங்கள் கருதி இருக்கும் சுதேசமென்பதொழில் கைவிடவு, கைனூற்பு வண்டின்றவைகளையே மூலதனமாக்கிய நிட்டங்களாய் வைத்திருப்பது என்பதில் நான் விரோதமான அபிப்பிராயமுடையவனுயிருக்கிறேன்.

முதலாவது சுதேச கைத்தொழில் என்பதையே எடுத்துவிடவேண்டும் என்றும் அந்த உணர்ச்சிகூடாதென்றும் சொல்லுகின்றேன். சுதேச தொழில் என்று இருந்தாலும் பாதகமில்லை ஒவ்வொரு தொழிலும் கையால் செய்ததாகவே இருக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. நமது நாட்டுப் பொருளாதாரத்தில் பெரும் தொழில் பெருக்கத்திற்கும் கைத்தொழிலையே அதாவது கையினால் செய்யும் தொழிலையே வித்தி செய்வதும் புத்தியிர் அவிப்பதும் ஆதரிப்பதும் என்பதான காரியங்கள் தொழிலுக்கும், பொருளுக்கும், தொழிலாளிக்கும்கேடு செய்வதாகும். முக்கியமாக கதர் என்று சொல்லும் விஷயம் இன்னமும் மோசமானதாகும். அதனால் தொழில் முறை வித்தியும் இல்லை, பொருளாதார விர்த்திக்கும்இடமில்லை, தொழிலாளிகளுக்கும் பயன் இல்லை. அதுபோலவேதான் கைத்தறி, கை செசவு என்பனைகள் எல்லாம் தொழில் முறைக்கு கேடுவிளைவிப்பதும் தொழிலாளிகளின் மேற்போக்குக்கும், விடுதலைக்கும் எதிரியுமானதாகும். அது நாகரீக முன்போக்கலடையவேண்டிய நாட்டிற்கு சிறிதும் பொருந்தாததுமாகும். அன்றியும் இந்த உணர்ச்சி சம்பந்தப்திற்கும் பொது உடைமை சந்தர்ப்பத்திற்கும் மாறுனதுமாகும். இவ்வளவாத் தீரமல்லாமல் நியதைக்கும்அதோடு மனிதத்தன்மைக்கும் முரண்பட்டதும் காரியத்தில் சித்திபெறமல் போவதோடு தாழ்ந்த எத்தடும் மூன்னேற்றத்தையும் தடுப்பதுமாகும்.

சகோதரர்களே! இன்னைக்கு கதர் எற்பட்டு பத்து பன்னிரண்டு வருஷங்களாகியும் சுமார் 40, 50 லக்ஷ ரூபாய் இதன்தொழில் முறை பிரசாரத்திற்கு மாதமிரம் இந்நாட்டு மக்கள் பணம் செலவு செய்யப்பட்டு நாடு தரை தூரில் ஏடுபடுகியும், என்னமாலன எற்பட்டது? எனபதை எனனியுக்கள் இதற்கு ஆகவே கூட்டப்பட்ட இந்தக்கூட்டத்தில் 100க்கு 5-பேராவது கதர் சட்டினவர்கள் காணப்படுகிறீர்களா? அப்படித்தான் சற்று குறைவாகவேக் காணப்படுவதாக வைத்துக்கொண்டாலும் இவர்கள் தங்களது பெண் பிள்ளைகளுக்கு 1000ல் ஒருவர் வீதமாவது வாங்கிக் கொடுத்து அதைப் பயன்படுத்துகின்றவர்கள் இந்தக்கூட்டத்தில் எத்தனை உண்டோ? என்று யோசித்துப்பாருங்கள்.

இதைநான் இந்த கதராபிமானிகள்மீது குற்றமாக சொல்லவரவில்லை. ஆகாத முடியாத-இயற்கைக்கும் மனிதத்தன்மைக்கும் விரோதமான காரியத்தில் எதோ வேகத்தில் எதோ ஒரு காரியத்தை உத்தேசித்து தலையிட்டுவிட்டு விழிக்க நேரிட்டுவிட்டது என்றுதான் சொல்லுகின்றேன். கதர் ஸ்தாபகர்களுக்கு சோறு போடுகின்றது என்பது பொருளற்றவார்த்தையேயாகும். அது சில இடங்களில் வேண்டுமென்றே எமாற்ற உபயோகப்பட்டு வருகின்றது. பாமர ஜனங்கள் இதை நம்பி ஏமாந்து விடுகின்றார்கள். கதரின் தத்துவத்தால் இந்த நாட்டில் யாரும் பலனடைய வில்லை. பலனடையவும் முடியாது. ஆனால் கதரைப்பற்றி திரித்தும் குழப்பியும் பிரசாரம் செய்வதால் சிலர் அதனும் மற்றவர்களுடைய அளவுக்கு மிஞ்சிய கஷ்டத்தால் பயனடைகின்றார்கள். எப்படி என்றால் நேற்று நான் திருவாரூரில் இருந்து வரும்போது எனக்கூட இச்சாகத்தின் தலைவர் மிஸ்டர் கதர் வியாபாரி ஜனப் முகமது அல்தான் சாயபு அவர்கள் கூட்டாளி திரு. வ. ப. மா. முதலியார் பிரயாணம் செய்தார். அவரிடம் நான் சில விபரம் தெரிந்தேன். அதாவது 18 செப்டம்பர் மில் நவினுய் செய்யப்பட்ட துணி 50 இஞ்ச அகலம் கெஜம் ஒன்றுக்கு 3 அணு 6 பைசுக்குவித்ததாகச் சொன்னார். ஆனால் அதே அகல நீளம் கதர் 18 நெம்பர் நூலாய் இருந்தால் கெஜம் 12 அணுவுக்கு மேல் அடக்குவதாகவும் 10 நெம்பர். 8 நெம்பராய் இருந்தால் கெஜம் 9 அணுவுக்கு கொடுக்கலாம் என்றும் சொன்னார்.

ஆகவே மக்கள் 0-3-6-க்குப்பதிலாக 9 அணு. 12 அணுபோடுவதால் மத்திரம்தான் 'எழைகள் பிழைக்கலாம்' என்று சொல்லப்படுகின்றதே தவிர அந்தத் தொழிலினுல் யாரும் பிழைத்தில்லை. ஆகவே இது பார்ப்பனர்கள் பிழைக்க என்ற மற்றவர்களுக்குக் கடவுள் பேரால் போடும் ஒரு முட்டாள் வரிபோல் வேறு சிலர் பிழைக்க என்று கதர்வரி என்பதாக கதர் கட்டுவரிடம் வசூலிக்கப்படும் ஒருவித வரித்திட்டமேயொழிய கதர் ஒரு தொழில் திட்டமல்லவென்றும் அதனுல் யாரும் யோக்கியமாய் பிழைக்க முடியாதென்றும் நான் உறுதியாய்ச் சொல்லுவேன்.

கதர் பக்தர்களுக்கு இது புரியாவிட்டாலும், கதர் கர்த்தாக்களுக்கு இந்த அபிப்பிராயம் புரிந்ததுதான். ஜனங்கள் கண் விழித்த பிறகு அவர்களும், தங்கள் அபிப்பிராயங்களை இப்போது மாற்றக்கொண்டார்கள். உயர்திரு. காந்தி அவர்களே இப்போது இன்ன நடை பெறும் கதர் திட்டம் பயன் படாதென்று கருதி ஒரு யந்திரம் கண்டு பிடிக்க ஆசைப்பட்டு குறைந்த சேரத்தில் கொஞ்ச கஷ்டத்தில் அதிகமான அளவு நூல் நூற்கும்படியான ஒரு புதிய இயந்திரத்தைக்கண்டுபிடிப்பவர்களுக்கு லட்ச ரூபாய் பரிசு கொடுப்பதாக விளம்பரம் செய்திருக்கிறார். இதன் கருத்து என்ன? கைத்தொழிலிலிருந்து—சைராட்டினத்தில் இருந்து யந்திரத்தொழிலுக்கு--யந்திர ராட்டினத்திற்கு பாய்ந்திருக்கிறார் என்பதல்லவா? என்று கேட்கின்றேன்.

அப்படிப்பட்ட யந்திரக்கண்டு பிடித்தால் சைராட்டினம் என்ன கதியாகுது? இப்போது சைராட்டினத்தில் நூல் நூற்ற "ஏழை"களுக்கு நாளைக்கு கதி என்ன? இந்தக் கதர் என்னகதியாவது? என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள்.

தவிரவும் கதர் கர்த்தாக்களே கதர் விஷயத்தில் பலவித அபிப்பிராயம் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

அதாவது, கதரே தான் இந்தியாவின் விடுதலை என்று ஒருவரும், யந்திரங்கள் வரும்வரை கதர் என்று ஒருவரும், வேலையில்லாத நேரத்தில்வேலை கொடுக்க என்று ஒருவரும், வேறு தொழிலுக்கு மார்க்கம் காணும் பிடிக்குமட்டும்தான் கதர் என்று ஒருவரும், சும்மா இருக்கும் ஓய்வு நேரங்களில் ஆண்பெண் சகலரும் கதர் நூல் நூற்பதின் மூலம் ஜவுளியே சம்மாகிடைத்துவிடும் என்று ஒருவரும், கதர் சுற்றுவதில் ஒரு ஒங்காரம்—பிராணவசப்தம் ஏற்பட்டு எதிரிகளை அழித்துவிடும் என்று ஒருவரும், இந்தப்படி கடவுளுக்கு லக்ஷணம் சொல்லுவதற்கு மேலாகக் கதருக்கு லட்சணம் சொல்லுகின்றார்கள். ஆனாலும் கடைசியாக அது ஒருவாரியாக வசூலிக்கப்பட்டு சிறிது பாகமே ஏழைகளுக்குப் போய்ச் சேரும்படி யான செப்பிடுவித்தையாகவே முடிந்து விட்டது. நிற்க,

மற்ற தொழில் விஷயங்களிலும், கைத்தொழில என்கின்ற மனப்பான்மையை விட்டொழிக்க வேண்டும். கைத்தொழில் சாமான்களையே ஆதரிப்பது என்கின்ற மனப்பான்மையையும் விட்டொழிக்க வேண்டும். அது பயனபடாத காரியமாகவே ஆகிவிடும். இன்றையதினம் நம காட்டில்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

குடி அரசு

ஞாயிறு 1931 வது ஜூன் மீ 14உ

நன்நிலம் மகாநாடு ஹிந்தி கண்டனம்.

தஞ்சை ஜில்லா நன்நிலத்தில் இம்மாதம் 7-ந்தேதி கூடிய நன்நிலம் தாலூகா மகாநாட்டில் ஹிந்தி பாஷையைக் கண்டனம் செய்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது. அத்தீர்மானமாவது:—

"பழைய புராணக் கதைகளைச் சொல்லுவதைத்தவிர வேறு அறிவு வளர்ச்சிக்கும், மற்ற பொது விஷயங்களுக்கும் உதவாத சமஸ்கிருதமும் ஹிந்தி முதலிய பாஷைகளைத் தேசியத்தின் பேரால் அரசியல் காரணங்களுக்காகவென்று படிக்கச் செய்வதானது பார்ப்பனீயத்திற்கு மறைமுகமாக ஆக்கம் தேடுவதாகுமென்று இம்மகாநாடு கருதுவதோடு, தற்கால விஞ்ஞான அறிவை நமது மக்களிடம் பரவவும், நவீன தொழில் முறைகளை நமது நாட்டில் ஏற்படுத்தவும் மற்ற, தேசங்களில் எழுமபி யிருக்கும் சீர்திருத்த முற்போக்கு உணர்ச்சிகளை நமது மக்களிடம் தோற்றுவிக்கவும், உலக பாஷையாக வழங்கிவரும இங்கிலீஷ் பாஷையையே நமது வால்பார்கள் கற்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது."

என்ற தீர்மானமாகும். இதைப் பற்றி நாம் 1925ம் வருஷத்திலேயே 'குடி அரசு' பத்திரிகையில் "தமிழுக்குத் துரோகமும், ஹிந்தியின் இரகசியமும்" என்பதாக ஒரு வியாசம் எழுதி இருக்கின்றோம். அதுமாத்திரமல்லாமல "இந்துமதப் புராண இதிகாசங்களை உண்மையாய் உணரவேண்டுமானால்—துளசிதாஸ் இராமாயணத்தை நன்றாய் அறியவேண்டுமானால் ஹிந்தி படிக்கவேண்டும்" என்று சென்னை திருவாளர். கே. பாஷ்யம் அய்யங்கார் என்ற "ஒரு தேச பக்தர்" சென்ற வாரத்தில்கூட பேசி யிருக்கின்றார். இதிலிருந்தும் ஒரு வாறு ஹிந்தியின் இரகசியம் அறியலாம்.

அன்றியும் ஹிந்தி பாஷையைப்பொது பாஷையாக ஆக்குவது முடியாத காரியமென்றும், அது கூடாத காரியமென்றும், பார்ப்பனீயப் புராணக் கதைகளை பறப்பத்தான் முடியுமென்றும் வங்காளம் மாடர்ன் ரிவ்யூ பத்திராதிபரான பாபு ராமானந்த சட்டர்ஜி அவர்கள் தமது பத்திரிகையில் எழுதி இருக்கிறார்கள்.

இதிலிருந்தும் ஒருவாறு ஹிந்தியானது பார்ப்பனப் பிரசார பாஷை என்றும், அரசியலுக்கு ஆதுசாத்தியப்படாத பாஷை என்றும் விளங்கும்.

இந்நாட்டில் பார்ப்பனீயம் தாண்டவமாடத் தொடங்கிய காலம் முதல் எதாவது ஒரு வகையில் புராணங்களையும், பார்ப்பனீயங்களையும், பறப்பும் நோக்கத்துடனேயே எல்லாப்பாஷைகளும் ஆதிக்கம் பெற்று வந்திருக்கின்றன. உலக வழக்கில் ஒரு சின்னக்காசுக்கும் பயன்படாத சமஸ்கிருத பாஷைக்கு இன்றையதினம் இந்நாட்டில் இருக்கும் ஆதிக்கமும், அதற்கெனவே பல எற்பாடும், செலவும், மெனக்கேடும் பார்ப்பனீயத்தைப் பறப்பவே செய்யப்பட்டு வருகின்றன. சமஸ்கிருத காலேஜ், சமஸ்கிருதப் பாடசாலை, மற்றும் சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஏற்ற முயற்சிகள் முழுவதும் சமஸ்கிருதம் வாழ்க்கைக்குச் சிறிதுபாகமும் வேண்டிய அவசியமில்லாத மக்களின் செலவிலேயே நடைபெற்று வருகின்றன. இது இந்த நாட்டு மக்களின் சுயமரியாதையற்ற தன்மைக்கு ஒரு பெரும் உதாரணமாகும். இதை தட்டிப்பேச இன்றைய சட்டசபை, மந்திரி சபை ஆகியவைகளில் ஒரு சிறு மூச்சுவிடவும் ஆள்கள் இல்லை. போதாக் குறைக்கு இன்று ஹிந்தி பாஷை ஒன்று புதிதாக முளைத்து இந்திய மக்கள்மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிகள் வெகு பலமாய் செய்யப்பட்டு வருகின்றது. இது இந்நாட்டு மக்களுக்கு பாஷை விஷயத்திலும் சுயமரியாதையில்லையென்பதற்கு ஒரு உதாரணமாகும்.

தமிழ் நாட்டுக்கு ஹிந்தி என்ன அவசியத்திற்கு என்று கேட்க ஒரு தேசபக்தராவது இன்று தேசீய வாழ்வில் இல்லை. தேச பக்த குழாம் பெரிதும் கூலிக்கு மாறடிப்பவர்களாலேயே நிறப்பப்பட்டு விட்டதால் பார்ப்பனத் தலைவர்களுக்கும், பார்ப்பனர்களால் பிடித்து வைக்கப்பட்ட தலைவர்களுக்கும் அடிமைகளாய் இருந்து அவர்கள் உபதேசித்த தேசீய மந்திரத்தை உருப்போட்டு ஜெபித்து வயிறு வளர்ப்பதைவிட வேறு யோக்கியதை இல்லாமல் போய்விட்டது.

இந்த நாட்டில் இன்றைய தமிழ்பாஷையேதமிழ் மக்களின் சுயமரியாதைக்கும், மனிதத் தன்மைக்கும், சுதந்திரத்திற்கும் நேர் விரோதமாக விருக்கின்றது என்பதைப் பல தடவை சொல்லி வந்திருக்கின்றோம். இன்றைய தமிழ் பாஷையில் பெரிய இலக்கியமாய் பாவிக்கப்படுவதாகிய கம்பராமாயணம் பெரிய புராணம் ஆகிய இவ்விரண்டும் கூட மானமுள்ள, சுயமரியாதை-வீரம் ததும்பிய, இரத்த ஓட்டமுள்ள தமிழ்மக்களால் சுட்டுப்பொசுக்க வேண்டிய புஸ்தகமாகும். தமிழ்மக்கள் என்று சொல்லிக்கொள்ளுகின்றவர்களுக்கு போய நமானஉணர்ச்சி இல்லாததாலேயே அவற்றிற்குதமிழ்நாட்டில் இன்னமும் இடமிருக்க வேண்டியதாகிவிட்டது. இன்றையதினம் தமிழ் படித்து தமிழ் பாஷையில் பற்றுகொண்டு தமிழைத் தாய் பாஷையாய்க்கொண்ட ஒருவனுக்கு தன்னுடைய தமிழ் தாய் வடமொழிப் புருஷனுடன் சோரத்தனம் செய்து கொண்டிருக்கின்றாளா? இல்லையா வென்றும், பிள்ளைகளையெல்லாம் கூட வடமொழிப் புருஷனுக்கு உதவும்படியாகவே அவனைப்போலவே பெற்றுக் கொண்டுமிருக்கின்றாளா? இல்லையாவென்றும், அப்படிச்சோரத்தனம் செய்ததில் முதல்தரப்பிள்ளைகளாயும், சிரஞ்சீவிப்பிள்ளைகளாயும் இந்தக்கம்பராமாயணமும் பெரிய புராணமும் இருக்கின்றதா இல்லையா? என்றும் கேட்பதோடு இந்த வடமொழிப்புருஷனுக்கு தங்களது தமிழ்த்தாயை கூட்டிவிட்டு பெருமையடைவதன் மூலமே தமிழ் பண்டிதர்கள் இன்று உயிர் வாழ்ந்து ஜீவனம் செய்து வருகின்றார்களா? இல்லையா வென்றும் கேட்கின்றோம்.

தமிழ்த்தாய் தாலூகாவே சமஸ்கிருதப்புருஷன்மீது ஆசைப்பட்டு "விபசாரம்" செய்வதில் நமக்கு ஆக்ஷேபணை இல்லை. ஆனால் இந்த பண்டிதர்கள் தங்கள் வயிற்றுப்பிழைப்புக்கு, தங்கள் சுயநலப்பெருமைக்கு தமிழ்த்தாயை கூட்டி விட்டுப் பிழைப்பதைத்தான்நாம் வெறுக்கின்றோம். அப்படிக் கூட்டிவிடுவதாவது தமிழ்த்தாயின் மக்கள்சமூகத்திற்காவது அவர்களதுசுயமரியாதைக்காவது ஆபத்தில்லாமல் இருக்குமானால் நமக்கு ஆக்ஷேபணையில்லை. அப்படிக்கின்றி இன்று நாட்டைப்பாழாக்கி விட்டது இந்த சமஸ்கிருதப் புருஷனிடம் தமிழ்த்தாயை சம்பந்தப்படுத்தியதே என்று தெரிந்து இருந்தும், மறுபடி இதையே ஆதரித்தால் இதற்கு எதை ஒப்பிடுவதென்பது நமக்கு விளங்கவில்லை. இது இப்படியிருக்க இப்பொழுது மற்றொரு புருஷனை (ஹிந்தி பாஷையை) தமிழ்த்தாயிக்கு நமது தேச பக்தர்கள் கண்டுபிடித்து இருப்பது மிகவும் ஆச்சரியமாகவே இருக்கின்றது. இனி தமிழ்த்தாயிக்கு தகுந்த புருஷன் வேண்டுமானால் மானத்துடனும் வீரத்துடனும் அறிவுடனும் பிள்ளைகளைப் பெற்று அவைகளை வைத்துக்காப்பாற்றும் புருஷன்தான் இருக்க வேண்டும். அதுவும் தகுந்தபடியான சுதந்திர காதல் மணமாகத்தான் செய்விக்க வேண்டுமேயொழிய இனியும் இம்மாதிரி வயிற்றுப் பிழைப்பை மாத்திரம் கருதிய சம்மந்தமாகவும், அதுவும் தமிழ்த்தாயிக்கு அல்லாமல் மற்றவர்களுடைய சுயநலத்திற்காகவும் இருக்கும் அடிமை மணமாகவும் இருக்கக்கூடாது என்றே சொல்லுவோம்.

தமிழ்த்தாயிக்கு போக்கியதை இருந்து அவள் தகுந்தமான முள்ள மக்களைப்பெற்று இருந்தால் நாட்டு நலனுக்கு ஏற்றசகல விஷயத்தையும் தமிழிலேயே ஆக்கியிருக்கவேண்டும். நாட்டிற்கு தமிழே போதுமானதாயிருக்கவேண்டும். அப்படி இல்லையானால் தமிழ்த்தாயின் தகுதிக்கும் அவசியத்திற்கும் ஏற்றது எதுவோ அதைக்கொள்ளவேண்டும். இன்றையத்தினம்நாட்டிற்கு கவியழகு, கற்பனையழகு, புராண அழகு, மோட்ச அழகு, பகவான் வாக்கு அழகு, அவதாரப்பெருமை அழகு அல்ல வேண்டியிருப்பது. இவை சோம்பேரிகளுக்கும் மக்கள் கஷ்டத்தை உணராத வன்நெஞ்சர்களுக்கும், ஊரான்உழைப்பில் வயிறு வளர்க்கும் அயோக்கியர்களுக்கும் அவசியம் உணரமுடியாத அறிவிலிகளுக்குமே இவை வேண்டியதாகும். மற்றபடி மானமுள்ள மக்களுக்கு—பகுத்தாபமுள்ள மக்களுக்கு—யோக்கியர்களுக்கு அறிவாளிகளுக்கு இந்தியாவின் 35கோடிமக்கள் சமத்துவ உணர்ச்சியுடன் இருக்கவும் வயிறுப்பிழைப்புக்கு மானத்தை விற்காமல்வாழவும், பணக்காரன் படித்தவன், மேல்ஜாதிக்காரன் என்கின்ற வஞ்சகர்களால் மிதிபட்டுநசுக்கப்படாமல்இருப்பதற்கும்குழந்தைகளுக்கு பூச்சாண்டியையும், காக்கையையும் பிராக்கு காட்டி கையில் இருப்பதை தட்டிப்பிடிங்கிக்கொள்வது போல் மோட்சத்தையும், காவியத்தையும், கவியழ

கையும, கடவுளையும், கலைக்கையும் காட்டித் சட்டிப்பிடுங்கிக் கொள்ளாமல் அவரவர்கள் பாடுபட்டது அவரவர்களுக்காவது உதவவும், "நீ வீதியில் நடக்க வேண்டாம். அருகில் வரவேண்டாம். கண்களில் தென்படவேண்டாம், படிக்க வேண்டாம், "சர்வதபாடரனும், சர்வ கருணை மூர்த்தியும், சர்வசக்தனும்" ஆகிய "கடவுளிடம்" கூட பக்கத்தில் நெருங்க வேண்டாம்" என்கின்ற அயோக்கியத்தனம் நீங்கவும் வேண்டியது முக்கியமாய் இருக்கின்றபடியால் அதற்கு எந்த பாஷை வேண்டும்? எந்த பாஷைப்படித்தால் இந்தமாதிரியான அறிவுபுத்தி நீங்கும்? என்பதுதான் நமது கேள்வி. ஆகவே இன்றைய இந்தத் தேவைக்கு-இன்று இந்த நாட்டிற்கு ஹிந்தி வேண்டுமா? இங்கிலீஷ் வேண்டுமா? என்பதை மானத்துடன் உள்ளவர்கள் நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பார்த்துசொல்லட்டும்என்றே வேண்டுகின்றோம். ஹிந்திபாஷையை படிக்கவேண்டும்என்கின்றநிர்ப்பந்தத்தைகாங்கிரசில் கொண்டுவந்து புகுத்தியதே வருணச்சிரமத்தை நிலை நிறுத்தவும் அதைக் கட்டாயப்படுத்தி மக்களுக்குள் புகுத்தவுமே செய்த சூக்ஷியான காரியமாகும். இந்த அயோக்கியத்தனத்திற்கு திரு. காந்தி அவர்கள் கண்டிப்பாய் உளவாளி என்றே சொல்லுவோம். இதனால் வாய் வெந்துபோவதானாலும் சரி, தலையில் இடிவிழுவதானாலும் சரி. முன்காலத்துரிஷிகளும், முனிவர்களும் நமக்கு எவ்வளவு கொடுமையை விளைவித்தவர்கள் என்பதாக இப்போதைய மானமுள்ள மக்கள் எப்படிக் கருதுகின்றார்களோ அதற்குஒரு முந்திரிகூடகுறைவல்ல இன்றைய மகாத்மாக்களால்நமக்கு வரும் ஆபத்தும் இழிவும் என்பதில் எமக்குச் சிறிதும் சந்தேகமில்லை. யாருக்காவது சந்தேகம் இருந்தால் சென்ற வாரம் திரு காந்தியவர்கள் யங் இந்தியாவில் "வர்ணச்சிரம தர்மம்" என்கின்ற தலைப்பில் எழுதிய தலையங்கத்தை யுற்று கவனியுங்கள்.

'வருணச்சிரம தர்மங்களில்குறிப்பிட்ட நான்கு தர்மங்களில்என க்குநம்பிக்கையுண்டு. இந்தப்பாகுபாடுகள் பரம்பரைத் தொழில் சம்பந்தமாக ஏற்பட்டது'

'பிராமணன்வித்தைகற்றுக்கொடுக்கவும், க்ஷத்திரியன்சக்தியற்றவர்களைப் பகைவரிடமிருந்துகாக்கவும், வைசியன்உழவுத்தொழில் செய்ய சூத்திரன்உடலால்உழைத்துவேலைசெய்யவும் என்று ஏற்பட்டவைகளாகும்.'

"இந்துமதம் இவற்றை ஜனசமூக வாழ்வில் அங்கீகரித்து கிரமமாக நடத்தையிலும் அனுஷ்டித்து வருகின்றது."

இந்தப்படியான அவரவருக்கு உரியகாரியத்தைஅவரவர்செய்யத்தவறியதால் தான் இப்போது வருணதருமம் அழிந்து பல ஜாதிகள் தோன்றின."

"வகுப்பு ஒற்றுமைக்கும் கலப்பு விவாகம், சமபந்தி போஜனத்திற்கும் யாதொரு சம்பந்தமுமே இல்லைஎன்பது எனதுதிடமான அபிப்பிராயம்."

"கலப்பு விவாகங்களால் நாட்டில் வகுப்பு ஒற்றுமை ஏற்பட்டுவிடுமென்று நான் நம்பவில்லை."

"மனிதர் யாவருமேசமம். ஆனால்இந்தசமம்என்பது ஆத்மாவைப்பொறுத்தவரையில்தானே யொழிய சரீரத்தை பொறுத்தவரை சமமல்ல."

என்றகுறிப்புகளை அதில்எழுதி இருக்கிறார். இந்தமாதிரியானவருணதர்மத்தைநிலைநாட்டவந்தபுருஷனை 'பிராமணர்கள்' மகாத்மாஎன்றுகூறுவதிலும், அவரைப் பின்பற்றுவதிலும், அவர் சொல்லுகிறபடியெல்லாம்ஹிந்தி படிப்பதிலும், கீதை படிப்பதிலும், ராமராஜ்யம் ஸ்தாபிப்பதற்காக கள்ளுக்கடை, ஜவுளிக்கடை மறியல் செய்வதிலும் யாதொரு அநியாயமும் கொள்ள இடமில்லை. ஆனால் "நாங்களும் சுயமரியாதைக்காரர்கள்தான்" தமிழ் மக்கள் இந்தமாதிரியான வருணச்சிரமத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல ... ... என்று சொல்லுகின்ற மக்கள் இந்த மகாத்மாவையும், அவர்களை மகாத்மாவாக்கின பார்ப்பனர்களின் வால்களையும் பிடித்துத் தொங்கிக்கொண்டு திரிவதில்தான் நமக்கு அதிசயம் காணப்படுகின்றது.

இதைப் பார்க்கின்றபோது "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்று சொன்ன வார்த்தை மிகவும் பொருத்தமும், அருத்தமும் கொண்ட வார்த்தை என்றே தோன்றுகின்றது.

——

தமிழ் மாகாண மகாநாடென்பதுமறு படியும் பார்ப்பன பிரசாரமேயாகும்.

சென்ற ஒரு வருஷகாலமாய் இந்திய நாட்டில் நடைபெற்ற ஒருவித "அரசியல் கிளர்ச்சி" நாடகத்தின் பயனுய் தமிழ்நாட்டில் பழைபடி பார்ப்பன பிரசாரம் தைரியமாயும் வெளிப்படையாயும் துவக்கப்பட்டுவிட்டது. இதை நன்றுப் உணரவேண்டும் என்பவர்கள்இம்மாதம் 6,7 தேதிகளில் மதுரையில் தமிழ் நாட்டு மக்கள் பேரால் நடை பெற்ற "ஏமாற்றுத்திருவிழா" (தமிழ் மாகாண மகாநாட்டு) நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்த்தவர்கள் உணரக்கூடும்.

முதலாவது இந்த ஏமாற்றுத் திருவிழாவானது தமிழ் நாட்டு 13 ஜில்லாக்களின் சுமார் 2½ கோடி ஜனங்களின் பிரதிநிதித்துவமாக நடத்தப்படுவதாக எவ்வளவோ விளம்பரப் படுத்தியும் அதற்குத் தெரிந்தெடுக்கப்பட்டு கிடைத்தத்தலைவர் யார் என்பது ஒரு முக்கிய விஷயமாகும்.

திரு. S. சத்திய மூர்த்தி அய்யர் தமிழ் நாட்டு 2½ கோடி மக்களின் முன்னேற்றத்திற்கு தலைவரென்ற காரணத்தாலேயே அந்தத் திருவிழாவுக்கு ஆள்பட்ட பார்ப்பனரல்லாதாரின் பரிதாபநிலைமைக்கு வேறு அத்தாக்ஷி வேண்டியதில்லை. அவரைத்தவிர வேறு யாரும் தெரிந்தெடுக்க கிடைக்கவுமில்லை, முடியவுமில்லை. எனவே இந்த ஸ்தானம் தமிழ் நாட்டு பொது ஸ்தாபனமாம்!

நிற்க திரு சத்தியமூர்த்தி அய்யருக்கு என்ன கொள்கை? ஜீவனத்திற்கு என்ன வழி? இவர் இந்த நாட்டு பெரும்பான்மையான மக்களுக்கு எப்படிப் பிரதிநிதியாக உரியவர்? இவரது சொந்தத்தன்மைதான் என்ன? மூன்பின் நாணயம் என்ன? இந்நாட்டு மக்களின் நன்மைக்கு இவர் எப்படி பொறுப்பாளி? என்பவை போன்ற காரியங்களால் அந்த ஸ்தாபனத்தின் யோக்கியதையை ஒருவாறு உணரலாம்.

இதுதவிர இம்மகாநாட்டுக்குச் சென்றிருந்த பெரும்பான்மையான மக்கள்யாருடையபிரதிநிதிகள்? அவர்களின் தன்மையென்ன? கொள்கை என்ன? அவர்கள் இந்நாட்டுப் பெரும்பான்மையான மக்களுக்கு எந்தவகையில் பிரதிநிதிகளாக வந்தவர்கள்? என்பவைகளை யோசித்துப்பார்த்தால் பிரதிநிதிகளின் யோக்கியதைஒரு வாறு விளங்கும்.

மற்றும் இந்த நாட்டுப்பார்ப்பனரல்லாத மக்களின் பிரதிநிதிகள் எத்தனைபேர்? முஸ்லீம் பிரதிநிதிகள் எத்தனைபேர்? தீண்டப்படாதவர்கள் என்பவர்களின் பிரதிநிதிகள் எத்தனைபேர்? என்ற கணக்கைப்பார்த்தாலும் மற்றொரு விதத்தில் அதாவது இந்த நாட்டில் "தெய்வீகமாகவும்" மத சம்பந்தமாகவும், ஜாதி வகுப்பு சம்பந்தமாகவும் ஏற்பட்ட பிரிவுகளுக்கெல்லாம் இந்த ஸ்தாபனம் எப்படி பிரதிநிதித்துவம் பொருந்தியது என்பதும் ஒரு வாறு விளங்கும்.

இவைகள் எல்லாம் ஒருபுறமிருந்தாலும் அந்த விழாவுக்குச் சென்ற பார்ப்பனரல்லாதார் வகுப்பைச்சேர்ந்த பிரதிநிதிகள் எப்படி மதிக்கப்பட்டார்கள்? அவர்களுடைய அபிப்பிராயங்கள் எப்படி கவனிக்கப்பட்டது? என்பவைகளைக் கவனித்தால் அதன் காணியமும், யோக்கியப்பொறுப்பும், எண்ணத்தின் தன்மையும், போனவர்களின் சுயமரியாதையும் ஒருவாறு விளங்கும்.

இவை ஒருபுறமிருக்க அந்தத் திருவிழாவில் செய்யப்பட்ட தீர்மானங்களின் யோக்கியதையைப்பார்த்தாலோ மற்ற விஷயங்கள் எல்லாம் தானாகவே புலப்பட்டு விடும். இவற்றைப்பற்றி பின்னால் யோசிப்போம். தலைவர் திரு சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் உபன்யாசத்தில் காணப்படும் முக்கியமானதும் அவரது உள்ளம் முழுவதையும் ஆக்கிரமித்துக்கொண்டதுமான முக்கிய விஷயம் ஒன்றே ஒன்றுதும். அதுஎன்னவென்றால்,

"ஸ்தலஸ்தாபனங்கள் இப்போது மிகவும் சீர்கேடடைந்து விட்டதாதலால் அதைக் காங்கிரசுக்காரர்கள் கைப்பற்றவேண்டும்" என்பதேயாகும். "கோடி வித்தலுனுகூட்டிக்கு" என்று தெலுங்கில் ஒரு பழமொழியுண்டு. அதாவது கோடி வித்தைகளும் (சகல சாமர்த்தியங்களும்) சோற்றுக்குத்தான் என்ற பொருள் கொண்டது. அதுபோலவே பார்ப்பனர்களுடைய இன்றைய தேசீயப் புரட்டுகள் பூராவும் ஜகஜ்ஜாலப்புரட்டுகள் முழுவதும் இந்த ஸ்தலஸ்தாபனம், சட்டசபை, மந்திரி சபை, மற்ற உத்தியோகங்கள் முதலியவைகளைக் கைப்பற்றத்தானே யொழியவேறில்லை. இந்தப்புரட்டை அவர்களால் மறைக்க

முடியவில்லை. எப்படியாவது வெளிப்படுத்தி விடுகின்றார்கள்.

இதையனுசரித்து சில தீர்மானங்களும், மகாநாட்டில் வந்தது. ஆனாலும் அவற்றின்உள்ளெண்ணத்தை சுயமரியாதைக் காரர்கள் கண்டுபிடித்து வெளியாக்கிவிடுவார்கள் என்று கருதி, மறைமுகமாய் அதாவது இப்போதைய தேர்தல் முறைகளைக்கண்டித்து அதை திருத்த கவலைகொண்ட சீர்திருத்தக்காரர்களைப்போல்ஒரு தீர்மானம் செய்து கொண்டார்கள்.

கதர் விஷயத்திலும், கதர்புரட்டை வெளியாக்கி,கதர் இலாகாவையும் கண்டித்து ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு அது விஷயாலோசனை கமிட்டியில் எப்படியோ நிறைவேற்றப்பட்டாய் விட்டது: அதாவது

"கதர் இலாகா பிரதிநிதித்துவம் பொருந்திய தாயில்லாமலும்காங்கிரசின் அமுலுக்கு உட்பட்டு இல்லாமலும் இருப்பதோடு அதன் உத்தியோகஸ்தானங்களில் ஒரே கூட்டத்தினர் நிரம்பி இருப்பது பொதுஜன சபை தத்துவத்திற்கு விரோதமாயிருப்பதால் அதை பொது பிரதிநிதி சபையாக்குவதற்கு விதாசாரப்படி உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டு எல்லா சமூகத்தாராலும் நடத்தப்பட வேண்டும்"

என்பதாகும். இது விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டும் பொதுக் கூட்டத்தில் 5, 6 பேர்களின் ஓட்டுகளால் தோற்றுவிட்டதாக தலைவரால் சொல்லப்பட்டு விட்டது. இந்தமுடிவையும் சபையார் ஒப்புக்கொள்ளாமல் கூச்சல் போட்டும்பயனளிக்கவில்லையாம். இந்த ஓட்டில் பார்ப்பனர் எல்லோரும் ஒரு புறமாகவும், பார்ப்பனரல்லாதார் எல்லோரும்ஒருபுறமாகவும்ஓட்டு கொடுத்தார்களாம். மற்றொருபெரும் புரட்டான விஷயமென்னவென்றால், மகமதியர் தீண்டாதார் ஆகிய "சிறுபான்மையோர் கோரும் உரிமைகளை தாராள மனதுடன் கவனிக்கவேண்டும்" என்பது

சிறுபான்மையோர்உரிமைகளை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்என்றுதீர்மானித்தால் அதுகாலக்குகொடுக்கவேண்டிவந்துவிடுமேஎன்கின்றயுக்தியின் மீதேதான் ருளமாய்க்கவனிக்கப்படும்என்று தந்திரமாகப் போடப்பட்டிருக்கின்றது. இது ஏதோ பெரும் பான்மையோரை பிச்சை கேட்பது போலவும் பெரும்பான்மையோர் தயவுக்கும் தர்மத்திற்கும் கொடுக்கவேண்டியது போலவும் கருதி, பிச்சைக்காரனுக்கு பதில் சொல்லுவதுபோல் 'ஆகட்டும், கவனிக்கலாம்" என்றபாவனைத்துடன் சொல்லும்பதிலேயாகும். இப்படிப்பட்ட ஸ்தானத்தில் சிறுபான்மையோர்களுக்து கொள்ளுவது அவர்களது சுயமரியாதைக்கு எற்றதல்லவென்றே சொல்லுவோம். ஆன்றியும் இத்தீர்மானம் ஏமாற்றுகின்ற மனப்பான்மையுடன் செய்யப்பட்டது என்றும் சொல்லுவோம்.

இனித்தீண்டாமை ஒழிக்கும் விஷயத்தில்,

"காங்கிரசு தீண்டாமையை தொலைக்க வேண்டும் என்ற காங்கிரசு கட்டளையை பற்றி புமாறு கேட்டுக்கொள்ளுகிறது."

"தெரு, கிணறு,பள்ளி,தேவாலயம் ஆகிய வைகளில் இடம் கொடுக்குமாறு வைதிகர்களைக்கேட்டுக்கொள்ளுகிறது" என்பதாகும். அதாவது காங்கிரசின் உத்தேசத்தை ஜனங்களுக்கு தெரிவித்துவிட்டு வைதிகர்களைகேட்டுக்கொள்ளவேண்டியது என்பதுதான் தீண்டாமை ஒழிப்பதின் முயற்சிபோலும்! கள்ளுக்கடை ஜவுளிக்கடையை மாதந்தோறும் மறியல் செய்யவேண்டும் என்பதை போல் மகாநாட்டு தீர்மானம். ஆகவே பார்ப்பன இனத்தாரான வைதிகர்களைக் "கேட்டுக்கொள்ள வேண்டியதாம்" பார்ப்பனரல்லாதார் இவ்விஷயாகியவியாபாரிகளை மறியல் செய்யவேண்டியதும் என்றால் இவர்களது உள் எண்ணம் எவ்வளவு என்பது ஒரு முழு முண்டத்திற்குப் விளங்காமல் போகாது.

அவர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) சுதந்திரம் உள்ள காரியமோ அவர்கள் ஆதிக்கத்திற்கு முறைவு வரும் காரியமோ எதுவானாலும் அதன் அருகே யாரும் போகக்கூடாது. அதை வது தூரநின்று பிச்சைகேட்டுக்கொள்ள வேண்டியது தான் மற்றவர்கள் விஷயத்தில் மறியலே செய்து வெளியாக்கி மானத்தைக்கெடுத்து தங்கள்காரியத்தைசாதித்துக்கொள்ளவேண்டியதுஎன்பது பார்ப்பனர்களுத்து. அதுவே "மகாத்மா" உத்திரவு. அதுவே மகாநாட்டுத் தீர்மானம் என்றால் இவற்றையறிந்தும் மறியல் மறியல் என்றால் அதில் 100க்கு 99 வயிற்றுக்கோடுமையும், நூட்டாள் தனமும் இல்லாமல் வேறு என்னமாய் இருக்கமுடியும்என்பதை வாசகர்களே உணர்ந்துபார்க்கட்டும். தவிர கதரையே கட்டவேண்டும் என்று ஒருதீர்மானமும் உள்நாட்டு நூல்லை நெய்ததுணியையே கட்டவேண்டும் என்று மற்றொரு தீர்மானமும் செய்திருப்பதானது கதரின் சாயம் கொஞ்சம்வெளுத்துப்போனதை அவர்களே ஒப்புக்கொண்டதாகும்.

மற்றொரு தீர்மானம் என்னவென்றால் 'சமூகத்துவேஷத்தை ஜனப்பி விடுகின்றவர்கள் வார்த்தையை நம்பக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகின்றது' என்பதாகும் இதிலிருந்தே இவர்கள் செய்த திருட்டுத்தனம்இவர்கள் மனதையே உறுத்தி முன் ஜாக்கிரதையாக பந்தோபஸ்து செய்துகொண்டார்கள் என்பது புலனாகின்றது. ஆகையால் பார்ப்பனரல்லாத மக்கள் இனியாவது புத்திவந்து தங்கள் சமூக சுயமரியாதைக்குப் பாடுபடுவார்களாக இதைப்பற்றி சென்னை திருவாளர். ம. சிங்காரவேலு செட்டியார் எழுதியதை மறுவாரம் பிரசுரிப்போம்.

திரைசரிப்பத்திரிகை.

சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப்பறப்ப அதற்கென்றே ஒரு தமிழ்ப்பத்திரிகை அவசியமென்றும், அதைஉடனேயே ஆரம்பிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுவதாக சேலம், கோவை, சென்னை, சூலூர் முதலிய விடங்களிலுள்ள தொண்டர்களிடமிருந்தும், சங்கங்களிலிருந்தும் அதிகமான கடிதங்கள் வந்தபடியால் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றோம்.

திரு. ஈ. வெ. இராமசாமி.

திரு ஈ. வெ இராமசாமி அவர்கள் இம்மாதம்11-ந்தேதி ஈரோட்டைவிட்டுப்புறப்பட்டு 12-ந்தேதி திருப்பதிக்கோணம் சென்றுவிட்டு 13-ந்தேதி ஈரோடுவந்து சேர்ந்தார் மறுபடியும் 13, 14-ந்தேதிகளில் நடைபெறும் கோவை முனிசீபல் மகாநாட்டிற்கு 14-ந்தேதி சென்றுவிட்டு 15-ந்தேதியாகில் ஈரோடுவந்துசேர்வார். மற்றும் 18 தேதி கொடைக்கானல் மீட்டிங்கு காரியதரிசியின் அழைப்பை உத்தேசித்து தள்ளி வைக்கப்படுமானால் தஞ்சை ஜில்லாவுக்குப் போவார். 22-ந்தேதி மதுரைஜில்லாவைசேர்ந்த சித்தையன்கோட்டைக்கும், 28-ந்தேதி செங்கிமலைக்குமசெல்லுவார்.

பட்டிவீரன்பட்டி சீர்திருத்த சுயமரியாதை கலப்புதிருமணம்.

பட்டிவீரன்பட்டிக்குதெற்கே சின்னக்காளன் பட்டியிலிருக்கும் கவுண்டர்வகுப்புமைச்சேர்ந்த திருகவுண்டையா அவர்களுக்கு 10-6-31ல் திரு. கூ. சு. நா. பெரியதம்பிநாடார் அவர்களால் சீர்திருத்தசுயமரியாதை கலபபுத்திருமணம் நடத்திவைக்கப்பட்டது. மணமகள் ஆசாரி வகுப்பை சேர்ந்தவர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

தீண்டாமையைப்பற்றி தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,

சரித்திர ஆராய்ச்சி செய்தவர்கள், இந்தத்தீமை ஒழியவேண்டுதல், இதற்கு ஆதாரமாயுள்ளமதமும் ஒழிய வேண்டுமென்பார்கள். இந்து மதத்தோடு சேர்ந்திருப்பது ஜாதி. நமது ஜாதிக்கு நமது மதமே காரணம். மதம் ஒழிந்தால் ஜாதியும் ஒழியும். ஜாதி ஒழிந்தால், சமயமும் ஒழியும். சமயம் ஒழிந்தால், தீண்டாமையும் ஒழியும். இதவே தீண்டாமை வொழியுமார்க்கம். தீண்டாதாரும், மற்ற ஜாதியாரும் மதங்களை வொழிக்கத்தயாராயிருப்பார்களா? "காந்தி"

பாலையம்பட்டி ஸ்ரீ பால சுப்பிரமணிய பிரதம வித்தியாசாலையின் புதிய வகுப்புத் திறப்பு விழா.

பாலையம்பட்டி ஸ்ரீ பாலசுப்ரமணிய பிரதம வித்தியாசாலையில் ஜூன் மாதம் 10 தேதி புதன்கிழமை காலை 9-15 மணிக்குமேல் ஆறாவது வகுப்புத்திறப்பு விழா, இவ்வூர் திரு. மா. கு. சிதம்பரநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் அதிவிமரிசையாக இனிது நடைபெற்றது. முதன்முதல்பள்ளிக்கூடம் சென்றவர்கள் புதியவகுப்பை மிகக்களிப்புடன் திறந்து வைத்தார்கள். அவ்வமயம் நாடார் மகாஜன சமூகத்தவர்களும் மற்றும் இவ்வூரிலுள்ள பலபிரமுகர்களும் வந்திருந்தனர். இப்பள்ளிக் கூடத்தலைமை உபாத்தியாயர் அவர்கள் கல்வியின் பயனையும் நாடார் மகாஜன சங்கத்தார் இப்பள்ளிக்கூடச் சீர்திருத்தத்திற்காகவும் கல்வி அபிருத்திக்காகவும் எடுத்துக்கொண்ட சிரமத்தைப்பற்றியும் மிகப்பாராட்டிப் பேசியபின் அவைதலைவர் முடிவுரைகூற யாவருக்கும் சந்தனம், தாம்பூலம், வழங்கியபின் விழா முடிவடைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

அநேக "கைத்தொழில் விர்ப்பனர் களுக்கு" வேலை இல்லாமல் போய்விட்டது. வேலைகொடுக்கவும் நம்மால் முடியாமல் போய்விட்டது.

உதாரணமாக ஒரு தையல் ஊசியையும், குண்டூசியையும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த நாட்டில் அதை கையினால் 'செய்யத்தெரிந்தவர்கள் எராளமாய் இருக்கின்றார்கள். மேலும் செய்யும்படி ஆயிரக்கணக்கான மக்களைப்பிடித்து வேலை சொல்லிக்கொடுத்து தயார் செய்யமுடியும். ஆனால் நம்மில் ஒருவராவது அதைவாங்கு வோமா? ஒரு சமயம் காந்தி போன்ற ஒருவர் "மகாத்மாவாகி" பலலக்ஷக் கணக்கான ரூபாய்களை செலவு செய்து பிரசாரம் செய்து அதனால் பிழைக்கவேண்டிய பலரை ஏற்படுத்தி மோகம் கிடைக்கும் என்பது போல் "கை ஊசி வாங்கினால் சுயராஜ்யம் கிடைக்கும்" என்று பிரசாரம் செய்தால் இப்போது கதர் வாங்குவதுபோல் சிலராவது வாங்குவார்களா? என்பதும் சந்தேகந்தான். என்றாலும் அதேகமாய் அந்த ஊசிகளை வாங்கமாட்டார்கள் என்றுதான் சொல்லுவேன். என்? வேலை நயமில்லாததாலா என்றால் அதுவல்ல. மற்றென்னவென்றால் அதை வாங்க நமது மக்களுக்கு வீலை சரிப்படாது. ஏனெனில் ஒரு ஊசி செய்ய நமது கைத்தொழில் முறையில் செலவாகும் நேரத்தில் பல ஆயிரம் ஊசிகள் இயந்திரத்தொழில் முறையில் நம் பிக்ஷை உள்ளவரால் செய்யப்பட்டு விடுகின்றது. ஆகவே ஒரு காசுக்கு 12 ஊசி விற்கும் போது ஒரு ஊசிக்கு 12 தம்பிடிகொடுப்பதென்றால்யாரும் சம்மதிக்க முடியவே முடியாது என்பதுதான்.

அதுபோலவே தான் மற்ற விஷயங்களும். ஆகவே கைத்தொழில் பைத்தியத்தை விட்டுவிடவேண்டும். இயந்திரத்தொழில் முறையை ஆதரிக்கவேண்டும்.

அன்றியும் கைத்தொழில் கைத்தொழில் என்பது பொதுஉடைமை தர்மத்திற்கு விரோதமானது என்பதை ஞாபகத்தில் வையுங்கள். முதலாளி தொழிலாளி என்கின்ற பாகுபாடு இருக்கவேண்டும் என்கின்ற மனப்பான்மை யுடையவர்கள்தான் கைத்தொழில் கைத்தொழில் குடிசைத்தொழில் என்று கட்டியழுவார்களே தவிரசமதர்மமும் பொதுஉடைமைதத்துவமும் கோருபவர்கள் கைத்தொழிலை அதாவது இயந்திர உதவி இல்லாமல் செய்யப்படும் தனிப்பட்டவர்கள் தொழிலை, விரும்பமாட்டார்கள். கைத்தொழில் என்பதே வருணாசிரம தர்மத்தின் அடிப்படையாகும். திரு காந்தி அவர்கள் சொல்லுகின்ற வருணச்சிரம தத்துவமே தான் கதர் முதலிய கைதொழில் முறைகள். எபபடியெனில் அவர் மக்கள் பரம்பரை தொழில்களையே (பரம்பரை முறையில்) செய்யவேண்டும் என்கின்ற கருத்துடையவர். ஆகவே தொழிலாளிமகன் தொழிலாளியாகவும் முதலாளிமகன் முதலாளியாகவும் இருப்பதற்காக செய்யப்படும் மறைமுகமான பிரசாரமேதான் இந்த க்கதர், கைத்தொழில். குடிசைத்தொழில் என்பவைகளாகும். சமதர்மமும் பொது உடைமை தத்துவமும் ஏற்படவேண்டுமானால் வருணச்சிரமும் பரம்பரைத்தொழில் முறையும் கைத்தொழில் முறையும், முதலில் ஒழியவேண்டும்.

அன்றியும் கைத்தொழில் செய்வதன் மூலமேதான் அதாவது மக்களுக்கு சரீரத்தில் பாடு பாடும்படியான வேலை கொடுத்து அவர்களை வாட்டி வளவை நிமிர்த்தவதுதான் மக்களுகுஜீவனத்திற்கு வழி ஏற்படுத்தலாம் என்று சொல்லுகின்றவர்கள் கூற்றையும் நான் ஒப்புக்கொள்ளமுடியாது. அந்த முறையையும் நான் ஏற்க முடியாது.

ஏனெனில் அவர்கள் மக்கள் பிறந்ததும் வளர்ந்ததும் இருப்பதும் தொழில் செய்து சரீரப்பிரயாசைப்பட்டு உழைத்து சாப்பிடத்தான் இருக்கின்றார்கள் என்ற கருதும் என்னத்திலேயே மக்களை கீழ்மைப்படுத்தி விட்டார்கள். ஆனால் இத்தப்படி சொல்லிக்கொண்டு இருக்கின்ற மக்களில் சிலர் மாத்திரம் உட்கார்ந்து கொண்டு பாடுபடாமல் ஜீவிக்க என்ற பிறக்து வளர்ந்து வாழ்பவர்களாக க்கருதிக்கொண்டிருக்கிறார்கள். இதை மோசடியான எண்ணமென்றே சொல்லுவேன்.

கஷ்டப்பட்டு சாப்பிடுவதற்கென்றே மனிதன் பிறந்தான் என்று சொல்லுவதாலும் மனித சமூகம் இல்லாமல் போனதே மேலானகாரியமாகும்" "உலகம் வேண்டுமானால்மனித சமூகம் பெருகவேண்டும்" என்று சொல்லுகிறவர்கள் எல்லாம் பெரிதும் மற்ற மக்கள் உழைப்பில் சாப்பிடுகின்றவர்களேயாவார்கள். ஆகவே மக்கள் கஷ்டப்பட்டுதான் ஆகவேண்டும் என்று சொல்லி கஷ்டப்பட மார்க்கம் தேடுவதை விட மக்கள் இல்லாமலே போவதற்கு செய்யப்படும் காரியம் மிகவும் நல்ல காரியமாகும்.

உதாரணமாக இரண்டு மாட்டை காலையில் 3 மணிக்கு செக்கில் பூட்டி மாலை 7 மணி வரைக்கும் ஓட்டி அடித்து அதன் வாலை முறித்து முதுகுத்தோல் பட்டை வாங்கி கழுத்துபூசினிக்காய்போல் வீங்கவைப்பதன் மூலம்தான் அந்த மாடுகள் வாழமுடியும் என்றால் அப்படிப்பட்ட மாடுகளை எல்லாம் கசாப்புக்கடைக்காரன் இடம் ஒப்புவித்துவிட்டு இனி மேல் மாடுகளை யாரும் உற்பத்தி செய்யக்கூடாது என்று சட்டம் போடுவதே மேலான காரியம் என்றுதான் சொல்லுவேன். இந்தமாதிரி நிலையில் ஒரு மாடுகூட பிழைத்திருக்கவேண்டியதில்லை என்பதே எனது அபிப்பிராயம்.

தவிர பொதுஉடைமைத் தத்துவத்திற்கு வெள்ளைக்கார ஆக்ஷியேதான் விரோதமாய் இருக்கின்றது என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. நமது நாட்டில்உள்ள வருணச்சிரம தர்மத்தான் அதுவும் திரு காந்தி சொல்லும் வர்ணச்சிரம தர்மம்தான் பொது உடைமைக்கு விரோதமானதாகும். இந்த வர்ணச்சிரம தர்மம் தான் இந்த நாட்டுக்கு வெள்ளைக்கார ஆக்ஷி முதலிய வெளிநாட்டு முதலாளிகள் ஆக்ஷியை கொண்டுவந்துவிட்டதாகும். இன்னும் அவர்ஆக்ஷியை நடத்திக்கொடுப்பதே—அதைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பதே நமது நாட்டு வர்ணச்சிரம தர்ம முறையேதான் ஆகும்.

முதலாளி, தொழிலாளி என்ற முறையும் வருணச்சிரம தர்ம முறையில்பட்டது என்பதை மறந்துவிடாதீர்கள். அந்த முறையில்தான் இப்போது நமது நாட்டில் மஞ்சள் புரோகிதர்களும், மஞ்சளும் கருப்பும் கலந்த அரசர்களும், ஜமீன்களும் மிராசுகளும், வியாபாரிகளும் இருக்கின்றார்கள் என்பதோடு இவர்களுடைய பத்திரத்திற்கென்றே வெள்ளை முதலாளிகள் வருவிக்கப்பட்டு காப்பாற்றப்படுகின்றார்கள். ஆகவே நமது நாட்டு மேல்சாதி புரோகிதர்களும், அரசர்களும், ஜமீன்களும், முதலாளிகளும் பரம்பரை முறை, முறை-பாத்தியமே பிறப்பு உரிமை என்பவைகள் எல்லாம் அடியோடு ஒழியும் போது நடுத்தப்பிடித்துத் தொங்கிக்கொண்டு—தூக்கில் பலத்தால் இருக்கும்வெள்ளைமுதலாளி ஆக்ஷி கசகசவென்று நசுங்கிவிடும். அதில் சிறிதும் சந்தேகமேஇல்லை. தவிர யந்திரங்களால் மக்களுக்கு வேலை கிடைக்காது என்று சொல்லப்படுகின்றது.

இதுவும் முதலாளி, தொழிலாளி தத்துவ வர்ணச்சிரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதேயாகும். எதற்காக ஒருவனுக்கு சதா தொழில் இருக்கவேண்டும்? புலி, கரடி, சிங்கம், நாய், குரங்கு, பன்றி ஆகிய வைகளுக்கு சதா தொழில் இருந்தும் கொண்டிருக்கின்றனவா? அவை தொழில் செய்துதான் ஜீவிக்கின்றனவா? புரோகிதன், அரசன், ஜமீன், மிராசு, விவசாயி, உத்தியோகஸ்தன் முதலியவர்கள் சதா சரீரத்தால் வேலை செய்து கொண்டு தான் இருக்கின்றார்களா?

மேலும் இவர்கள் எல்லாம் வேலை செய்யாததால் உடல் கெட்டுப் போகின்றதே என்று சரீராப்பியாசம் (Exercise) செய்ய கொண்டிருப்பதை நாம் பார்க்கவில்லையா? ஒரு கூட்டம் சரீரத்தில் சுவேலை இல்லையே என்று சரீராப்பியாசம் செய்பவும் மற்றொரு கூட்டம் ஜீவனத்திற்கு மார்க்கமில்லையே என்று வேலை செய்து கஷ்டப்படவுமாயிருப்பதற்குக் காரணம் வருணாசிரம சமூக வாழ்க்கைமுறைபா? அல்லது யந்திரத்தினால் ஏற்பட்ட கெடுதியா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

நாட்டில் இருக்கின்ற வேலையும் மக்கள் எண்ணிக்கையையும் அவர்களுக்கு வேண்டிய ஆகார முதலிய சாமான்களையும் கணக்குப்போட்டு அந்த சாமான்களை யந்திரங்களால் செய்வதன்மூலம் குறையும் நேரத்தைக் கழித்து மிகுதியுள்ள நேரத்தை எல்லா மக்களுக்கும் பங்கு போட்டு பிரித்துக்கொடுத்து அவர்கள் வாழ்நாள் ஜீவனத்திற்கு வேண்டிய முழுக்கூலியையும் கொடுக்க ஆரம்பித்தால் வேலை சரிபாய்ப் போய்விடுமா? இல்லையா? அதாவது ஒரு வாரத்திற்கு ஒரு மனிதனுக்கு இத்தனை மணி நேரம் மாத்திரம் வேலை செய்தால் போதும் என்கின்ற முறையில் பங்கிட்டுக் கொடுத்து விடவேண்டும். இப்படிச் செயதால் ஒரு வாரத்தில் ஒரு நாள்கூட ஒரு மனிதனுக்கு வேலை செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது. மீதநாட்களில் கஷ்டப்படாமல் சாப்பிடக்கூடும். எது போலவென்றால் தொழிலாளிகளுக்கு நாம் இப்போது தினம் ஒன்றுக்கு 8 மணி, 6 மணி என்று திட்டம்போட்டு சட்டம் செய்கின்றோமல்லவா? இதையே வாரத்திற்கு இத்தனை மணி என்று திட்டம் போட்டுவிட்டால் தீர்ந்ததல்லவா? அதுபோலவும் உபாத்தியாயர்களுக்கு ஒரு வாரத்திற்கு இத்தனை பீரியட் என்று கணக்குப் போடுவதுபோலவும், வாரத்தில் ஒரு மனிதன் இத்தனை மணி நேரம்தான் வேலைசெய்யவேண்டும் என்று திட்டம் போட்டோமேயானால்தொழிலாளிகள் கஷ்டம் தானாகவே நீங்கிவிடும். அப்படிக்கில்லாமல் ஜட்கா வண்டி குதிரை போலவும், செக்குமாடு போலவும் வேலை வாங்கிக்கொண்டு அதன் பலன்களை யெல்லாம் வேலையே சிறிதும் செய்யாத கூட்டமான புரோகிதர், முதலாளி, மிராசுதாரர் ஆகியவர்களே அனுபவித்தால் வேலை எப்படிக்கிடைக்கும்? சரியானகூலி எப்படிக் கிடைக்கும்? என்பதையோசித்துப்பாருங்கள்.

ஆகவே சகோதரர்களே! நமது நாட்டுத் தொழில் விர்த்திக்குக் கதர் இடையூறு என்றும், ஏழைகளுக்கு வயிற்றுப் பிழைப்புக்குக் கதர் பயன்படவில்லை என்றுமதனின் பேரால் விளித்திருக்கும் அதாவது கஜம் 3 அணா பெறுமதியான துணியை 9 அணா போட்டு வாங்குவதில்லை வாங்குகின்றவன் அக்கிரமமாகவும், நிர்பந்தமாகவும் கஷ்டப்படும் கஜத்திற்கு ஆணவிலிருந்து சிறிதுபாகமே தர்மத்திற்கு என்று ஏழைகளுக்குப் பயன்படுகின்றவதன்றும் தருமவேறு, கைத்தொழில்வேறு, பொருளாதார வியாபாரம் வேறு என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், பொது உடைமைத் தத்துவத்திற்கு நமது நாட்டுக் கைத்தொழில் முறையும், புரோகிதன், முதலாளி, ஜமீன்தார் மேல் ஜாதி, கீழ் ஜாதி முறைகளேதான் முக்கிய விரோதிகளேதவிரவெள்ளைக்காரன் ஆட்சியே முக்கியமானதல்லவென்றும், ஆதலால், நீங்கள் இவைகளைக்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

தோ அதுகண்காயாஜியதிட்ட மெ னபதை யுணருங்கள்.

நாற்பதாண்டு வருஷகாலம் காங் கிரஸ் இருந்து வந்தும், லோகமானி யர்கள், லோகநாயகர்கள், மகாத்மாக்கள், தெய்வீக அவதாரசக்தியுடையவர்கள், வீரர்கள், தியாகிகள், என்பவர்கள் காங்கிரசுத்தலைமை வகித்து காங்கிரஸை சூரர்களாய் ஆட்டி வந்தும் இன்னமும் இந்த நாட்டை விட்டு தீண்டாமையும், சண்டாளரும், மோசலோபம் செய்யக்கூடாத ஜீவிகளான மனிதரும் ஒழிந்த பாடில்லை, தொழிலுக்குரிய அறிகுறிகளும் காணப்படவில்லை என்றால் காங்கிரசும் சுயமரியாதை இயக்கமும் ஒன்று என்பதை யோசித்துப் பாருங்கள். அதுபோல வேதபிராமணனும், பூதேவனும், சூத்திரனும், பஞ்சமனும், பகிஷ்கியவானும், நிர்பாக்கியவானும் இந்த நாட்டை விட்டு ஒழிந்தபாடில்லை, ஒழிய மார்க்கங்களும் குறிப்பிடப்படவில்லை என்றால் காங்கிரசும் சுயமரியாதை இயக்கமும் ஒன்று என்று யோசித்துப் பாருங்கள். இந்த நாட்டில் ஏழைமக்கள் கோடிக்கணக்காக கஞ்சிக்குத் திண்டாடிக்கொண்டு படிப்பில்லாமல் துணியில்லாமல், மனிதத்தன்மையில்லாமல், நாயாய், கழுதையாய், பன்றியாய் ஏன் அதைவிடவும் கேவலமாய் நடத்தப்பட்டுவருவதொருபுறமிருக்க, எல்லோரையும் கூட்டிக்கல்லாகவும், முழுமக்கல்லாகவுமாக்கி ஒன்றுக்குள் ஒன்று சிக்க வைத்து அதன் தலைகளில் தேன், பால், மெய, தயிர், பஞ்சாமிர்தம் அபிஷேகங்களை செய்துகொண்டு அவைகளுக்குப் பிண்டு, பிச்சை, லவுப்பாட்டி எறிந்து பட்டை பட்டாடை, வாயரசெப்பு கலசங்களை சாத்தி கட்டை மூட்டிகளை வணங்கி அதன் மீது தூக்கி வைத்து நூற்றுக் கணக்கான மக்கள் சமப்படுவதும், பதினாயிரக்கணக்கான மக்களிழுப்பதையும், இதற்காக இந்த நாட்டில் மாத்திரம் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் பாழாவதையும் பார்த்தும் காங்கிரஸ் என்றாவது கேட்கவில்லை. தப்பக்கம் திரும்பியும்கூட பார்க்கவில்லை என்றால் இனியும் கூட காங்கிரசும் சுயமரியாதை இயக்கமும் ஒன்று என்பதை யோசித்துப் பாருங்கள்.

கனித்து யோசித்து உங்கள் அபிப் பிராயப்படி நடத்தி கொள்வதில் உங்களுக்குப்பூரண உரிமை யுண்டு என்றும் இதுவரை எனக்குப்பட்டதைச் சொன்னேன் என்பதோடு இந்த ஊரில் இப்படி ஒரு சங்கம் ஏற்பட்டு இதனால் வர்த்தகர்கள் ஒற்றுமைப்படவும், மற்றும் வியாபாரிகளும் இதில் கலந்து கொண்டு இருபதுமான காரியம் மிகவும் போற்றத்தக்கதே யாகும்.

தலைவர் அவர்களும் இவ்வளவு தூரம் இதில் பங்கெடுத்து உங்களுக்கு அரிய உபதேசம் செய்தது போற்றத்தக்கதேயாகும்.

இந்த நாட்டின் வாழ்க்கை முதலானது வியாபாரத்தின் மூலம் கூட்டி வாங்குவதின் மூலம், புரோகிதம், குருஸ்தானம், உத்தியோகம் முதலியவைகளின் மூலம் பாடுபடுபவர்களுடைய செல்வமெல்லாம், வருமப்படியெல்லாம் இவரிடமே போய் பெருகவும், இவர்கள் அனைத தங்களுடையதேயென்று பாழாக்கவுமான மாதிரியிலேயே பாழாக்கத்தருந்த வாழ்க்கைத்திட்டமிருந்து வருகிறது. இதைப்பற்றிஎந்தக்காங்கிரசுத்தியும்பிப் பார்க்கவேயில்லை. ஆனால் மேற்றத் தோன்றிய சுயமரியாதை இயக்கம் இம்மாதிரியானதன்மைகளே யெல்லாம் ஒழித்தாக வேண்டுமென்றே சொல்லுகிறது. இத்தகையதைத்தான் விடுதலைமார்க்கம் என்றுசொல்லுகின்றது. காங்கிரசானது, வெள்ளைக்காரன் அனுபவித்துவரும் போகாபோக்கியத்தை இந்த நாட்டுப்பணக்காரனும், படித்தவனும், பார்ப்பனனும், மகாத்மாக்களும், தேசியவாதிகளும் அனுபவிக்க வேண்டுமென்கின்ற ஆசைக்காக 'வெள்ளைக்கார இராஜியம் இந்நாட்டைவிட்டுப் போகவேண்டும்" மென்கின்றது. சுயமரியாதை இயக்கமானது இந்நாட்டு செல்வத்தையும், இன்பத்தையும், இயற்கையளத்தையும் எல்லா மக்களும் சமமாக அனுபவிக்கவும், இந்த நாட்டு சொத்துக்களெல்லாம் எல்லா மக்களுக்கும் பொதுவானதாயிருக்கவும், இந்த நாட்டு மக்களெல்லாம் பிறவியில் உயர்வு-தாழ்வு என்பது சிறிதுமில்லாமல் சகோதரர்கள் போலிருக்கவும், இத்தகாட்டுச்சோம்பேரிகள், சூட்சிக்காரர்கள் பாமர மக்களை சுயமரியாதையற்ற மூடர்களாகவும் மாத்திரம் தான் வெள்ளைக்காரர்கள் ஆட்சி இந்த நாட்டைவிட்டுப் போய்தீரவேண்டுமென்று சொல்லுகிறது. இந்த நாட்டிலுள்ள ஜமீன்தார்களுடைய அதிகாரமும் சிக்க முடியவில்லை. மிராசுதாரர்களுடைய அரசி, கொடுமை ஆகியவைகளை நிர்மூலிக்க முடியவில்லை. பார்ப்பனர்களுடைய ஆதிக்கமானதும் எவ்வாறுதானும் நீங்கக்கூடியதில்லை. இரண்டு ஹோகிலீஷ் எழுத்துகளைத்தெரிந்துவிட்டதனாலேயே படித்தவர்களென்று சொல்லப்படுபவர்களின் பகல் கொள்ளை தாங்கமுடியவில்லை. இவைகளையெல்லாம் அழிப்பதற்கு காங்கிரஸ் என்ன செய்கிறது? இந்தவேலைகளையும் காப்பாற்ற காங்கிரஸ் பாடு படுகின்றதா? இல்லையா? என்பதை உங்கள் மனதைக் கேளுங்கள். உங்கள் அறிவைக்கேளுங்கள். உங்கள் அனுபவத்தைக் கேளுங்கள், உங்கள் சுயநலத்தைக் கேளுங்கள்.

ஆனால் சுயமரியாதை இயக்கமானது இந்த மாதிரியான பிரிவுகளை கூடாதென்பதோடு இதற்கு ஆதாரமாய் இருந்து வருவதான எதுவும் கூடாது. தலைகள் எல்லாம் அடியோடு அழிக்கப்படவேண்டுமென்றல்லவா சொல்லுகின்றது.

சகோதரர்களே! இந்தக் கோவில் களைக் கண்டால், இந்தத்தேர், திருவி ழாக்களைக்கண்டால், இதன் சொத்துக்களைக் கண்டால் உங்களுக்கு வயிறு பற்றி எரிய வில்லையே. அதற்குபதிலாக "ஆனந்த பாஷ்பம்" பெருக்கு கின்றீர்களே! பிள்ளைகுட்டிகளுடன் விழுந்து கும்பிடுகின்றீர்களே! இந்த ஜாலவித்தைக்காரர்கள் உங்களை எவ்வளவு முட்டாள்களாக்கி வைத்திருக் கிறார்களென்பதை இதிலிருந்தாவது சிந்தித்துப்பாருங்கள்.

இந்த மடாதிபதிகள் உங்கள் சொல் வதை கொள்ளைகொண்டுசோம்பேரி களைக்கூட்டிவைத்து 'மதனகோலாக லக்கிரீடை', 'ஜலக்கிரீடை', 'திருஷ்ணலீலை' நடத்துகின்றார்களே! உங்களுக்கு ஆத்திரமில்லையா? அதற்கு பதிலாக விழுந்து கும்பிட்டு கால்கழுவின தண்ணீரைக் குடித்துக் காணிக்கை செலுத்துகின்றீர்களே! உங்களுக்கு மதியில்லை, மானமில்லை என்பதை இப்போதாவது உணருகிறீர்களா?

நான் போக்கிரியாய் இருக்கலாம், காலியாய் இருக்கலாம், கூலியாய் இருக்கலாம். இந்தக் கோவிலும், மடமும் இருப்பதும், இவற்றை நீங்கள் விழுந்து கும்பிட்டுக் கண்ணம் கன்னமாய் போட்டுக்கொள்வதும், அறிவுள்ள, மானமுள்ள மனிதனுடைய செயலா? என்றுதான் கேட்கின்றேன். இவைகளை ஒழிக்க வேண்டாமா? இந்தச் சொத்துக்களை எடுத்துக் கல்விக்கும், அறிவுக்கும், மானத்திற்கும், மனிதத்தன்மைக்கும் செலவழிக்கவேண்டாமா? என்றுதான் கேட்கின்றேன்.

நீங்கள் என்னைப் பார்த்துக் கோபிப்பதிலோ, ஆத்திரப்படுவதிலோ சிறிதும் பயனில்லை. இதனால் நீங்கள் என்னை என்செய்வீர்கள் என்பதிலும் எனக்குக் கவலையில்லை. உங்களை 'வாழவைக்கும்' காங்கிரசு, அதுவும் காராச்சிக் காங்கிரசினை யோக்கியதையைச் சற்று யோசித்துப் பாருங்கள். உங்கள் மானத்திற்கு, மதிக்கும், மனிதத் தன்மைக்கு இந்தக் காராச்சிக் காங்கிரசு என்ன செய்தது, செய்கின்றது, செய்யக்கூடும் என்பதை யோசித்துப்பாருங்கள்.

உங்கள் இத்தனை பேரையும் இந்த நிலைமையிலேயே இருக்கச்செய்யுதானே காங்கிரல்கர்த்தாவாகியமகாத்மா என்பவர் காலையும், மாலையும் "ராம் ராம், சீதாராம்" என்றபஜனை பாடுகிறார், பிரார்த்தனை செய்கின்றார், கீதை படிக்கிறார். அவர்களது சிஷ்யர்களும் சென்றவிடமெல்லாம் புராணப பிரசங்கம செய்கிறார்கள். இது உங்களுக்குப் புரியவில்லையா?

ஆகவே கடவுள் பூஜையிலும், பிரார்த்தனையிலும், நாம பஜனையிலும், புராண காலக்ஷேபத்திலும் இருந்து ராமராஜியம் அடைய வேண்டுமென்கின்றீர்களா? அல்லது இயற்கை யெலலாம் அழித்து, ஒழித்து மனித தர்ம ராஜியம வேண்டுமென்கின்றீர்களா? என்பது நான் இப்போது உங்கள் முன் நிற்கும் கேள்வி. அது வேண்டுமானால்காங்கிரசில்சேருங்கள். இது வேண்டுமானால் சுயமரியாதை யில் சேருங்கள். "இரண்டும் ஒன்று" என்று மாத்திரம் சொல்லாதீர்கள் என்றுதான் சொல்லுகின்றேன். மற்றபடி உங்கள் இஷ்டம் என்று பேசி முடித்தார். பிறகு தலைவர் யாதொரு முடிவுரையும் கூறாமல் இந்த வார்த்தைகளுடன் கூட்டம் கலைந்து விட்டதாகச் கூறினார்.

இப்படிச்சொல்லியும் ஜனங்கள் அப்படியே சில நிமிஷநேரம் மறுபடியும் உட்கார்ந்திருந்தார்கள்.

மறுநாள் காலையில் திரு. முருகப்பா, மரகதவல்லியார் காரைக்குடிக்கும் திரு. ஈ. வெ. இராமசாமி ஈரோட்டிற்கும், திரு. எல். ஸ்ரீராமநாதன் மாயவரத்திற்கும் சென்று விட்டார்கள்.

ஈரோடு சுதேசி ஜவுளி வர்த்தக சங்க ஆண்டு விழா.

ஈரோடு சுதேசிஜவுளிவர்த்தகர்கள் சங்க ஆண்டுவிழா 10-6-31உ காலை 9 மணிக்கு ஈரோடு பார்க் பாலஸ் தியேட்டர் நாடகக் கொட்டகையில் திருச்சங்கோடு பிரபல வியாபாரியும், சுதேசியில் ஜவுளி நூல் எஜண்டுமான உயர்திரு. வி. வி. சி. வி. நடேச முதலியார் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. தலைவர் அவர்களை மோட்டார்காரில் வைத்து பாண்டு மேள வாத்தியங்களுடன் சுமார் 300 பேர்கள் பின் தொடர ஊர்வலமாக பார்க் பாலஸ் தியேட்டருக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

அங்குசென்றவுடன் தலைவருக்கும் திரு. ஈ. வெ. இராமசாமிக்கும் மாலை சூட்டி சுதேசி வர்த்தக சகாத்தாராலும், வர்த்தகப்புவியாபாரிகள் சங்கத்தாராலும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. பிறகு தலைவர் அவர்கள் முகவுரைப் பிரசங்கம் முடிந்தவுடன் சங்க ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது.

பிறகு திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி, மு. சு. முத்துக்கருப்பஞ்செட்டியார், ராஜகோபாலம், ஸ்வாமிநாதன் முதலியவர்கள் சுதேசி என்பதுபற்றியும், கதர் என்பது பற்றியும் பேசினார்கள். பிறகு தலைவர் முடிவுரையானதும் வந்தனோபசாரம் சொல்ல ஆண்டுவிழா இனிது நிறைவேறியது.

பகலில்திரு. பி. வி. நாராயணசாமி செட்டியார் தோப்பில் ஒரு பெரிய விருந்து நடந்தது. அவ்விருந்துக்கு சுமார் 500 பேர்களுக்குமேலாகவே வந்திருந்தார்கள். வடை, வெண்பொங்கல், சர்க்கரைப்பாகுகள் மிக பலமான முறையில் அளிக்கப்பட்டது. மற்றும் ஏழைகளுக்கும் பிச்சைக்காரர்களுக்குமாக சுமார் 400 பேர்கள் வரை சாப்பாடு போடப்பட்டார்கள். மறுநாள் புகைப்படமெடுக்கப்பட்டது.

(10-ம் பக்கத்தொடர்ச்சி)

லும் அது கீதையின் ரகசியமாயும் கடவுள் செயலாயும்தான் இருக்குமேயொழியஒருநாளும்"மகாத்மா" காந்தி செயலாய் இருக்கமுடியாதுஎன்பதுமாத்திரம் உறுதி.

(ஒருஜோசியன்)

ஃஃ ஃஃ

வக்கீல்களை ஆதாரமாகக்கொண்ட இயக்கங்கள் சரியாக நடைபெறமாட்டா. அவர்கள் போக்கு பலனளிக்க முடியாதது ஆதலால் அவர்களை நீக்கி உள்ள இயக்கங்களை நடத்துங்கள்.

(ஜவஹர்லால்.)

ஃஃ ஃஃ

உலகம் எக்கேடு கெட்டாலும் மக்கள் தொகையை பெருக்குவதில்மட்டும் மகமதியர் சளைப்பதில்லை.

(திரு. வி. க.)

ஃஃ ஃஃ

சீரசியல் நிபுணர்கள் என்றும் பொருளாதார நிபுணர்கள் என்றும் சொல்லப்படுபவர்களால் நிர்மாணிக்கப்பட்ட நிர்வாகங்களை நாளைமுதல் ஒழிப்பதன்மூலம் உண்டாக்குகிறது. (திரு. வி. க.)

ஃஃ ஃஃ

காங்கிரசு எந்த ஜாதி மதத்தினர்களுடைய உரிமைகளையும் பாதிக்காமல் இருக்க வேலைசெய்யும் என்பது உறுதி.

(ஜவஹர்லால்.)

ஃஃ ஃஃ

"தமிழ் நாடு" மறியலைப்பற்றி திரு P. வரதராஜுலு நாயுடு.

மறியல் செய்வதையும் கள்ளுக்கடை மறியல் செய்வதையும் நிறுத்திவைக்க வேண்டும்.

ஃஃ ஃஃ

ஏனென்றால் நாமும் ஒருகாலத்தில் "தேசியத் தலைவராகவும் தென்னாட்டுத்திலகராகவும்" இருந்து மறியல் செய்து அனுபவம் பெற்றிருக்கின்றோம்

ஃஃ ஃஃ

நாம் சொல்லும் மேல் கண்ட அபிப்பிராயத்தை அறிவுள்ளவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள்.

ஃஃ ஃஃ

இந்தியாவில் சமயம்போர்சட்டங்கள் செய்து குடியை ஒழிப்பதுதான் சிறந்த வழி.

ஃஃ ஃஃ

மறியல் முறையிலும் அதிலிருந்து மின்னல் போல் தோன்றும் உணர்ச்சியிலும் ஏதோ பயன் உண்டானதாக தோன்றுமே யன்றி மதுவிலக்கு மாத்திரம் ஏற்பட்டுவிடாது.

ஃஃ ஃஃ

மறியல் செய்வதாலேயே குடி நின்றுவிடும் என்று கருதுவதும் தவறாகும்.

ஃஃ ஃஃ

கள்ளுக்கடை மறியலால் வீண் துன்பங்கள்தான் ஏற்படும்.

ஃஃ ஃஃ

கன்மார்க்ப் பிரசாரங்களை தரகியல் போராட்டத்தில் கலப்பதால்பிரயோஜன பட்டுவிடாது.

ஃஃ ஃஃ

குடி நின்றபோதிலுமேயே சுயராஜ்யம் வந்துவிடாது.

ஃஃ ஃஃ

குடி கொஞ்சமாக இருந்த காலத்தில்தான் இந்த நாடு சுதந்திரத்தை இழந்தது.

ஃஃ ஃஃ

டில்லி ஒப்பந்தத்திற்கு பின்னும் மறியலை நடத்தியதின் பயனாக இந்நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் அடிமைகளாகி விட்டது.

ஃஃ ஃஃ

தீர்த்திருத்த சுயமரியாதைத் திருமணம்.

29—5—31-ல் திரு. சின்னையா விற்கும், திருமதி பொன்னழகி அம்மைக்கும் பிராமணீயத்தை அறவே நீக்கி, சுயமரியாதை முறையில் தீர்த்தத் திருமணம் திருக்கோவிலூரில், இலுங்கை உயர்திரு. சொ. ரூம வெங்கிடாசலம் சோவை அவர்களின் தலைமையில் சிறப்புடனும், வெற்றியுடனும் இனிது நடைபெய்தியது. அவ்வமயம் தெரிவிக்கப்பட்டு வைக்கப்பட்டீர் வாசகசாலை அங்கத்தினர்கள் ஏகமனதாய் செய்திருந்தது குறிப்பிடத்தக்கதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

நோக்கமே.

ஆதிதிராவிட வாலிபர் சங்கம்:—

ஷெ சங்கத்தினர்களின் கூட்டமொன்று 1-6-31-ல் மாலை 6 மணிக்கு ஷெயூர் மாரியம்மன் கோவிலில் திருச்சி ஜில்லா ஆதிதிராவிடர் மகாஜன சபையின் தலைவர் திரு. எல். மாரிமுத்து அவர்களின் தலைமையில் கூடி "ஆதிதிராவிடர்களின் முன்னேற்றம்" என்பதைக்குறித்து அநேகர் சொற்பொழிவாற்றியபின் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டமினிது முடிந்ததென ஷெ சங்கசுகாரியதரிசி எழுதுகிறார்.

சென்னிமலை.

சென்னிமலை யுவர் சங்கம்:—

ஷெ சங்கத்தின் கூட்டமொன்று 8-6-31 மாலை 5 மணிக்கு திரு. ஜி. ராஜமன்னர் அவர்களின் தலைமையின் கீழ் கூடி, சங்கத்தின் பொருளாதார அபிவிர்த்திக்காக ஒரு பிரைவ் சீட்டு சங்கத்தின் சார்பாக நடத்துவதற்கு ஒரு கமிட்டியை நியமித்தும், ஞாயிற்று 28ந்தேதி சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவும், யுவர் சங்க வாசகசாலை திறப்பு விழாவும் நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

ஷெ சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவின் வரவேற்புக் கமிட்டியார் 9-6-31 காலை 10 மணிக்குக்கூடி, வரவேற்புக்கமிட்டித் தலைவரையும், காரியதரிசியையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, ஆண்டு நிறைவு விழாவுக்கு வேலை செய்ய சென்னை இந்திய" பத்திரிகையின் துணையர் திரு. ரே எல். கண்ணையர் அவர்களை சென்னைக்கே சென்றழைக்கவேண்டுமெனவும், வாசகசாலை திறப்புவிழாவை நடத்த திரு. ஈ. வெ. இராமசுவாமி அவர்களைக் கேட்டுக்கொள்ளுவதெனவும் தீர்மானிக்கப்பட்டதென ஷெ சங்கத்தின் காரியதரிசி எழுதுகிறார்.

சுயமரியாதை பிரசாரம்.

நாகபட்டணம்

திரு. சொ. முருகப்பா அவர்கள் விஜயம்.

6-6-31-ம் வே 4 மணிக்கு உயர்திரு. சொ. முருகப்பா, ராவ்பகதூர் சாமி சிதம்பரனார் மற்றும் செட்டிநாட்டிலிருந்து வந்திருந்த பலரும் மோட்டார்கார்மூலம் பிறைபாரிலிருந்து நாகபட்டணம் வந்து சேர்ந்தனர். இவரை ஊர் சுயமரியாதைச் சங்கத்தார் தலைவர்கள் மோட்டார்கார் மூலம் பாண்டு வாத்தியங்கள் முழங்க, மீட்டிங்குக்காகக் குறிக்கப்பட்டிருந்த டவுன் போலீஸ் ஸ்டேஷன் மைதானத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்திருந்தது தவிர பெண்களும் அதிகமாக வந்திருந்தனர். கூட்டத்திற்கு திரு. சுப்ரமணியம் அவர்கள் தலைமை வகித்தார். அது சமயம் திருவாளர்கள் சாமி சிதம்பரனார், சொ. முருகப்பா மற்றும் டல்லும் சுயமரியாதை இயக்க சம்மந்தமாக வேண்டதோர் சொற்பொழிவு ஆற்றினர்கள். திரு. முருகப்பா அவர்கள் பேசுகையில் மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும் தற்போது காட்டில் நடந்துவரும் மூடப்பழக்கவழக்கங்களையும், அதைப் போக்கவேண்டியதின் அவசியத்தைப் பற்றியும் சுமார் 2-30 மணி நேரம் பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் சந்தோஷகரத்துடன் கலைந்தது.

சுயமரியாதைச் சங்கம்:—

8-6-31 மாலை 6 மணிக்கு ஷெ சங்க அங்கத்தினர்களின் பொதுக் கூட்டமொன்று கொடிமரத்து வீட்டில் திரு. கே. துரைசாமி அவர்களின் தலைமையில் கூடி அடுத்த வருடத்திய சங்க உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களென ஷெ சங்கத்தின் பொதுக் காரியதரிசி எழுதுகிறார்.

14-6-31 மாலை 6 மணிக்குச் சுயமரியாதைச் சங்கத்தினர்களின் பொதுக்கூட்டம் ஸ்டார் ஆப் இந்தியா கட்டடத்தில் வைபெறுமெனவும், அது சமயம் பல முக்கிய விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கப்படுமெனவும் காரியதரிசி எழுதுகிறார்.

சுயமரியாதைச் சங்கம்:—நாகபட்டணம் தாலூகா சுயமரியாதை மகாநாட்டை ஆகஸ்டு மாதத்தில் இவ்வூரில் நடத்துவதாக முடிவு செய்திருப்பதால் இத்தாலூகாவின் சுற்றுப்புறத்திலிருக்கின்ற சுயமரியாதைச் சங்கத்தார்களும் இதர அபிமானிகளும் தங்களுடைய பூரண ஆதரவை அளிப்பதுடன் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவேண்டுகிறேன் என ஷெ சங்கத்தின் பொதுக்காரியதரிசி எழுதுகிறார்.

பிரங்கு.

சுயமரியாதைத் திருத்தமணம்:—

7-6-31ந்தேதி, பிரங்கு இந்திய சங்கக் கட்டிடத்தில் திரு. குருசாமியாருக்கும்—திருமதி காசியம்மாளுக்கும், திரு. சுப்பையன் அவர்களுக்கும்—திருமதி லீலாவதியாருக்கும் சுயமரியாதைத்திருமணக்கள் திரு. பி. சோமசுந்திரம் (பார்-அட்-லா) அவர்களின் தலைமையில் திரு. டி. ஆர். இரத்தினம் அவர்களால் நடத்திவைக்கப்படும். அவ்வமயம் திருவாளர்கள். டாக்டர் எஸ். கே. மேனன், என் இராகவன் (பார்-அட்-லா) குருசிவ் (பார்-அட்-லா) முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பள்ளிருட்டி.

தோட்டக்கச்சேரி:— தென்னாடு ஜில்லா தேவஸ்தானக் கமிட்டித் தலைவராகவும், உபதலைவராகவும் முறையே திருவாளர்கள் லக்ஷ்மி நாராயண செட்டியார் அவர்களும், முத்துக்குமாரசாமி காயுடு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் குறித்து திரு. கோபால் செட்டியார் அவர்கள் பங்காளாவில் உத்தியோகஸ்தர்கள், மிராசுதாரர்கள், வியாபாரிகள் யாவரும் ஒன்றுகூடி அவர்களிருவரையும் மேளவாத்தியங்களுடன் 7-6-31ந் தேதி வரவேற்று, வாழ்த்தகள் பாடி சிற்றுண்டி வழங்கி, புகைப்பட மெடுக்கப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

ரோஜா முத்தையா
ஆய்ச்சி நூலக அறக்கட்டளை

ஒரு காதல் கல்யாணம்.

நன்னிலம் தாலூக்கா திருப்புகலூர் கிராமத்தில் மருத்துவகுல மக்களில்பிரபலதனவந்தரான திருசட்டையப்பபண்டிதர் அவர்கள் குமாரத்திதிருமதி பட்டு அம்மாளுக்கும்திருவிடமருதூர் திருதண்டாயுதபாணி பண்டிதர் குமாரர் திரு முத்துராம் அவர்களுக்கும்சென்ற2-6-31செவ்வாய்க்கிழமை காலை 6மணிக்கு மணவினை நடந்தது. மணமகள் தம் சிறு பிராயமுதல் மணமகனோடு பழகி வந்ததால், அவர்கள் நட்பு பெண் வயதடைந்த பின்னும் காதலாக மாறித் திகழ்ந்தது. பெண்ணின் பெற்றோர்கள் மணமகனுக்குத் தம் பெண்ணைக் கொடுக்க யாது காரணத்தாலோ மறுக்கத் துணிந்தனர்.

இதுகண்ட அப்பெண் பெரும் திகைப்பும், திகிலும் கொண்டு, தம் மனதை முன்னமேயே தாம் மணமகனுக்குத் தந்துவிட்டமையால், தாம் எவ்வாறுயினும் மணமகனோடு வாழ்தல் வேண்டும் என்ற பிடிவாதம் கொண்டு, தம் காதலனை ஓர் நன்னாளில் திருமாங்கல்யத்தோடு தம் வீட்டுக்கு வந்து தைரியமாகத் தனக்கு திருமாங்கல்யதாரணம் செய்ய வேண்டும், திரு முத்துராம் தவர்களும் அவ்வாறே செய்து முடித்தனர்.

மணப்பெண்ணைத் தவித்த மற்றோர்கள் இது கண்டு பெரும் கூக்குரலிட ஆரம்பித்தனர். இது விஷயம் காட்டுத் தீபோல் கிராம முழுதும், சுற்றுப்புறங்களிலும் பரவலாயின. இனி புத்திசாலிகளான தாய் தந்தையர்கள் எவ்வாறு நடப்பார்களோ? அறியோமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

விருதுநகர்.

விருதுநகர் திருவாளர் பெ. கி. சிதம்பர நாடார் அவர்கள் நகரபரிபாலனசபை உபத்தலைவர் பதவியடைந்ததற்கு அமெரிக்கன் சுயமரியாதைச் சங்கத்தார் ஒரு டீபாராட்டி நடாத்தி ஒரு வரவேற்புப்பத்திரமும், ராவ்பகதூர் த. இரத்தினசாமி நாடார் ஞாபகார்த்த புத்தக—வாசகசாலை சங்கத்தார் ஒரு வரவேற்பு உபசாரப்பத்திரமும் 8-6-31ல் வாசித்துக்கொடுத்தார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருச்சி பார்ப்பனர் கொடுமையும், ஆடுகளின் கொலையும்.

திருச்சி தாலூகா அந்தநல்லூர் கிராமத்தில் 30-5-31 சனிக்கிழமை முதல் "கலியுகத்தில் கருடயாகம்" என்றொரு யாகம் நடைபெற்று வருகிறது. யாக ஆரம்ப தினத்தில் வெண்மையான ஓர் வெள்ளாட்டை யாக குண்டத்துக்குமுன் நிறுத்தி சிலபிராமணர்கள் அதன் வாயைச் சத்தமிடா வண்ணம் அழுத்திக்கொள்ள, இன்னும் சிலர் அதன் பீஜத்தை நசுக்கிச் சித்திரவதை செய்து உயிரைப் போக்க, அதன்பின் அம்மாமிசத்தை யாகத்தியில் வாட்டி யாவரும் புசித்தார்கள். இவ்விதமாக ஷடியாகம் ஆறு தினங்கள் வரை நடைபெறுமெனவும், ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு ஆடு இம்மாதிரியே வதை செய்யப்படுமெனவும் கூறப்படுகின்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோலாலம்பூர்.

சிலாங்கூர் மருத்துவர் சங்கம்:— ஷடி சங்கத்தின் முதல் ஆண்டு நிறைவுவிழா 24-5-31 காலை 8-30 மணிக்கு கோலாலம்பூர், நகரமண்டபத்தில் (டவுன் ஹால்) சங்கத்தலைவர் திரு. மே: சா. இராஜசேகரபால் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றதென ஷடிசங்கதத்தின் கௌரவக் காரியதரிசி அறிவிக்கிறார்.

கலப்பு விவாகம்.

உலக அமைதிக்கு புதிய வழி.

சர். ஆர்தர்கீத் பிரசங்கம்.

அபர்டீன் சர்வகலாசாலையில் சர். ஆர்தர்கீத் என்பவர் செய்த பிரசங்கமொன்றில் அவர் கூறியதாவது:—

உலகமுழுதுமுள்ள ஜனங்கள் உலகத்தில் சாசுவதமாகவும் சந்திர சூரியர் உள்ளளவும் அமைதி ஏற்படவேண்டுமெனவிரும்பினால், கருப்புமனிதர்கள், மஞ்சள் நிறமுள்ள மனிதர்கள், கபிலநிற முள்ளவர்கள், வெள்ளையர்கள் முதலிய மானிட சமூகத்தைச்சேர்ந்த சகலரும் ஒருவருக்கொருவர் கலப்பு விவாகம்செய்து கொள்ளவேண்டும் அவர்கள் அவ்விதம் கலப்பு விவாகம் செய்துகொண்டு, புராதனகாலந்தொட்டு பரம்பரையாக வரும் அந்தந்த வகுப்பைச்சேர்ந்த பெருமைகளையும், உயர்ந்த முறைகளையும் எல்லோரும் பகிர்ந்து அனுபவிக்கும்படி செய்யவேண்டும். சமூக அன்பு மானிடர்களுக்கு ஏற்படவேண்டுமானால் உறுதியிருக்கவேண்டிய தவசியம். நமது நாகரீக வாழ்க்கையில் பொறுமைக்கும், ஆத்திரத்திற்கும் இடம் கொடுக்க வேண்டியது அவசியமாயினும், அவைகளை நியாயபுத்தியினால் மீறுதபடி அடக்கி வரவேண்டும். இல்லாவிடில், கலப்பு விவாகத்தினால் சாவதேச சம்பந்தமேற்பட்டாலும், ஒருவருக் கொருவர் விரோதத்தினாலும், போட்டியினாலும் சங்கட மேற்பட்டுக் கொண்டேயிருக்கும். (தமிழ் நாடு)

(7ம் பக்கத் தொடர்ச்சி)

Shakespeare. என்று சொல்வதுண்டு. அதாவது, நமக்கு தெரிந்தகவி கம்பன்-கம்பன்பிள்ளை கம்பனல்லவென்றும், கம்பன் தகப்பன் அனுமதேயன்என்றும் உள்ள பொருள்தான் மேல்கண்ட ஆங்கில வாக்கியத்தின் பொருள். ஆனதால் பிறப்பினால் மட்டும் உயர்வு, தாழ்வு உண்டாக மாட்டாது. உயர்வு, ஒருவனது கல்வியினாலும், சங்கத்தினாலும் உண்டாகக்கூடியது. அப்படிக்கிருக்க உயர்வு எண்பது எங்களுக்கே உரித்தாயசுதந்திரம்(monopoly) என்று கூறிக்கொண்டும் மற்றவர்கள் யாவரும் தாழ்ந்தவர்களென்றும் தங்கள் தெருவில் நடக்கக்கூடாதென்றும், தங்கள்குளம், இணறுகளில் தண்ணீர் எடுக்கக் கூடாதென்றும் வகுத்த பள்ளன் பறயன் என்றஒருவகுப்பினரும், வீட்டின் ஓளாடிவரையில் போகலாம், வீட்டுக்கு உள்ளே போகக்கூடாதென்ற சில வகுப்பினரையும், உள் செல்லலாம், ஆனால் அவர்கள் தங்கள் தாணி, ஜலம், இவைகளைத் தொடக்கூடாதென்றசிலவகுப்பினரையும், தாம் சாப்பிடும் பாதார்த்தத்தையும், அவைகளை சமையல் செய்யும் இடங்களையும் பார்க்கக்கூடாதென்ற சிலவகுப்பினரையும் இவ்வாறு எத்தனை யெத்தனையோ பிறிவுகளையும், வித்தியாசங்களையும் ஏற்படுத்தி அவர்களை பள்ளன், பறையன், தோட்டி, சூத்திரன் என்று பலவித பெயரிட்டு அழைக்கிறார்கள். இந்த வித்தியாசக்கொடுமைகளை ஒழிப்பது நமது மற்றொரு கடமை. நான் இதை விவரித்துக் கூறவில்லை கலைவர்களும் மற்றுமுள்ள உபந்நியாசகர்களும் அதை நம்மவர்கள் மனதிற்பதியும்படி எடுத்து உரைக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

எங்களுடைய அழைப்புக்கிணங்கி உங்களுடைய வேலை தொந்திரவிற்கிடையில் "சுயமரியாதையில்" உண்மை அன்பு கொண்டு இங்குவந்து கூடியுள்ள பிரதி நிதிகள் யாவருக்கும்வரவேற்புக்கழகத்தின் சார்பாக வந்தனத்தை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பிறகு உயர் திரு சொ. முருகப்பா அவர்களை தலைவராகப்பிரேரேபித்ததும் திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமி, மாயவரம் கி. நடராஜன் ஆகியவர்கள் ஆமோதித்ததும் திரு முருகப்பா அவர்கள் தலைமை வகித்துச்செய்த தலைமை உபன்யாசத்தின் சாரமாவது:—

சகோதரிகளே! பெரியோர்களே!!

இந்த நன்னிலம் மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பதில் நான் மிகவும் பெருமையடைகிறேன். இந்தமாதிரி மகாநாடுகளுக்கு தலைமை வகிப்பதில் சிறிதும் கஷ்டமே இல்லை. எனெனில் இந்த ஊரானது சோழ தேசத்து மத்திய பாகமாகவும், கோவில்களும் பிராமண ஆதிக்கமும், சைவ ஆதிக்கமும், பெருத்த பாகமாகவும், இருந்த போதிலும் இந்த பாகங்களுக்கெல்லாம் நான் முன் பல தடவைகளில் சைவசித்தாந்த பிரசாரகனாகவும் ஸ்தலயாத்திரை வாசியாகவும் வந்து போனது தவிர திருப்பணி வேலைகள் சம்மந்தமாகவும் வந்துபோயிருக்கிறபடியால் இந்தப் பக்கத்திய அனுபவமும், நடவடிக்கைகளும் எனக்கு நன்றாய் தெரியும்.

"சோளவளநாடு சோறுடையது" என்று சொல்லப்படுவதற்கு ஏற்றாப்போல் இந்நாடு மிகவும் செழிப்புள்ளதும் செல்வமுள்ளதுமான நாடாதலால் தமிழ் நாட்டில் உள்ள முக்கிய தெய்வங்கள் எல்லாம் இந்நாட்டிலேயே இருக்கும்படியாகவும் பெரிய பெரிய மடங்கள் எல்லாம் இந்நாட்டிலேயே இருக்கும்படியாகவுமாய் ஏற்பட்டு விட்டது. இந்த நாட்டில வந்து புதிதாக ஒருவன் சுயமரியாதை பிரசாரம் செய்வதென்றால்மிகக்கஷ்டமான காரியம்தான். ஆனால் எனக்கு இந்த சாமிகளின் யோக்கியதைகளும் ஸ்தலங்களின் யோக்கியதைகளும்நன்றாய்தெரியும். அவைகளுக்காம் பயப்படவேண்டியதில்லை. அவைகளைப்பற்றிகதைகளும் அவைகளைப்பற்றி பற்றும் பெரியார்கள் சொன்ன செய்திகளும் அவர்கள் பாடின பாடல்களும் எனக்குத்தெரியும்.

ஆகவே நாங்கள் இங்குவந்து கடவுள் உண்டா இல்லையா என்று பேசவரவில்லை. கடவுள் உண்டா இல்லையா என்கின்ற சங்கதி கடவுள் பிரஸ்தாபம் ஏற்பட்ட காலத்திலிருந்தே 5000, 10000 வருஷங்களுக்கு முன்பிருந்தே கடைபெற்றுவரும் விஷயமாகும். ஆனால் நாங்கள் சொல்லுவது இந்த மாதிரியான கடவுள்களால் பயன் என்ன? பூசையும்உற்சவமும் திருகூத்திரமும் செய்து செய்து நாடு கைஇளைத்துப் போயும் நாளதுவரை இந்தக்கடவுள்கள் மக்களுக்கு என்ன செய்தன? இவ்வளவு கஷ்ட காலத்தில் இந்த நாடு இருக்கும் போதுகூட என்ன ஏதாவது ஒரு கடவுள் வந்து உதவக்கூடாது. வெறும் ஆட்களுகெல்லாம் ரிஷபாரூடராய் நினைத்த போதெல்லாம் வந்து காட்சி கொடுத்து முக்திக்கு அழைத்தப்போன கடவுள் இன்று எங்கே போய்விட்டார்? இருந்தும் வரவில்லையா? அல்லது இல்லாமலேயே அமெரிக்கா, ருஷியா, ஜப்பான் ஆகிய இடங்களுக்குப் போய்விட்டனவா? அல்லது "கடவுள் அப்பவும் இல்லை இப்பவும் இல்லை எல்லாம் புரட்டுத்தான்? அல்லது

இந்தப்படி சொல்லுகின்றதை எல்லாம் ஐயர்மார், குருக்கள்மார் பித்தலாட்டந்தானே? என்பதை யோசித்துப்பாருங்கள்.

இந்தக் கடவுள் புராணங்கள் விஷயத்தில்சைவனும்பாப்பானும் நீ பெரியவனா நான்பெரியவனா என்று போட்டிபோட்டார் களே யொழிய காரியத்தில் ஒருவருக்கொருவர் வித்தியாசமில்லை.பார்ப்பான் சொன்னதைசைவன் திருப்பிப்பாடிதானும் பார்ப்பானைபோலேபெரியவன் என்று நிலை நாட்டபபாடுபட்டான். ஆனால் காரியம்பார்ப்பானிடம் சைவனுடையசங்கதி செல்லவில்லை. கடைசியாக யெலலோருமே பாப்பானுக்கு அடிமையாகி விட்டார்கள்.

ஆகையால் சைவம் வேறு, பார்ப்பனீயம் வேறு என்று கருதி சிலர் ஏமாந்து இருக்கிறார்கள். பார்ப்பானைவிட்டுப்பிரிக்கப்பட்ட சைவம் எதாவது இருந்தால் வெளியில் வாட்டும் பார்ப்போம். சைவன் எழுதினபோது மாத்திரம் ஸ்மார்த்தனைக் கண்ணில் கண்டால் உடுத்தின வேஷ்டியுடன் தண்ணீரில் மூழ்கி தோஷம் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லி எழுதிக்கொண்டானே யொழிய இன்றைய சைவம் பூராவும், சைவக் கடவுள்கள் பூராவும் பார்ப்பான் காலடியில்தான் இடக்கின்றன.

ஆகவே சுயமரியாதைக்காரர்களுக்கு சைவனும் பார்ப்பானும் ஒரே மாதிரியே யொழிய இதில் வித்தியாசமில்லை. விவகாரத்திற்கு வந்தால் ஒரு கை பார்க்கத் தயாராய் தான் இருக்கிறோம். காசையும், பணத்தையும், புத்தியையும், நேரத்தையும் சாமி என்றும், சைவமென்றும் பாழாக்கிக்கொண்டு கேட்கவருகின்ற வனே யெல்லாம் நாத்திகன், துவேஷியென்று சொல்லி விரட்டி அடிக்கும் பாச்சா இனிப் பலிக்காது என்று தைரியமாகச் சொல்லுகிறேன்.

"மக்களில் ஜாதியில்லை, வகுப்பு இல்லை, எல்லோரும் ஒன்றுதான். ஒரு தடவை சிவா என்றால் போதும், ஒரு சிட்டிகை சாம்பல் பூசினால் போதும்" என்று சொன்ன சைவர்கள் இன்று தங்களுக்குள்ளாகவே நாலாயிரம் சாதியாகஇக்கொண்டு நீ கிழ், நான் மேல் என்று சொல்லிக்கொண்டு தனக்கே புரியாமல் பிறர் சொல்வதைக்கேட்பதற்கும் வெட்கப்பட்டுக்கொண்டு அலைவது எனக்கு நன்றாகத்தெரியும், எழுதுகிறபோதுமாத்திரம் நன்றாய் வெகுதாராளமாய் எழுதி விட்டான். ஆனால் பாப்பான் அந்தப்படி நடக்க சைவனை விடவில்லை. ஏனெனில்பெரியபுராணத்தில்சுந்திரமூர்த்தி ஸ்வாமி என்கின்ற பக்தர் சாமிக்கு தொண்டு செய்யவந்த தேவடியாள் மீது ஆசைப்பட்டு கல்யாணம் செய்து கொண்டதாகவும், அந்த பெண்ஜாதி இருக்கவே இரண்டாவது பெண்ஜாதியாக நால் போன("தாலி அறுபட்ட") விதவையை கல்யாணம் செய்துகொண்டதாகவும் எழுதிக்கொண்டார்கள். அதுபோலவே வண்ணான், நாவிதன், வேடன் குயவன், பறையன், வேளாளன், நாடார், பார்ப்பான் என்று சொல்லப்பட்ட எல்லாச்சாதியாருக்கும் ஒரே மாதிரி முக்தி கொடுத்ததாகவும் எழுதிக்கொண்டார்கள். பின்னால் காரியத்தில் செய்யதைரியம் இல்லாமல் போய்விட்டது. ஏனென்றால் சைவன் கட்டைவிட பார்ப்பனன் கட்டே நாட்டில் மதிக்கத்தக்கதாகிவிட்டது. அதற்கேசைவனும் பயந்து கட்டுப்பட்டு இப்போது தத்து வார்த்தம் சொல்லவந்து விட்டான். ஆகலால்பார்ப்பனீயத்தை ஒழிப்பது போலவே சைவத்தையும் ஒழிக்க வேண்டியதுதான். புராணம் பாடி இனி மக்களை ஏமாற்றமுடியாது. சுயமரியாதைக்காரர்களாகிய நாம் தான் இனி ஜாதியை யொழிக்கவும் கலப்பு மணம் செய்யவும், விதவைமணம் செய்யவும், தீண்டாமையை யொழிக்கவும் பாடுபடவேண்டும். இதற்கு எதிர்ப்புகள் வந்தால் அவாவர்கள் முன்னால் எழுதி வைத்திருப்பதையே எடுத்துக்காட்டித்திருப்பி அடித்துவிடலாம்.

கலப்புமணம் செய்வதாலேயே ஜாதி சடங்கு முதலியவை பகுதிக்கு மேலாக ஒழிந்து போகும், இதனால் எல்லாம் கடவுள் ஒழிந்து போய் விடமாட்டார். இதனால் எல்லாம் நாத்திகம் ஆய்விடாது என்பதாக பல அரிய விஷயங்களை மேற் கோளாக எடுத்துக்காட்டி பேசினார்.

பிறகு திரு ஈ. வெ. ராமசாமி பேசினார். பிறகு தஞ்சை ஜில்லா ஆதிதிராவிட சபைதலைவர் திருவாளர் நாகை சிவராமசாமிபிள்ளை பேசினார். பிறகு 15 நிமிஷங்கள் இளைப்பாறிவிட்டு இரண்டு மூன்று கனவான்கள் பாடினதற்கு பிறகு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதாவது:—

நிறைவேறிய
தீர்மானங்கள்.

1. தூத்துக்குடி தாலூகா, தஞ்சை ஜில்லா, லால்குடி தாலூகா ஆகிய சயமரியாதை மகாநாடுகளில் செய்த தீர்மானங்களை இம்மகாநாடு ஆதரிக்கின்றது.

பிரரேபித்தவர் ஈ. வெ. இராமசாமி.

ஆமோதித்தவர் கெ எஸ். சுப்ரமணியம்.

2. பழைய புராணக்கதைகளைச்சொல்லுவதைத்தவிர வேறு அறிவை வளர்ச்சிக்கும் விஷயங்களுக்குதவாத சமஸ்கிருதம், ஹிந்தி முதலிய பாஷைகளை நமது மக்கள் படிக்கும்படி செய்வது பார்ப்பனீயத்திற்கு மறைமுகமாக ஆக்கந்தேடுவதாகுமென்று இம்மகாநாடு கருதுவதோடு, தற்கால விஞ்ஞான அறிவை நமது மக்களிடை பரப்பவும், நவீன தொழில் முறைகளை நமது நாட்டில் ஏற்படுத்தவும், மற்ற தேசங்களில் எழும்பியிருக்கும் சீர்திருத்த உணர்ச்சியை நமது மக்களிடை தோற்றுவிக்கவும், உலக பாஷையாக விளங்கிவரும் இங்கிலீஷ் பாஷையையே நமது வாலிபர்கள் கற்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர்,
சாமி சிதம்பரனார்.
ஆமோதித்தவர்,
எஸ். இராமநாதன்.

3. ஆதிதிராவிட சமூகத்தார் தங்களுக்கு அரசியல் சீர்திருத்தத்தில் தனித்தொகுதி வேண்டுமென்று கேட்பதை இம்மகாநாடு ஆதரிக்கிறது.

பிரேரேபித்தவர்,
எம். கஞ்சமலை மூர்த்தி.
ஆதரித்தவர்.
சி. நடராஜன், மாயவரம்.

4. காரைக்குடியில் செட்டிநாடு சுயமரியாதை மகாநாட்டில் தீர்மானம் செய்தது போல் சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு தினசரி பத்திரிகை சீக்கிரம் ஆரம்பிக்கச்செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர்,
டி. கே. இராமசாமி.
ஆமோதித்தவர்,
மரகதவல்லியம்மையார்.

5. இனியாவது நன்நிலம் தாலூகா போர்டார் தமிழ் நாட்டுக்குறிய சித்திரைத்தியத்தைப் புறக்கணிக்காமல் ஆதரிக்கவேண்டுமென்று இந்த மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர்,
ஜி. கண்ணுசாமி, பிள்ளை திருவாரூர். ஆமோதிப்பவர்,
டி. கே. ராமசாமி, பி. எ. பி. எல்.

மதுரை
பிராமணீயமொழிந்த திருமணம்.

மதுரை கீள்மாரட்டு தெருவில் வசிப்பவரும், வியாபாரியுமான திரு சொ. சு. இராமானுஜ நாயுடு அவர்கள் சகோதரர் குமாரர் திரு சொ. சு. இராமசுப்பய்யா நாயுடு அவர்களுக்கும், கோட்டார்டாக்டர் எம்.இ. நாயுடு அவர்கள்குமார்த்திக்கும் மதுரையில் நாளதுதீ 4உ வெகுசிறப்பாக விவாஹம் நடைபெற்றதுவிவாஹத்தில்பிராமணக்குருக்கள் இல்லாது பிராமணரல்லாத குருக்களை வைத்து சகல காரியமும் நடைபெற்றதெனஒரு நிருபர் எழுதுகிறார்.

பென்னடம்.
பார்ப்பனீய மொழித்த திதி.

பென்னடம் சுயமரியாதைச்சங்கபொக்கிஷதாரும் M. R. தாஸ் கைகள் கம்பெனி சொந்தக்காரருமான திரு C. முனிசாமி தனது தகப்பனார் சிரார்த்தத்தின் ஞாபகார்த்தமாக 8-6-31ல் சுயமரியாதை இயக்கப்படி நிறைவேறியதற் காரிகுறியாக குடியரசுக்கு ரூபாய் ஒன்று நன்கொடையாக வந்தனத்துடன் அனுப்பி யிருக்கிறேன். கூடிய சீக்கிரம் இவ்விடம் ஓர் ஆதிதிராவிட மகாநாடு நடாத்த உத்தேசித்திருப்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என சி. முனுசாமி எழுதுகிறார்.

கரிசல்குளம்.
சுயமரியாதைத் திருமணம்.

சாத்தூர் தாலூகா சிவகிரி ஜமீன் லெட்சுமிபுரம் கிராமம் கரிசல்குளம் திரு. கிருஷ்ணத் தேவர் குமாரத்திதிருமதி மீனாக்ஷிக்கும், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா கோடங்கிபட்டி திரு. செல்லிமுத்துத் தேவர் குமாரர் திருவாளர் இராக்கமுத்து அவர்களுக்கும்எவ்விதமூடக்கிரிகைகளும், பார்ப்பனச் சடங்குகளுமின்றி 3-6-31 இரவு 8 மணிக்கு மணமகளினில்லத்தில் சுயமரியாதைமுறைப்படி. தொம்பக்குளம் பஞ்சாயித்து போர்டு தலைவரும், வாலிபர் சமரச சன்மார்க்க சங்கத்தின் அங்கத்தினருமான திருவாளர் பி. குப்புசாமி அவர்களால், திருமணம் நடத்திவைக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்ஜியம் பெறலாம்.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ணறாவிலிருந்து தாகத்தைத்தீர்க்க நல்ல தண்ணீரெடுப்பதையும், மறுக்கும் இந்தியாநாட்டிற்கு பெண்களுக்கு உயிரினும் அரியதாதல் சுதந்திரத்தைக்கூட கொள்ளையடித்துக் கொண்டுள்ள இவ்விந்தியதேசத்துக்கு தேசத்துரோகியாயிருப்பதையும் வரவேற்க வேண்டும். நம் புனித சுயமரியாதைக்கொள்கையை உண்மை சமத்துவக் கொள்கையை ஏடு நிலைமையிலிருந்து உண்மையாய் ஆதரிக்க விரும்பியவர்களும் பின்பற்றுபவர்களும் இக்கண்டனையான கால்கோகபட்டத்தையும், தேசத்துரோகபட்டத்தையும், தைரியத்துடனும், சக்தோஷத்துடனும், பெற்றுக்கொள்வதற்கு அருகராவார்கள். இவ்விஷயத்தில் பின்வாங்குபவர்களும், மூடத்தைக் கண்டிப்பவர்களும், உண்மை சமத்துவக்கொள்கையை உள்ளபடி உணரவில்லை என்று சொல்லுவதுடன் அவர்கள் தேசபக்தி, கடவுள்பக்தி என்னும் சூட்சி நிறைந்த வலையில் ஒரு வரவிலாவது பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் வெளிப்படையாக சொல்லியேதீருவோம். இத்தட்டிலாவது முடிவில் நான் உங்களை கேடிக் கொள்வது யாதெனில் உங்களை உத்தாபடுத்தவும், சக்தோஷப்படுத்தவும், நலங்கருதியாகச் செய்யவும், வெள்ளையர்மீது பழியைப்போட்டு திட்டிய தேசியவாதிகள்வல்லவர்களா? அல்லது உங்கள் முகம் வாடும்படியாகவும், நீங்கள் வெட்கப்படும்படியாகவும், நீங்கள் மனமருக்கப்படும்படியாகவும், உங்களிடத்திலுள்ள ஊழல்களை திடித்துக்கூறும் சமயமாதைக்காரர்கள் நல்லவர்களா? என்பதைப்பற்றி முடிவுகட்டுமுன் உண்மைப்புலவர் திருவள்ளுவர் சொல்லை மேலே எழுதியுள்ள குறளை ஊன்றி பாருங்கள். எதோ நமக்குத்தோன்றியதை அப்படியே தெளிவித்தோமது கடமையை நிறைவேற்றிக்கொண்டோம். குருட்டு பக்தியைக்கை கொள்ளாமல் தெள்ளிய அறிவைக் கொண்டு என் வியாசத்தை ஆராய்ச்சி செய்து ஒரு முடிவுக்கு வரும்படியாக வாசகர்களை பணிவுடன் வேண்டுதல் செய்துகொண்டு இக்கட்டுரையை முடிக்கிறேன், சமயம் வாய்ப்பின் மறுபடியும் சந்திக்கின்றேன்.

— ——

(5ம் பக்கத் தொடர்ச்சி)

புரியாத விஷயங்களைக் கொல்லுதென்பதே அதன் லட்சியம். இதர சாஸ்திரங்களுக்கும் இதற்கும் உள்ள வித்தியாசம் என்ன வென்றால், இதர சாஸ்திரங்கள் கண்ணுக்குத் தெரிந்த விஷயங்களைப்பற்றிச் சொல்லுவது; ஆனால் இந்த சாஸ்திரமானது முழுதும் கண்ணுக்குத் தெரியாதவைகளைப்பற்றியே சொல்லும். இந்த சாஸ்திரத்தைப்பற்றி ஹாப்ஸ் என்பவர், "ஓர் இருண்ட பிரதேசம்" என்று கூறுகிறார். ஜனங்கள் தாங்கள் வசிக்கும் உலகத்தில் கையாளப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு முற்றிலும் முரணாக இருக்கின்ற சட்டதிட்டங்களை இந்த "இருண்ட பிரதேசத்" திலிருப்பவர்களால் கையாளப்படுகின்றன. இந்த அற்புதமான பிரதேசத்தில் வெளிச்சம் இருட்டாக இருக்கிறது; நல்ல அத்தாட்சிகளோடு நிரூபிப்பதெல்லாம் சந்தேகமாகவும் பிழையாகவும் தோன்றுகின்றன; முடியாத காரியங்களெல்லாம் நம்மக்கு முடியதாகத் தோன்றுகின்றன; உண்மையென்பது பிரயோஜனமற்றதாய் விடுகிறது; பகுத்தறிவென்பது மயக்கமாக மாறிவிடுகிறது. மேலே சொன்ன சாஸ்திரம் தான் மதம் என்று சொல்லப்படும். இந்த மதந்தான் மனிதனுடைய பகுத்தறிவுக்குத்தகாத அவமானத்தைக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது.

"ஆல்," "வுஜூல்," "ஒரு வேளை" முதலிய சந்தேகப்பதங்களை அடிக்கடி பிரயோகப்படுத்துவதினால் மூலம் மனிதனுக்கு உண்மையாகத்தோன்றும் பல விஷயங்களையும், பரிசுத்தமான எண்ணங்களையும் குழப்பக்கூடிய மதியினால் இந்த அபத்தமான மதம் என்னும் ஒரு மூடனைக் காப்பாற்றுவதற்காகவே முயல்கிறோம். இந்த அபத்தக்கோர்வையின் உதவியினால் இயற்கை முழுதும் மனிதனுக்குப்புரியாத ஒரு கற்பனை மாற்றமாக இருக்கிறது. கண்ணுக்குத்தெரிகிற உலகிற்குப்பதிலாக கண்ணுக்குத் தெரியாத உலகங்களைப்பற்றிய விசுவாசம் வந்து விடுகிறது. பகுத்தறிவானது கற்பனைக்கு இடங்கொடுக்கும்படி நேர்ந்து விடுகிறது. இக்கற்பனையானது தானே உண்டாக்கிய மதராஜ்யத்தில் நம்மைக்கொண்டுபோய் விட்டுவிடுகிறது.

4. மதம், கடவுள் இல்லாமலே மனிதன் பிறக்கிறான்.

எல்லா மதக்கட்டளைகளும்கடவுள் நம்பிக்கையின் மீதே கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், நம்களுடைய ஐம்புலன்களில் ஒன்றாலும் அறியமுடியாத ஒன்றைப்பற்றி சரியான அபிப்பிராயங்களை மக்கள் அறிந்து கொள்வதற்கு முடியவில்லை. நமது எண்ணங்கள் முழுதும், நமக்குத்தோன்றும் வஸ்துக்களின் பிரதிபிம்பங்களேயாகும். அப்படியிருக்க, வஸ்துவில்லாத ஒன்றைப் பற்றி, அதாவது கடவுளைப்பற்றி வைத்திருக்கும் எண்ணம் எதைக்குறிக்க முடியும்? காரணமில்லாமல் ஒரு காரியம் எப்படியிருக்க முடியாதோ, அதைப்போலவே தானே இந்த எண்ணமும் அர்த்தமற்றதாக இருக்கிறது? மூலப்பிரதி அல்லது மாதிரி இல்லாத ஒன்றைப்பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயமானது மனோராஜ்யத்தைத்தவிர வேறு என்னவாகத்தான் இருக்க முடியும்? உண்மை இவ்வாறிருக்க மதக்காரர்கள் மாத்திரம் கடவுள் எண்ணம் என்பது இயற்கையிலே மனிதரிடத்தில் உண்டாகிறதென்று அதாவது, மனிதனுடைய பிறப்பிலேயே உண்டாகிறதென்று உறுதிகூறுகிறார்கள். ஒவ்வொரு கொள்கையும் ஒரு தீர்ப்பு அல்லது முடிவு என்று சொல்லவேண்டும். தீர்ப்பு அல்லது முடிவு என்பது அநுபவத்தினால் எற்படக்கூடியதாகும். அநுபவம் என்பது, ஐம்புலன்களினுடைய உதவியினாலன்றி வேறு எதனாலும் அடையமுடியாத ஒன்றாகும். ஆகவே இதிலிருந்து என்ன விளங்குகிறதென்றால் மதக்கொள்கைகள் எவைகளைக்கொண்டு மூலாதாரம் ஒன்றுமே இடையாதென்பதும், அவைகள் மனிதனுக்கு எற்படக்கூடிய இயற்கையான எண்ணங்கள் அல்லவே அல்ல வென்பதும் மேற்சொன்ன கர்க்கங்களை உணர்ந்திப்படிப்போருக்கு விளங்காமற் போகாது. (தொடரும்)

பஞ்சமா பாதகங்கள்

எவை?

என் நிகழ்கின்றன?

அவற்றை நிறுத்தச் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 க்கு ஸ்டாம்புக்கு வுளுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

V. S. தித் தர்பார்மிஸ்

இதில் சால மருந்துகளும் கிடைக்கும். கேட்லாக் இலவசம்.

எலி, நாய் முதலிய விஷ ஜந்துக்களினாலுண்டாகும் புண் வீக்கம், கடிப்பு ஊசல், சாம குணமை யும்.

விலை 3 சாஸாக்கு ரூ 2

Dr. P. M.
சங்கரலிங்கம் பிள்ளை,
சோலிங்கபுரம், S. I. R.

இரத்தமே உயிர்.

திருவாதர், ஷண்முகானந்த வைத்தியசாலையின்
இணையற்ற இரத்தவிர்த்தி மருந்து.

சுவர்ண காந்தம்.

வாயம், காந்தம், அப்ரகம், தங்கம், மணிரேம் 5-ம் சேர்ந்தது.

பாண்டு, சோகை, காமாலை, பித்தப்பாண்டு, விஷர் பாண்டு, சூதகபாண்டு, நீர்ப்பாண்டு, பித்தவெட்டை, ஜாரக்கட்டி, சூலைக்கட்டி, குன்மம், பித்தவாயு, மதுமேகம், கூஷயம், காசம், கைவிக்கம், கால்வீக்கம், வயிறுவீக்கம், திருணி, அதிசாரம், உஷ்ணவாயு, சூதகவாயு, முதலிய அசாத்திய நோய்களும் ஆச்சரியப்படும்படி குணமாகி நல்ல இரத்தவிர்த்தியுண்டாகும். உத்தரவாதம்.


1-நே. 20 நாள் மருந்து விலை ரூ 10—8—0 வி. பி. வே.

டாக்டர் கண்ணுசாமி,
சென்னை மாகாண சித்த வைதிய பிரச்சாரம் திருவாரூர்.

N. B:—தனமில்லாவிடில் பணம் வாபீஸ்,

மிகவும் குறைந்த விலை. ஒரே மாதம் மட்டும்.

பாலேஸ் ரோல்ட் கோல்ட் ரிஸ்ட் வாச் நெ. 501.



22 காரட் ரோல்ட் கோல்ட் கோட்டன் டையல் ரில்லெட் கெடியாரம் 5 வருஷ உத்தரவாதம். ஆண், பெண்களணிய அலங்கார பூஷணமாகும். இத்துடன் (1) கூவின் கண்ணாடி, (2) 14 காரட் நிப் டைய பௌண்டன் பேனா, (3) ரிஸ்ட் ஸ்ட்ராப் செயின் இனாமவிக்கப்படும், விலை ரூபாய் 6—0—0.

பூரணத்தை முன்பணம் அனுப்புவோருக்கு தபால் சார்ஜ் இலவம்.

விலாசம்:—பிராட் பீல்ட் வாட்சு கம்பெனி, பார்க்டவுன், மதராஸ்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

னகராஜன் அவர்களுக்குப் பகுத்தறிவு பெற்றுத் தீரவேண்டிய இந்தியமக்கள் சார்பாகநமது நன்றியறிதல் உறித்தாகுவதாக.

(இப்புத்தகம் குடி அரசு புத்தகாலயத்திலும் கிடைக்கும்.)

சுயராஜ்ய உதயம் அல்லது வறுமையைப் ஒழிக்கும் வழி.

எண்கின்ற பெயரை யுடைய மெசர்ஸ் டி. பி. பி. சாமி அண்டு கோ அவர்களால்பிரசுரிக்கப்பட்டது நமது பார்வைக்கு வந்தது. அதில் திருவாளர்கள் பண்டிதர் ஜவர்லால்நேரு ஜோசாப்ஹர் தேவர் சர்.பி.சி.ரே ஆகிய கனவான்கள் முறையே இங்கு ரண்ஸ் கம்பெனிகள் பாங்கிகள் ஆகியவை மூலம் நமது செல்வம் வெளிநாட்டுக்குச் செல்வதும் கப்பல் வர்த்தகம், கப்பல் தொழில், ஆகியவைகளைப்பற்றியும் இந்தியாவில் பிரிட்டிஷ் வர்த்தக உரிமை சுதேசி இயக்கம் என்பதைப்பற்றியும் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து இதுபுத்தக ரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் வர்த்தக சம்மந்தமான பல அரிய தகவல்கள் காணப்படுகின்றன.

இதன் விலை அணா 0-1-6

கிடைக்குமிடம்;—

T. P. P. சாமி & கோ.,
35-36 அருணாசல ஆச்சாரி வீதி,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

நீதிமஞ்சரி.

அபிராமம் ஜனாப் டி. கே. முகமது யாசீன் அவர்களால் இயற்றப்பட்டு சத்தம் முஸ்லீம் சங்கத்தாரால் பதிப்பிக்கப்பட்ட நீதிமஞ்சரி என்னும் புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் இஸ்லாம் மார்க்க கொள்கைகளை வெகு தெள்ளிதில் நல்ல நவீன மெட்டுகள் கொண்ட பாக்களாய் இயற்றியுள்ளார். சில தேசீயப்பாட்டுகளும் பாடியுள்ளார். இனிய தமிழும் நுண்ணிய கருத்துக்களும் கொண்ட நல்ல புஸ்தகம். இது முஸ்லீம்களுக்கு அதிகஉபயோகமானது.

விலை அணா 6. கிடைக்குமிடம்:
சத்தம் முஸ்லீம் சங்கம்,
அபிராமம், ராமநாதபுரம் ஜில்லா.

சுயமரியாதைச் சமத்துவப் பாடல்கள்.

இதனை ஆக்கியோன் மதுரை திரு முத்துகார்வண்ணனர் அவர்களாகும். தீண்டாமையின் தீமை, கைமைமணம், விடுதலை, சமத்வம், நாட்டின் நிலை முதலியன பற்றி சுயமரியாதைக் கொள்கையே அடிப்படையாகக் கொண்டு நல்ல வர்ணமெட்டுகளால் இயற்றப்பட்ட பல பாடல்கள் அடங்கியுள்ளன. நல்ல தமிழில் படிப்போர் மனதில் நன்கு பதியும்படி பல நீதிவாக்கியங்களும் வெகு தெளிவாய் விளங்கும் வண்ணம் இயற்றப்பட்ட பாடல்களாதலினால் ஆசிரியரின் திறமையையும், உணர்ச்சியையும் நன்கு விளக்குகிறது. சுமார் 60 பக்கங்கள் கொண்டது:

இதன் விலை அணா 2½.

கிடைக்குமிடம்:—
சமத்துவப்பிரசுர நிலையம்,
19ம். தெற்குமாசி வீதி,
மதுரை.

மேலும் குடிகார மகாநாடு என்ற பெயரையுடையதற்றொரு புத்தகமும் திரு முத்துகார் வண்ணனர் அவர்களாலேயே இயற்றப்பட்டு, அதே நிலையத்தாரால் பிரசுரிக்கப்பட்ட 2-வது வெளியிடாகும். இஃது பல கற்பனைக் கட்டுரைகளால் குடியின் தீமை, அதை விலக்கவேண்டிய அவசியம் பொருளாதார நிலைமை முதலியவற்றைபற்றி எழுதப்பட்டிருக்கின்றன.

விலை அணா 2½

சமத்துவப்பிரசுர நிலையம்,
195. மேற்குமாசி வீதி,
மதுரை.

நகர தூதன்.

திருச்சியின்றும் மனைவை திரு. ஆர். திருமலைசாமி அவர்களால் இயற்றப்பட்டு வெளியாகி பல இடையூறுகளால் சிறிது காலம் நின்றிருந்த "நகர தூதன்" எனும் தமிழ்வாரப் பத்திரிகை மீண்டும் பிரசுரிக்கப்பட்டு அதன் முதல் இதழும் வரப்பெற்றோம்.

தனிப்பிரதி விலை காலணா.

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உரையூர், திருச்சி.

கிராம முன்னேற்றம்.

செங்கற்பட்டை யடுத்த உழலூரினின்றும் திரு. ஏ. சம்மந்த முதலியார் அவர்களால் இயற்றப்பட்ட "கிராமமுன்னேற்றம்" என்ற தமிழ்மாத சஞ்சிகையொன்று வரப்பெற்றோம். இதில் விவசாயம், பொருளாதாரம், கிராமாந்திர வைத்தியவசதி, கிராம கல்வி, போக்குவரவுசாதனங்கள் முதலியன பற்றிய பல அரிய கட்டுரைகள் காணப்படுவதோடு, இதன் பெயருக்கேற்ப, கிராம முன்னேற்றத்திற்குறிய பல அம்சங்களும், தேவைகளும் விளக்கப்பட்டிருப்பதோடு, விவசாய விருத்தியைப் பற்றி மிகுதியும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. விவசாயமே தங்களது தொழிலாகவும் ஜீவியமாகவும் கொண்ட கிராம வாசிகளுக்கு மிகவும் பயன் தாக்கூடியதாகையால் சகலரும் இதை உபயோகித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

வருட சந்தா ரூ. 2.

விலாசம்:—
மானேஜர்,
கிராம முன்னேற்றம்,
உழலூர். P. V. களத்தூர் P. O.
ஓட்டிவாக்கம் S. I. R.

ஆண் பெண் தர்க்கம்.

ஆண்பாடினது.

கைப்பிடி நாயகன் தூங்கையிலே அவன் கையை யெடுத்தப் புறந்தன்னில் அசையாமல் முன்வைத்தல் வளவில் ஒப்புடன் சென்று துயில் தீத்துப்பின் வந்துறங்குவளை எப்படியானபடவேன் இறையாகச்சியே கம்பனே

பட்டினத்தார்:

பெண்பாடினது

செப்புச்சிலைபோல் மனவிசய வீட்டினில் வைத்து, மைப் படுங்கண்ணியா மாயவலையில் மயங்கி, கற்புத்நியைக கொண்டு நாய் போலலையுந்துணைவனையே எப்படியானம்புவேன் இறைவாகச்சியே கம்பனே.

ஆனந்தம்.

குடி அரசு ஏஜண்டுகள்.

சிதம்பரம்.
எம். கலியாணசுந்திர முதலியார்
கதர்ஸ்டோர் மேலவீதி

சாத்தன் குளம்.
பெரியசாமி நாடார்
ஷாப் வியாபாரம்

பட்டுக்கோட்டை.
கே. சாரங்கபாணி
கொண்டயராயடுபாளையம்

ஸ்ரீவில்லிப்புத்தூர்.
பி. ஞான தேசிகம்

மாயவரம்.
எம். கலியாணசுந்திர முதலியார்
கதர் ஸ்டோர்,

கீழ்கண்ட நகரங்களிலுள்ள ஹிகின்பாதம் புஸ்தகசாலைகளில் குடி அரசு பிரதிகள் கிடைக்கும்.

காட்பாடி.
திருநெல்வேலி.
அரக்கோணம்.
சென்ட்ரல் ஸ்டேஷன்.
மதுரை.
மாயவரம்.
நாகபட்டணம்.
சேலம்.
தஞ்சாவூர்.
டௌரிங்பேட்.
எக்மூர்.
ஜோலார்பேட்டை.
திருச்சி.
போத்தனூர்.
ஈரோடு.

வெளிவந்து விட்டது! வாங்கத்தவராதீர்கள்!!

முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டுமீ த்திற்குள் கடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஓங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்வரு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்பகாப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

(3ம் பக்கத்தொடர்ச்சி)

பனரால் தள்ளப்பட்டுவிட்டன யென்பது சிறிது நினைத்துப்பார்த்தால் யாருக்கும் விளங்கும். பின் வேதமார்க்கத்தில் தங்கிநிற்பதென்ன? வேதமார்க்கப்பிரகாரம் சூத்திரன் பிராமணனுக்கு அடிமையாக இருக்கவேண்டுமென்பதே யாகும். அதை நிலை நிறுத்தத்தான் பார்ப்பனன் வேதமார்க்கத்தையும் சிஷ்டாசாரத்தையும் அனுசரிப்பவர்களே சனாதன இந்துக்களாவார்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். வேதமார்க்கமும்சிஷ்டாசாரமுமில்லாத பார்ப்பனன் எதைச் சேர்ந்தவன் எந்த இந்து என்பதைப்பற்றிக் கேள்வி யில்லைபோலும்!

வேதத்தின் கர்மகாண்டமும் ஞானகாண்டமும் கழுவிவிட்டதை உணர்ந்தப் பார்ப்பனர்கள் கலியுகத்திற்கு பக்தி ஒன்றே போதுமென்று பகவானே சொல்லியிருக்கிறார். அதற்கு அநிகதை காலக்ஷேபமே போதுமென்று அதோடு கீர்த்தனைகளையும் பல பாட்டுகளையும் உண்டுபண்ணி அந்த பக்தர் அனைப்பாடி மோக்ஷமடைந்தார். இந்தப்பாட்டைப்பாடினதால் பகவான்பிரத்தியக்ஷமானார் என்று சொல்லி அநிதா காலக்ஷேபம் செய்யப்புரப்பட்டார்கள். அப்படிசெய்யும் காலக்ஷேபம் கடைசியில் நில்லாஞதெம்பாக்கில்லாமல் பக்தி பூர்த்தியாகாமலும் பரிகாசக்கதைகளில்லாமல்பாகவதாள் பெருமையடையாமலும் போனதையும் அதிலும் பெண்கள் அநிகதை செய்தாலே சோபிதமுண்டாகுமென்பதாகவும் முடிந்தது. அநிகதையின் அல்திவாரமும்போய் ஆளுக்குத்தகும் தபணம் பெறும் தொழிலாகவு மாயிற்று. கலியுகத்திற்கு பகவான் சொன்ன பக்திமார்க்கத்தைப் போதிக்க வரும் பாகவதகோஷ்டிகளின் உடையும் தலைமயிர் முடியும் ஆபரணங்களின் விசித்திரமும் சங்கீத ஏற்பாடுகளும் பக்தியில் கொண்டுபோய் சேர்த்ததா? பாக்கியில்கொண்டுபோய்ச்சேர்த்ததா? என்பதை அணுபோகசாலிகளே ஆலோசித்துப்பார்க்கட்டும். ஆகவே வேதத்தின் மார்க்கங்கள் ஒழிந்து போயிருக்கையில் வேதமார்க்கத்தை அனுஷ்டிப்பவர்களே சனாதன தரும இந்துக்களாவார்களென்று சொல்லுகிறார்கள். இதைச்சொல்லுகிறவர்களோ ஆங்கில சட்டம் படித்து ஆங்கில வக்கீலாகவிருக்கும் பார்ப்பனராவார்கள். இவர்களுடைய சிஷ்டாசாரம் வக்கீல்வேலையுமல்ல, வாங்கின பணத்திற்குக்கோர்ட்டுக்குப் போகாமலிருப்பதுமல்ல. இனி ஸ்மிருதிகளைப் பற்றி கவனிப்போம்.

வேதத்தைப்போலவே ஸ்மிருதிகளும் கொள்ளத்தக்கவைகளாகும். வருணாச்சிரமங்களும், நித்திய கர்மானுஷ்டானங்களும், பார்ப்பனர்கள் கொள்ளத்தக்கதும், தள்ளத்தக்கதுமான ஆச்சார வீதிகளும் சிராத்தாதி கர்மங்களின் விதியும் தானவிடயமும் சொல்லப்பட்டிருப்பதே ஸ்மிருதிகளாகும். இதற்கு தரும சாஸ்திர மென்று பெயர். இவைள் ரிஷிகளால் செய்யப்பட்டது. இவைகளின் பிரமாணங்கள் சுருதிகளுக்குத்தாழ்ந்தவைகள். இந்த ஸ்மிருதிகளும் காலந்தோறும் மாறிக்கொண்டேவரும். ஒவ்வொரு யுகத்திற்கும் ஒவ்வோர் ஸ்மிருதி பிரமாணம். ஜனங்களுக்குள் ஒரு காலத்திலுள்ள நீதி நீதிகள் மாறிப்புதிய நீதியும் சம்பிரதாயங்களும் குடிகொள்ளும் பொழுது ஜனங்களின் ஆசார விபவகாரங்களுக்கு முக்கியபிரமாணமாயுள்ள இத்தஸ்மிருதிகளும் மாறவேண்டிவந்தன. அத்தப்படி கிருதாயுகத்தில் மனுஸ்மிருதியும் திரேதாயுகத்தில் கௌதமஸ்மிருதியும் துவாபரயுகத்தில் சங்கலிகிதஸ்மிருதியும் பிரமாணமாகவிருந்து கலியுகமான இந்தயுகத்திற்கு பராசரஸ்மிருதி பிரமாணமென்கிறார்கள்.

அத்தப்பராசரஸ்மிருதியில் பிராமணர்களின் இலட்சணம் சொல்லப்பட்டிருப்பதையெல்லாம் இங்கு சொல்லுதிடமில்லை. அடிப்படையைமட்டும் சுருக்கிச்சொல்லுகிறேன். பிராமணன் முதலில் வேதத்தைப்பெறவேண்டியது பின் விசாரித்தல் வேண்டியது ஓதிப்பலகாலும் பயிலவேண்டியது அவ்வேத மந்திரங்களைச் ஜெபிக்கவேண்டியது, இன்னொ மாணாக்கருக்கு ஓதுவிக்கவேண்டியது.

முழுதுமாகிய வேதத்தை பிறனொருவனுக்கு ஓதுவித்தலும் அவ்வேதத்தைக்குரு முன்னிலையில் ஓதுதலும் வேள்வி தானே செய்தலும், பிறனொருவனைக் செய்வித்தலும், ஒருவனுக்குத்தான் ஈவதையேற்றலும், ஒருவன் கொடுத்ததானத்தை எற்றுக்கொள்ளுதலும், ஆகிய ஆறும் முதற்பிறந்த வருணிய வேந்தியனுக்கு உரிய கர்மங்களாம். எந்த அந்தணன் வேதத்தைவிட்டு அன்னிய சாஸ்திரத்தை ஓதுகிறானோ அவனைப்பெரியோர்கள் எல்லாக்கருமத்திலும் சூத்திரனைப்போலப் புறக்கணிக்கவேண்டுவது அவனுக்கு வேதமே ஒழிக்கப்படுகின்றது. இப்பொழுது இவ்விலிஷ் பாஷையும் ஷேக்ஸ்பியர் சாஸ்திரமும் படிக்கிறார்கள் என்பது உங்களுக்குத்தெரியும்.

மந்திரத்தையறிந்தவன், அருத்தத்தையறிந்தவன், ஜெபம் செய்தவன், வேள்வி செய்தவன், மாணாக்கனை ஓதுவித்தவன், இப்படிப்பட்ட வேதியன் சுவர்க்கலோகத்தை அடைகின்றான். வேறுபட்டவன் நரகத்தையடைகிறான் என்று பராசரஸ்மிருதி சொல்லியிருக்கிறது. அந்த பராசரஸ்மிருதி பிரகாரம் இப்பொழுதிருக்கும் பார்ப்பனர்களில் எத்தனைபேர்கள் சுவர்க்கத்திற்குப் போவார்கள். எத்தனைபேர்கள் நரகத்திற்கு போவார்கள்? என்பதை நீங்களே சொல்லுங்கள். எனெனில் வேதமார்க்கத்தை அனுஷ்டிப்பவர்கள்தான் சனாதன இந்துக்களென்று பார்ப்பனர்கள் சபை தீர்மானம் பண்ணியிருக்கிறது. வேதமார்க்கமோ பார்ப்பனனிடத்திலில்லை என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். இங்கிலீஷ் அரசாட்சியின் சட்டத்திலேயே ஸ்மிருதிகள் நுழைந்திருக்கையில் சுயராஜ்யச் சட்டத்திலும் ஸ்மிருதிகள் நுழையாமலிருக்காது. அதனால் சனசமூகங்கள் அவைகளைப்பற்றியும் தெரிந்து கொள்ளவேண்டும். பல காலமாக அவைகளின் படிப்பை நம்மவாகள் படிக்காமலிருக்க பலதடைகள் எற்படுத்தினதுபோலவே இப்பொழுதும் செய்யப்பட்டிருக்கிறது. சர். அண்ணாமலை செட்டியார் கலாசாலையே அதற்கு சாட்சியாகவும் விளங்குகிறது.

பராசர ஸ்மிருதியில் பார்ப்பனனுக்கு விதித்தவிதிகளையெல்லாம்தள்ளி சந்தேகமுடைய பாலிய விவாகத்தை மட்டுக்தான் இப்பொழுது வற்புறுத்துகிறார்கள். பராசருடைய தாயார் ருதுவானபின்தான் விவாகமாகிப் பிறந்ததாகக்கதை. ஸ்மார்த்தப்பார்ப்பனர்களுக்கு சங்கராச்சாரிகுரு. அவரும் அவருடைய ஜாதிபான கும்பகோணம்பார்ப்பனர்களும் பெண்கள் ருதுவானபின்னே கலியாணம் செய்யும் இவ்வழக்கம் செய்துவருகிறார்கள். வைணவப் பார்ப்பனர்களின் குருவான ராமானுஜாச்சாரியாரின் மதிப்புக்குரிய சிஷ்யரும் அவர் சந்தேகத்தைதீர்த்தவரும் ராமானுஜியபாஷ்யத்திற்கு உடையவர் சொல்ல உரை எழுதினவருமான கூரத்தாழ்வார் ருதுவான பெண்ணையே விவாகம் செய்துகொண்டார். அவர் வயிற்றில் அபாரபாண்டித்தியமுடைய பண்டிதரான பட்டர் பிறந்தார். இவைகளெல்லாம் சிஷ்டாசாரமாகாதோ? குருவுகொரு வேதமார்க்கமும் சிஷ்யர்களுக்கொரு வேதமார்க்கமும், குருவுக்கொரு சிஷ்டாசாரமும் சிஷ்யர்களுக்கொரு சிஷ்டாசாரமுண்டோ? இதில் சனாதனதருமம் இந்து குருவா? சிஷ்யர்களா?

எப்படியிருந்தாலும் இரண்டுபேர்களும் சனாதன இந்துகளாகவேயிருப்பார்கள். அதைக்கேட்க கடவுளோ அவர் சொன்ன வேதமோ நமக்கதிகாரம் கொடுக்கவில்லை. பார்ப்பனனுக்கு மற்றவர்கள் அடிமை என்னும் வேதத்தையோ சிஷ்டாசாரத்தையோ ஒத்துக்கொள்ளாதவர்கள் சனாதனதரும இந்துக்களாகவிருக்க முடியாததற்கு கடவுளும் அவர் சொன்ன வேதமும் பார்ப்பனனுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது. அதலுலேதான் சமயப்புரட்டும் ஜாதி எமாற்றும் அதற்குத்தகுந்த கடவுளும் ஏழியவேண்டுமென்று சுயமரியாதைச்சங்கம் சொல்லுகிறது. (தொடரும்)

WANTED Candidates for Telegraph & Station Master's Classes. Apply with 2 annas stamp to:—
Imperial Telegraph College, DELHI

இலவசம்!

4 தபாற் செலவுக்காக நான்கு அணா தபால் பில்லை அனுப்புவோருக்கு பண்டிட் எஸ். எஸ். ஆனந்தர் அவர்களால் தயாரித்த "மகாசந்தனு தித்தைலம்" இலவசமாக அனுப்புவதுடன் சுக வழியென்ற புத்தகமும் கேட்டலாக்கும் நன்யாக அனுப்பப்படும்.

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலை வீதி, சென்னை.

அகஸ்தியர் ஆராய்ச்சி

அகஸ்தியர் ஆராய்ச்சி என்னும் புத்தகம் ஒரு தெளிவானதும் மிக்க ஜாக்கிரதையானதுமான ஒரு ஆராய்ச்சி நூலாகும். இது சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலா வல்லவருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களோடுகொண்டு எழுதப்பட்டதாகும். மக்கள் இந்த ஆராய்ச்சி ஒன்றைப்படித்தாலே இந்துமத சமயசம்மந்தமான எல்லாப் புரட்டுகளும், புராணப்புளுகுகளும், தமிழ் இலக்கண இலக்கிய சம்பந்தமான புரட்டுகளும் சங்க சம்மந்தமான புரட்டுகளும், பல பண்டிதர்கள் நூலாசிரியர்கள் ஆகியவர்கள் புரட்டுகளும் வெளியாகிவிடும். திரு. கா. நமச்சிவாய முதலியார் உருவப்படத்துடன் கூடியது.

விலை அணா 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலெக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ... 0—8—0
மனு நீதி மருமம் ... 0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... 0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ... 0—2—0
சோதிடப் புரட்டு. ... 0—2—0
திரு. வெ. ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ... 0—2—0
சுயமரியாதைப் பாடல் ... 0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ... 0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ... 0—4—0
ஞானசூரியன். ... 0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம் 0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ... 0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு) 0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ... 0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ... 0—4—0
*குறள் ... 0—8—0
* இயற்கைமதம் ... 0—8—0
* சிதம்பர ரகசியம் ... 0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை. 0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங் களுக்கு மேல் கொண்டது] ... 0—6—0
* ஆராய்ச்சி அணிகலம் 0—12—0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ... 2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி, ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம் கோட்டார்.
*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ், ஆண்டர்சன் பேட்டை.
*கான்மாபாலிட்டன் இளப் விருதுநகர்.
*A. V. பாலசுப்ரமணியம் 23, எடயதெரு, திருவாரூர்.
பி. சாமுவேல் பிள்ளை, கிரேட்காட்டன் ரோடு, தூத்துக்குடி.
*எஸ். மாசிலாமணி பிள்ளை நியூஸ் ஏஜண்ட், பாலக்கரை திருச்சி.
S. குற்றாலலிங்கம் பிள்ளை நியூஸ் ஏஜண்ட் மீனாக்ஷிபுரம் திருநெல்வேலி.
S. P. கிருஷ்ணசாமி, நாகப்பட்டணம்.
P. பழனியாண்டி-செட்டியார், நாகூர்.
T. சேதுராயபடி சித்திரக்காரத் தெரு, மதுரை.
K. கணபதி, சாக்கோட்டை கும்பகோணம்.
மானேஜர், 'புதுவைமுரசு' புதுச்சேரி.
வி. கண்ணன், சீமை எருடிபோ, காஞ்சிவரம்.
A. S. முருகேசம், பஜார் திண்டுக்கல்.
*T. சுப்பமணியபிள்ளை, 17 பாரிஸ் வெங்கடாஜல அய்யர் தெரு சென்னை.
A. R. M. சுந்தர பாண்டியன் கடைவீதி, அருப்புக்கோட்டை.
G. V. ராமசாமி பெரிய கடைவீதி, கரூர்.
*B. தங்கசாமி, டைலர் பெரிய கடைவீதி, கோயமுத்தூர்.
ஹாஜி முகமது ஷேக் உசேன், 57. சுண்ணாம்புக்காரத்தெரு, காரைக்கால்.
*M. ரத்னம், கிரோசினாயில் டிபோ, செல்லிக்குப்பம்.
K. N. தங்கவேலு, காரியதரிசி சமூகசீர்திருத்த சங்கம் கல்லிடைக்குரிச்சி.
C. S. ஜோசப் 159 வேல்ஸ் ரோடு, பெங்களூர் Cant
S. ராமசாமி செங்குந்தர் தெரு, தாராபுரம்.
முத்துசாமி நாடார் ஹைஸ்கூல், பொள்ளாச்சி.
P. S. ஜீவரத்னம் பிள்ளை, 2. மலாய்வீதி, ஸ்லேவ்ஜலண்டு, கொளம்பு
A. S. பரமசிவம் 34. காரிக் ஹவுஸ் டிபன்சிகா ரோடு ஹேவ்லக் டவுன் கொளம்பு.
எட்வர்ட்பால் திருமலாபுரம்
செல்வராய கவுண்டர் திருப்பத்தூர்
S. அப்பாதுரை மண்டி, ராசிபுரம்.
M. N. M. பாவலர் நியூஸ் ஏஜண்ட், திருப்பாபுலியூர்.

* இந்த புள்ளியுள்ள மனிதர்களிடம் குடி அரசு பதிப்பான புஸ்தகங்களும் கிடைக்கும்.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.
G. R. கணேசர் & Co., 101 Cecil St.
Mhd. Dulfakir & Co., 34, North Bridge Rd.
India Novel depot 73, Serangoon Road.
கோலாலம்பூர்.
Visvanath Book depot, 9, Brickfield Rd.
R. S. Naidu, 86, Ampang St.
O. M. Ali Saiboo & Co, 27, Java Street
The Selanger Stamp Co., Market Street.
S. S. Abdulkadir, South Indian Boookstore, 122, Pitty street, penang.
South Indian Trading Co, Ipoh. Perok F. M. S.
Sorojini Vilas Coffee Club, 85: Paul Street, Seramban N. S.
The Central stores 61, Jalan Ibrahim, Johore Bharu.
C. Kandiah, 85, Sultan street, Klang.
S. G. Sami Agency, 3, Jalan roya, Sungei Pattani Kedah, F. M S.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—

மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

—

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது

உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—

மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: S. குருசாமி B.A.

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—

மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: அ. பொன்னம்பலம்

மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமனாதபுரம் ஜில்லா.

—

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

—

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்.

——

100 வேளை தாம்பர பற்பங்கள் சாப்பிட்டும் தீராத குஷ்ட மெல்லாம் தீர்ந்து குணமாகி விட்டதென்று ஏராளமான நற்சாட்சிகள் வந்துகொண்டிருக்கின்றன.

சித்தாதயெண்ணை

குஷ்டம், குறைநோய், குழிப்புண், கண்டமாலை, விஷ குஷ்டம், நீர் வடிதல், தோல் உரிதல், மூக்கடைப்பு, மூக்குபள்ளம், செம்மேகப் பற்றுகள், தடிப்பு, வீக்கம், சொரி, வெண் குஷ்டம், கருமேக ஊரல், கருங்குஷ்டம், இரத்தி, சூலை, முடக்கு, குன்மம் முதலிய வியாதிகள் கண்டிப் பாய் தீரும். பந்தயம்போட்டு பரீக்ஷிக்கக்கூடியது. இதற்கு மேலானமருந்தே பார்க்கமுடியாது. 1 புட்டி ரூ. 5-8-0 அனுபானம் ரூ. 1-8-0 ஆக ரூ. 7.

விலாசம்:—கே. எஸ். பதி. வைத்தியசாலை பழனி, S I Ry

அநேக பரிசுகளும், தங்க மேடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பேற்று உலகமெங்கும் புகழ்பெற்று விளங்குவதோடு 25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள் முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மேடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

பழநி, சி எம். சாமி.

குருதாம்பர பஸ்மம்

இது சகல வியாதியையும் வேரற நீக்கும் சக்தியுடையது. முக்கியமாய் சூலை, கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம் சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், சபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்க்கவுசை அண்டவாய்வு, ஆனைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம் அழுகி துர்நாற்றமுடையவர்கள், ஆணிப்புண்கள், சிராணி இன்னும் அநேக விதமானகொடிய கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். 100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 25-வேளை ரூ. 12-8-0. எழைகளுக்குப் பாதிவிலை. பிரயுக்களுக்கு ரேட் வேறு.



இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா? மூளைக்கொதிப்பும், பலஹீனமும் நீங்க வேண்டுமா? எமது மன்மத குளிகையை உபயோகியுங்கள்

திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும் ஆயுள் விர்த்தியு மடைந்து உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும பலமும் திரும்பி வரும். நல்ல ஜீரணம், ஏத்தவிர்ததி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி, இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்புவலி உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே உண்மை விளங்கும் 60 குளிகை ரூ. 5, 30 குளிகை ரூ. 3, மாதிரிக்கு கு. 20-ரூ. 2.

குரு அப்ரேக் சேந்தூரம்—நீரழிவுக்குக் கைகண்டது புட்டி 1-க்கு ரூ. 15.

பிரமேக நிவாரணி:—பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், குத்துதல் நிர்க்கும் புட்டி 1-க்கு ரூ. 2.

குறிப்பு:— பினாங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசிகள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்து முன் பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற அவிழ்தங்களையும் கியாட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டதேருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.